REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 3 வெள்ளிக்கிழமை

# தினகரன்


THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 105 | Friday 03, May, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு 05 பில். அமெ. டொலராக அதிகரிப்பு

**2023 உடன் ஒப்பிடுகையில் 9.8 வீத வளர்ச்சி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு 05 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

06




## தெற்கு, வடமேல் மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நேற்று நியமனம்





தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நியமனங்களை வழங்கினார்.

தென் மாகாணத்தின் புதிய ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நசீர் அஹமட் ஆகியோர் நேற்று (02) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இதில் பங்கேற்றிருந்தார்.

## சமையல் எரிவாயு விலைகள் குறைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமையல் எரிவாயுவின் விலைகளைக் குறைப்பதற்கு லிற்றோ கேஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது. இன்றைய தினம் அதன் புதிய விலைகளை அறிவிக்க முடியும் என, நிறுவனத்தின் தலைவர் உதித்த பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

எவ்வாறாயினும் 12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலையை 4,000 ரூபாவை விட, குறைந்த விலைக்கு வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது இச்சமையல் எரிவாயு சிலிண்டர்

06

# வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியால் ரூ.33,710 கோடி வருமானம் அதிகரிப்பு

## ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவிப்பு

### 2023 மார்ச் மாதத்தோடு ஒப்பிடுகையில் 4.79 வீத அதிகரிப்பென்றும் சுட்டிக்காட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக, ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதால், கடந்த மார்ச் மாதத்தில் 33,710 கோடி ரூபாவை (1,138.9 அமெரிக்க டொலர்கள்) வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானமாக பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாகவும் அச்சபை தெரிவித்துள்ளது.

இத்தொகை, கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கைக்கு கிடைத்த வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானத்தோடு ஒப்பிடுகையில், நூற்றுக்கு 9.77 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் இந்த வருடத்தின் மார்ச் மாதத்தின் ஏற்றுமதி செயற்பாடுகள் பெப்ரவரி மாதத்தோடு ஒப்பிடுகையில், நூற்றுக்கு 7.51 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.


அதேவேளை, இவ்வருடத்தின் மார்ச் மாதத்துக்கான சேவை ஏற்றுமதியின் பெறுமதி 275.1 மில்லியன் அமெரிக்க டொலரென்றும், கடந்த வருடத்தின் இக்காலகட்டத்தோடு ஒப்பிடுகையில், அது நூற்றுக்கு 8.39 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் முழு வர்த்தக பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி உள்ளிட்ட முழுமையான ஏற்றுமதி வருமானம் 4.1 பில்லியன் டொலராக பதிவாகியுள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களான ஆடைகள், தேயிலை, இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திப்

06

## 2023 GCE A/L பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியீடு



க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் வெளியிடப்படும் என, பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2023 க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 3,46,976 பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் 2,81,445 மாணவர்கள் பாடசாலை ரீதியாகவும், 65,531 பேர் தனிப்பட்ட ரீதியிலும் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இம்மாதம் 06 முதல் 15 வரை நடைபெறவுள்ளது.

06


## 05 சட்டத்தரணிகளுக்கு 'சிரேஷ்ட அறிவுறுத்தல்' சட்டத்தரணி பதவி



நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக ஐந்து சிரேஷ்ட சட்டத்தரணிகள் 'சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணிகளாக (Senior Instructing AttorneysatLaw) நியமிக்கப்பட்டுள்ளனர்.

06

## எல்ல பகுதியில் எந்நேரத்திலும் பாரிய மண்சரிவுகள் ஏற்படலாம்



பதுளை – எல்ல – கரந்தகொல்ல பகுதியில் எந்நேரத்திலும் பாரிய மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, எல்ல கரந்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள

06

## கிழக்கு ஆளுநர் - எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு



சுற்றுச் சூழல் தொடர்பான ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேயின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிமான்ஸு கிளாடி ஆகியோர் (01) கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடினர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான

06

## ஜப்பான் வெளிநாட்டமைச்சர் நாளை கொழும்பு வருகிறார்

**கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பிலும் பங்கேற்பு**

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா, நாளை (04) உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகிறார். இரு நாள் விஜயமாக வரும் இவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்திக்க உள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர், வெளிநாட்டலுவல்கள்

06

## மகாவலி காணிகளில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமில்லை

**இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே**



மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாதென, பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார். மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு உறுமய வேலைத் திட்டத்திற்கு இணைந்த வகையில் தீர்வு

06

## பிரபல பின்னணிப் பாடகி உமா ரமணன் காலமானார்




பிரபல பின்னணிப் பாடகி உமா ரமணன் உடல்நலக் குறைவால் தமது 69ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

பிரபல பாடகி உமாரமணன், சென்னை அடையாறில் அவரது கண

06

## புங்குடுதீவு குழியிலிருந்து பெண்ணின் சடலமே மீட்பு

**முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டதாக தெரிவிப்பு**



**யாழ். விசேட நிருபர்**

யாழ். புங்குடுதீவு மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலம் பெண்ணுடையது எனவும், சடலத்துடன் வாய்க்கரிசி போட்டமைக்கக்கான அடையாளங்கள் மற்றும் நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார்

06

## அரிய வகை அம்பரை ரூபா 01 பில்லியனுக்கு விற்க முயற்சி

**அஹுங்கல்ல பகுதியில் ஒருவர் கைது**



திமிங்கிலங்களிலிருந்து பெறப்படும் அரிய வகை அம்பரை சட்டவிரோதமாக விற்க முயன்றவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்த அரிய வகை அம்பரை குறித்த இந்நபர், ஒரு பில்லியன் ரூபாவுக்கு விற்க

06

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை இம்மாதம் ஆரம்பம்

**நிலத் தொடர்பு பற்றிய 02 ஆம் கட்ட பேச்சு விரைவில்**



காங்கேசன்துறை, நாகப்பட்டினமிடையிலான கப்பல் சேவை, இம்மாதம் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மட்டக்களப்புக்குச் சென்ற சந்தோஷ் ஜா, நேற்று வியாழக்கிழமை (02) மட்டக்களப்பு காந்திபூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து

06

# நகர்வலம்



# கம்பஹா மாவட்டத்தில் ரூ. 2,528.87 மில்லியனில் 2,254 அபிவிருத்திகள்

## ஜுலை 31 க்கு முன் திட்டங்களை பூர்த்தி செய்ய



### அமைச்சர் பிரசன்ன அறிவுறுத்தல்

கம்பஹா மாவட்டத்தில் 2,254 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2,528.87 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. இத்திட்டங்களை ஜூலை (31) க்கு முன்னர் நிறைவு செய்யுமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

2024 அபிவிருத்தி திட்டங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன. கம்பஹா மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ், 890 திட்டங்களுக்கு 594.8 மில்லியன் ரூபாவும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின்

கீழான 119 திட்டங்களுக்கு 127.5 மில்லியன் ரூபாவும் சௌபாக்கிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் உள்ள 03 திட்டங்களுக்கு 6.38 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் 02 திட்டங்களுக்கு 0.11 மில்லியன் ரூபாவும் 05 விசேட திட்டங்களுக்கு 17.58 மில்லியன் ரூபாவும் மேல் மாகாண சபை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1173 திட்டங்களுக்கு 989.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

'யுக்திய' நடவடிக்கையின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் கடத்தல்காரர்களை கைது செய்வது மிகவும் உகந்த மட்டத்தில் உள்ளதாக பொலிஸாரும் பாதுகாப்பு தரப்பினரும் இங்கு குறிப்பிட்டுள்ளனர். அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதன்போது அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

# ஹாஷிம் உமர் டுபாய் பயணம்



ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள கற்றல் கல்வி மேலாண்மை மையம் நடத்தும் கற்றல் கல்வியின் கலைப் பண்பாட்டு திருவிழாவும் பட்டமளிப்பு விழாவும் இம்மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 03 மணிக்கு மேற்படி மையத்தின் ஸ்தாபகர் முனைவர் மு.ரா. ரோகினி தலைமையில் நடைபெறும்.

டுபாய் Bits Pilani உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், சிறப்பு அதிதிகளாக இனிய நந்தவனம் மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், டுபாய் தொழிலதிபர் அப்துல் வாஜித் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக ஹாஷிம் உமர் தலைமையிலான குழுவினர் இன்று (03) டுபாய் பயணமாகின்றனர்.

# 'தமிழ் விதை' முன்பள்ளி பாட நூல் வெளியீடு



Future Leader's முன் பள்ளியில் தமிழ் மொழி மாணவர்களுக்காக 'தமிழ் விதை' பாட நூல், முதன் முதலாக பாடசாலை அதிபர் லைலா அக்ஷியாவினால், கடந்த (30) செவ்வாய்க்கிழமை, ஹொரேதுடுவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது, வித்தியாலய அதிபர் எஸ்.எச். முத்தலிப் கரங்களால், மாணவர்களில் சிலர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இச்சிறப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில், முன்பள்ளி அதிபர் லைலா அக்ஷியா, துணையாசிரியர் நஸ்ரா பானு உள்ளிட்ட பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

குறித்த நூல், தரம் ஒன்றுக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில், தமிழ் மொழியைப் அடிப்படையாகவும் இலகுவாகவும் கற்கும் வகையில், சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹாபிஸ் நஸீருக்கு வாழ்த்து; லக்ஷ்மன் யாப்பாக்கு நன்றி

**(புத்தளம் தினகரன் நிருபர் )**



புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும், வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டமை தனக்கு மகிழ்ச்சியை தருவதாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தென் மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அவருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றினையும் பாராளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ளார்.

இன மத பேதமின்றி, புத்தளம் மாவட்ட மக்களுக்காகவும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களோடும் இணைந்து செயல்பட்டமைக்காகவும் நன்றியை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்துள்ளார்.

# சீமெந்தின் விலை 50 ரூபாவால் குறைப்பு; மே 01 முதல் நடைமுறைக்கு

## புதிய விலை 2400 ரூபா

**லோரன்ஸ் செல்வநாயகம்**




மே முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சீமெந்தின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய சீமெந்து நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் 50 கிலோ கிராம் எடை கொண்ட சீமெந்து மூடை ஒன்றின் சில்லறை விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் புதிய விலை 2400 ரூபா என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீமெந்தின் உற்பத்தி விலை குறைவடைந்துள்ள நிலையில் அதன் பிரதிபலனை நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் தேசிய நிர்மாணக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு பங்களிப்பு செய்யும் வகையிலும் இந்த விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சீமெந்து நிறுவனம் தெரிவித்துள்ளது.



கல்விச்சுற்றுலா மேற்கொண்டு அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த மாவனல்லை ஸாஹிரா அஹதிய்யா பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின் லேக்ஹவுஸ் முன்றலில் குழுவாக எடுத்துக்கொண்ட படம்.

படம் : சுதத் நிசாந்த

# நாச்சியாதீவு மு.ம வித்தியாலயத்தில் சா/த பெறுபேற்றினை அதிகரிக்க திட்டம்

## கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கல்வி வலயப் பிரிவின் கீழுள்ள அ/ நாச்சியாதீவு மு . ம. வித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி இம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் Serendip நிறுவனம் கடந்த ஒரு வருட காலமாக க.பொ.த (சாதாரண) தர மாணவர்களின் பெறுபேற்றினை அதிகரிக்கும் நோக்கில் விசேட வேலைத் திட்டத்தினை மேற் கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் அண்மையில் நடைபெற்ற முன்னோடிப் பரீட்சையில் அதி கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் மூன்று மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வு பாடசாலை அதிபர் ரொஹான் ஆப்தீன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த (29) இடம் பெற்றது.



நிகழ்வில் Serendip நிறுவனத்தின் அ/ நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கான இணைப்பாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான டாக்டர் எம்.எச்.எம்.ரம்ஸான் பிரதம அதிதியாகவும், விசேட அதிதிகளாக நாச்சியாதீவு பள்ளி பரிபாலன சபை தலைவர் தேசமான்ய ஏ.ஆர்.எம். தாரிக் மற்றும் Serendip நிறுவன எம்.எச்.எம்.சுபுஹான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு முன்னோடிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு Serendip Education Foundation இனால் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கணித ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அகில இலங்கை கணித ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு (CAT ii) இல் தேசிய மட்ட போட்டியில் கலாவெவ மத்திய கல்லூரியில் தரம் 08 ல் கல்வி பயிலும் முகம்மட் றிஸ்வான் சீனத் பத்தீனா வெற்றிபெற்றுள்ளார். இவர் ஆசிரியர் மொஹமட் றிஸ்வான் மற்றும் ஆசிரியை பதுர்தீன் பஸ்லினா ஆகியோரின் புதல்வியாவர்.

# குடும்ப பெண்ணுக்கு சிறுநீரகம் தேவை

பேருவளை சீனன் கோட்டை தர்கா வீதி இலக்கம் 84/1 ஏ முகவரியில் வசிக்கும் எஸ்.எஸ்.யு. ஹலீமா சிறுநீரக நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்.

இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ள இவருக்கு வாரத்திற்கும் மூன்று முறை இரத்த மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந் நிலையில் இவரை பரிசோதனை மேற்கொண்ட கொழும்பு லங்கா தனியார் வைத்திய சாலை விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஸுர்ஜித் சோமையா இவருக்கு மிக அவசரமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்துள்ளார்.

42 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரான இப் பெண்ணுக்கு 0+ சிறுநீரகம் ஒன்று அவசரமாக தேவைப்படுகிறது. எனவே இவரின் உயிரை பாதுகாக்கும் நோக்கில் சிறுநீரகம் தானம் செய்ய விரும்புபவர்கள் 075 5662032 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவரது கணவர் கேட்டுள்ளார்.

# எகொடபிட்டிய பகுதியில் 3 மாத யானைக்குட்டி உயிரிழப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் கருவலகஸ்வெவ எகொடபிட்டிய பகுதியில் 3 மாத யானைக் குட்டியொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த யானைக் குட்டியை பெரிய யானைகள் காலால் மிதித்து கொன்று இருக்கலாமென சந்தேகிப்பதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த யானைக் குட்டியை குழிதோண்டி புதைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.



# கஞ்சா பக்கட் வைத்திருந்த பாடசாலை மாணவன் கைது

## தம்புத்தேகம பகுதியில் சம்பவம்; பொலிஸார் விசாரணை

**திறப்பனை தினகரன் நிருபர்**

கஞ்சா பக்கட் ஒன்றை தம் வசம் வைத்திருந்ததாக கூறப்படும் பாடசாலை மாணவன் ஒருவன் தம்புத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் கூட இருந்ததாக கூறப்படும் மேலும் இரண்டு இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவன் தம்புத்தேகம பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவனும் இம்முறை க.பொ.த ( சாதாரண ) தர பரீட்சைக்கு தோற்றவுள்ளவர் எனவும் தெரிய வந்துள்ளது. இவருடன் இருந்த 19,21 வயதுடைய இரண்டு இளைஞர்களையும் கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதோடு, இவர்களின் காற்சட்டைக்குள்ளிருந்து மூவரிடமிருந்தும் மூன்று கஞ்சா பக்கட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது பற்றிய மேலதிக விசாரணையில் தம்புத்தேகம பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 3 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 20
ராகுகாலம் : காலை : 10.26 - 11.56 வரை
சுபநேரம் : மாலை : 05.56 - 07.26 வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



தோட்டத் தொழிலாளரின் ரூபா 1,700 சம்பளம்

# மே தினத்தை நனவாக்கும் வகையில் தொழிலாளர்களுக்கு கிடைத்த வெற்றி

## நிதி, இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய

மே தினத்தை நனவாக்கி நாட்டின் உழைக்கும் மக்களுக்கு பல வெற்றிகரமான முடிவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் உழைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இன்னல் மிகுந்த வாழ்க்கை வாழும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பது, 27 இலட்சம் தொழிலாளர்களின் சேமலாப நிதிக்கு வழங்கப்படும் வட்டியை 13% ஆக அதிகரிப்பது போன்றவை அடங்கிய வர்த்தமானி மற்றும் நலன்புரி நிதி பாக்கியை வழங்கும் தீர்மானம் என்பன நாட்டுத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.



மிகவும் சிரமமான வாழ்க்கையை நடத்தும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது.இதனால் இளைஞர்கள் அந்த வேலைகளின் பக்கம் திரும்பாமலிருப்பது பாரதூரமான நிலைமையாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், 2008ஆம் ஆண்டு முதல் 16 வருடங்களாக செலுத்தப்படாத அவர்களின் சேமலாப நிதியை, அரசாங்க செலவில் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான பிரேரணை அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், அவர்களது அரசியலமைப்பு உரிமைகளை பாதுகாக்க முடிந்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் பெரிதும் பேசப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் ஸ்திரத்தன்மையை மேலும் வலுப்படுத்தி, வருடாந்த வட்டி வீதம் 13% ஆக உயர்த்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிடுகிறார். 27 இலட்சம் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் 9% வட்டி வீதத்தை வழங்குவதாக உறுதியளித்ததாகவும், அதனைத் தாண்டி 4% மேலதிக வட்டி வீதத்தை வழங்குவது தொழிலாளர்களை பிரபலப்படுத்துவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநர் நஸீர் அஹமட், நேற்று (02) அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்தார். முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் வடமேல் மாகாண ஆளுநராக நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் மரியாதை நிமித்தம் அவர்,பிரதமரை சந்தித்தார்.

# சகல பாடசாலைகளுக்கும் நாளை முதல் விடுமுறை

## GCE O/L பரீட்சை 06 ஆம் திகதி ஆரம்பம்

அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் 2024ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் இன்றுடன் நிறைவடையவுள்ளது. இதற்கமைவாக பாடசாலைகளின் முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சை (2023) எதிர்வரும் 06 திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 15 வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# உமா ஓயா பல்நோக்கு திட்டம் இதுவரை ரூ. 1,500 மில். மீதம்

உமா ஓயா திட்டத்தால் இதுவரை சுமார் 1,500 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக திட்டப்பணிப்பாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இத்திட்டத்தின் மூலம் மின்சார சபை நாளொன்றுக்கு ரூபா 80 மில்லியனை சேமிக்கும். இத்திட்டம் பரீட்சார்த்தமாக சுமார் ஒருமாத காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த காலப் பகுதியில் உற்பத்திச் செய்யப்பட்ட மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

2007 நவம்பர் 27 கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 2008 ஏப்ரல் (21) ஆரம்பித்து வைக்கப்பட்டது

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆகியோரின் தலைமையில் உமாஓயா திட்டம் கடந்த மாதம் (24) மக்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமிக்ஞை விளக்குச் சந்திகளில் யாசகம் வழங்குவதற்கு தடை

## பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்

கொழும்பு, அதனை அண்டிய பகுதிகளிலுள்ள சமிக்ஞை விளக்கு சந்திகளிலும் அவற்றுக்கு அருகிலும் யாசகம் வழங்குவதை தவிர்க்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போக்குவரத்துத்துறை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்துள்ளார். யாசகர்களுக்கு பணம் கொடுப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.வாகனங்களும் சில சந்தர்ப்பங் களில் சேதமடைகின்றன.இவ்வாறு சமிக்ஞை சந்திகளில் யாசகம் வழங்குவதால் விபத்துக்கள் ஏற்பட்டு யாசகர்களும் காயம் அடைகின்றனர்.

இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு கொழும்பில் யாசகம் கோருபவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக சீருடை மற்றும் சிவில் உடையில் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகன சாரதிகள், மற்றும் யாசகம் வழங்குவதை தவிர்த்தால், யாசகம் கோருபவர்களை, இப்பகுதிகளிலிருு வெளியேற்ற முடியும் என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காணொளிச் செய்திகள் மூலம் இந்த புதிய நடவடிக்கைகள் குறித்து சாரதிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாளாந்தம் ரூபா 02 ஆயிரத்து 500 முதல் 03 ஆயிரம் ரூபா வரை பெறக்கூடிய தொழிலை யாசகம் பெறுபவர்களுக்கு பெற்றுக்கொடுத்தால் அதனை ஏற்பதற்கு அவர்கள் மறுப்பதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

யாசகத்தின் மூலம் நாளாந்தம் ரூபா 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா இவர்களுக்கு வருமானம் கிடைப்பதாலே,ஏனைய தொழில்களைச் செய்வதற்கு இவர்கள் விரும்பாதுள்ளனர்.

# விமான நிலையத்தில் விசா வழங்கும் நிறுவனங்கள் இந்தியாவுடையதல்ல

## இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசா வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிறுவனத்துக்கும் இந்தியாவுக்கும் எந்த தொடர்பும் இல்லையென இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் விசா வழங்கும் நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துவரும் நிறுவனங்கள், இந்தியாவை சேர்ந்தவை அல்ல.

இந்தியாவை தளமாக கொண்டவையும் அல்ல என்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரலாய பேச்சாளர் நேற்று தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் விசா வழங்கும் நடவடிக்கைகளை இந்திய நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதா? என்ற தலைப்பில் ஊடகங்கள் வெளியிட்டுள்ள கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களில் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் விசா வழங்கும் நடவடிக்கைகளை, இந்திய நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதென பதிவுகளும் கருத்துக்களும் வெளியாகியுள்ளதை அவதானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இந்தியாவை சேர்ந்தவையோ அல்லது இந்தியாவை தளமாக கொண்டவையோ இல்லை. அந்த நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் இந்தியாவில் இல்லை. வேறு எங்கோ உள்ளன. இதன் காரணமாக இவ்விடயத்தில் இந்தியாவை குறிப்பிடுவது தேவையற்றதெனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

# கொழும்பு துறைமுக கொள்கலன் செயற்பாடுகள் 48 வீதம் அதிகரிப்பு

## 2024 முதல் காலாண்டில் 5,82,483 கொள்கலன்கள் மீள் ஏற்றுமதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

செங்கடலைச் சுற்றியுள்ள மத்திய வளைகுடா வலய போர்ச் சூழல் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கொள்கலன்கள் கையாளுதல் (ஏற்றி இறக்கும்) செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாகவும் கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது அது 48 வீத அதிகரிப்பு என்றும் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் பிரதான கொள்கலன் செயற்பாட்டாளர்களான துறைமுக அதிகார சபை கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4,41, 032 கொள்கலன்களை ஏற்றி இறக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்த வருடத்தில் அது 6,52, 766 ஆக அதிகரித்துள்ளது. இது 48 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் துறைமுக அதிகார சபை இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 5,82,483 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளதாகவும், கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்துடன் ஒப்பிடுகையில் இது,49. 81 வீதமான அதிகரிப்பு என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேபோன்று முழுமையான கொழும்பு துறைமுகம், இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 1, 729 ,314 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளது. SLPA, CICT, ECT மற்றும் JCT ஆகிய முனையங்களின் மூலமே இந்த செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் 24. 20 வீத அதிகரிப்பாகும் என்றும் துறைமுக அதிகார சபை தெரிவித்தது. துறைமுக அதிகார சபையின் தலைவர் கீன் டீ பேர்னாட் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தற்போது செங்கடலை சுற்றியுள்ள மத்திய வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் யுத்த நிலைமையால், கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் செயற்பாடுகள் குறுகிய காலத்தில் பாரிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மத்திய வளைகுடா வலயத்தில் இயங்கும் சில முக்கிய கப்பல் வலையமைப்புகள் தற்போது யுத்த எச்சரிக்கை வலயங்களாக காணப்படுவதால், செங்கடல் மற்றும் சுயெஸ் கால்வாய் தவிர ஏனைய கப்பல்கள் தமது கொள்கலன் மீள் ஏற்றுமதிக்காக கொழும்பு துறைமுகத்தை தெரிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எந்த ஒரு பூகோள நிலைமைகளையும் எதிர்கொள்ளக் கூடியதாக கொழும்பு துறைமுகம் காணப்படுவதால், நிலைமைகளை முகாமைத்துவம் செய்து சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பண மோசடி குறித்து PHI சங்கம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என தெரிவித்து ஏமாற்றி பிரபல வர்த்தகர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பண மோசடி செய்து வரும் நபர்கள் தொடர்பில், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது குறித்து ஏமாற வேண்டாம் என்றும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என தன்மை அறிமுகப்படுத்திக் கொண்டு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளும் நபர்களுக்கு பணம் வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் வர்த்தகர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நபர்கள் நட்சத்திர ஹோட்டல்களுக்குக் கூட தொலைபேசி அழைப்பை பண மோசடி குறித்து மேற்கொண்டு, வலய பொதுச் சுகாதார பரிசோதகர் போல் தம்மைக் காட்டிக்கொண்டு பணம் அறவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சில தொழிலதிபர்களை ஏமாற்றி பணம் வசூலித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அண்மைக்காலமாக இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் ஏராளமான முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இதனைக் கவனத்திற் கொண்டு அவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் வரும் சந்தர்ப்பத்தில், பணம் வழங்குவதை தவிர்த்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07.11.1959
மறைவு - 01.05.2023



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் திருகோணமலை பத்திரிகை விற்பனை மற்றும் விளம்பர முகவர் அப்துல் சுல்தான் அப்துல் ஹமீத் 01.05.2024 அன்று காலமானார். அன்னாரின் ஜனாஸா அவரது இல்லத்தில் 02.05.2024 வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு ஆண்டன்குளம் ஜும்ஆ பள்ளிவாசல் முஸ்லிம் மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

**விற்பனைப் பிரிவு - லேக்ஹவுஸ்**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.05.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5462 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,561,220.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 1 3 0 7 5 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 037
W (ஆங்கில எழுத்து) — 0 7 5 8 (வெற்றி இலக்கங்கள்)

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3704 — சீட்டிழுப்பு திகதி 2024.05.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,678,608.56
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 18 36 38 57 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02294

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1810 — 2024.05.01 — 35433 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 431,165,186.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 35 41 62 75 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0288
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 9 5 9 2 4 6
L7 எழுத்து L — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,147,524.88

ராசி சுப பலன் — திகதி 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் 771 — செவ்வாய் — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 01 18 41 59 — தனயோக இலக்கம் 06178 — நாளுக்கான விதி எண் 28

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1492 — 2024.05.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,260,437.04
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 05 32 77 81 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11840

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 24

## குறள் தரும் சிந்தனை



தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

# பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி அழைப்பு

ஜனநாயக நாடொன்றில் கட்சி அரசியல் என்பது தனித்துவமதான அம்சங்களில் ஒன்றாகும். நாடு என்று வரும் போது கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி சிந்திப்பதும் செயற்படுவதும் மிகவும் முக்கியமான விடயமாகும். நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்ட ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பும் கடமையும் அதுவாகவே இருக்கும்.

அந்த வகையில் 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டார். அந்தச் சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத நிலைமை ஏற்பட்டிருந்தது. சில அரசியல் தலைவர்கள் தங்கள் கட்சிகளின் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானங்களை மேற்கொண்டனர்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு செயற்படவில்லை. அவர் இந்நாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள பிரதான கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்து நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியே தீர்மானங்களை மேற்கொண்டார்.

குறிப்பாக கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி இருந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தார். அதன் பிரதிபலனாக நாடு குறுகிய காலப்பகுதியில் நம்பிக்கை தரும் வகையில் பொருளாதார முன்னேற்றப் பாதையில் பிரவேசிக்க ஆரம்பித்தது.

இதன் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் குறுகிய காலம் முதல் நீங்கத் தொடங்கின. இதன் விளைவாக நாடு ஒரு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்ததா என வினவும் அளவுக்கு நாட்டில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த முன்னேற்றத்தின் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கை முகம்கொடுத்தது போன்ற பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்த எந்தவொரு நாடும் இலங்கை போன்று மிகவும் குறுகிய காலப் பகுதியில் மீட்சி பெறவில்லை. இது உலகறிந்த உண்மை. பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான சில நாடுகளுக்கு மீட்சி பெற 1015 வருடங்கள் கூட எடுத்துள்ளன. இந்தப் பின்னணியில் உலகின் பல தலைவர்களும் ஜனாதிபதியின் தலைமையை பாராட்டியுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்ற போதிலும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து உறுதிப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. அதன் ஊடாக நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் மற்றும் பாதிப்புக்களில் இருந்து முழுமையாக மீட்சி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மே தின விழாவுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது, 'நாட்டின் பொருளாதார ஸ்திரத்தைப் பாதுகாக்க உடன்படிக்கை செய்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதாக அறிவித்தார்.

உண்மையில் காலத்திற்கு அவசியமான அழைப்பு இது. கட்சி ரீதியாகப் பிரிந்து நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியாது. நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மீட்சி பெற்று இருக்கிறது. அந்த வீழ்ச்சியின் தாக்கங்களும் அழுத்தங்களும் இன்னும் நிலவவே செய்கிறது. இது கட்சி ரீதியாகப் பிரிந்து செயற்படக் கூடிய காலமல்ல. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம். அதுவே நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஸ்திர நிலைக்கும் இன்றியமையாததாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்து இருக்கிறார். நாடு பொருளாதார ரீதியில் பலமாகவும் வலுவாகவும் இருக்கும் போது கட்சி அரசியலுக்கு முன்னுரிமை அளிப்பது பிரச்சினையாக இராது. ஆனால் தற்போதைய நிலை கட்சி அரசியலை விடவும் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டியதாகும். அதனையே ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கிறது என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் நிகழ்ச்சித் திட்டம்

அம்பாறை மாவட்டத்தின் அலிக்கம்ப தேவ கிராமத்தில் வாழும் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயல்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக 'ஐடோவ் இளையோர்' அமைப்பின் உறுப்பினர் அப்தான் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் ஸ்கோப் திட்டத்தின் கீழ் மூவின இளைஞர்கள் முன்வந்து அலிக்கம்ப தேவ கிராம சமூகத்தினரின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் 'ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் குரல்' எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது.

ஏனைய சமூகத்துடன் அவர்களை ஒன்றிணைத்து வாய்ப்புக்கள் மற்றும் வளங்களையும் பெற்று நிலைபேறான நல்லிணக்கத்தினை மக்கள் மத்தியில் உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும் என அப்தான் மேலும் தெரிவித்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய நிறுவனத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் பி. முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருட்த்தந்தை மற்றும் சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். இக்ராம், அம்பாறை மாவட்ட தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், இளையோர் அமைப்பினரும் கலந்து கொண்டனர்.





அம்பாறை மாவட்ட தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோகத்தர் எம். எப்.றிபாஸ் குறிப்பிடுகையில், "எமது அதிகார சபையினால் கல்வியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும்" எனத் தெரிவித்தார்.

இளைஞர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "எமது கிராமத்தில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல், இள வயது திருமணம், ஆரோக்கியமற்ற தன்மை என்பன பிரச்சினைக்குரிய விடயங்களாகும். இவற்றை விட போக்குவரத்து பிரச்சினைகளும் உள்ளன" எனக் கூறினார்.

எம். எப். றிபாஸ்
(பாலமுனை தினகரன் நிருபர்)

# மருதமுனையின் முதல் சட்டத்தரணி எம்.எம்.றபீக்; அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பாராட்டு விழா

மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் ஏற்பாடு செய்த ஓ.எல் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு இப்பாடசாலையின் பழைய மாணவரும் மருதமுனை பிரதேசத்தின் முதலாவது சட்டத்தரணியுமான எம்.எம். றபீக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாணவர்களின் கலைகலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கடந்த ஆண்டு சா.த பரீட்சையில் சகல பாடங்களிலும் 'ஏ' தர சித்தியைப் பெற்ற மாணவர்கள் அவர்களின் பெற்றோர் முன்னிலையில் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலையின் 'பரிணாமம்' விடுகைவிழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மருதமுனையின் முதலாவது சட்டத்தரணியான முஹம்மது இஸ்மாயில் முஹம்மது றபீக், தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் கற்றார். பின்னர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் தரம் 9 வரை கல்வி கற்று, வெஸ்லி உயர்தர பாடசாலையில் சா.த கல்வி கற்றார். அதன் பின்னர் கல்முனை சாஹிரா கல்லூரியில் உயர்கல்வியை தொடர்ந்த அவர், உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்றார்.

சட்டக் கல்லூரியில் சேர்ந்து 1982 ஆம் ஆண்டு மருதமுனையின் முதலாவது சட்டத்தரணியானார். பலாங்கொட நகரில் வாழ்ந்த அவர் பலாங்கொட நீதவான் நீதிமன்றத்தில் சுமார் 40 ஆண்டு காலமாக சட்டத்தரணியாக, சிரேஷ்ட சட்டத்தரணியாக பதில் நீதிபதியாக கடமையாற்றி வருகின்றார். இவரது சேவையை பாராட்டி பாடசாலை கல்விச் சமூகத்தினர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவித்தனர். இவரது மனைவியும் இங்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) திருமதி எம்.எச்.றியாஸா, இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் திட்ட முகாமையாளர் பொறியியலாளர் எம்.எஸ்.எம்.பஸீல், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர் பி.எம்.நஸ்றுத்தீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.







பெற்றோர் சார்பில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, டொக்டர் அஹ்சன் பாரி மௌலானா, கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர் எம்.எஸ்.மப்றூர், பாடசாலை பிரதி அதிபர் எஸ். எம். ஜுஹைறுதீன், உதவி அதிபர்களான திருமதி.ஏ.எம். சிறீன் தாஜ், திருமதி றிஸானா லுத்பி, எஸ். நிஸ்வர், திருமதி.எம்.ஐ.பஸீறா மற்றும் பகுதி தலைவர் ஏ.முஹம்மட் ஜெஸீல், ஆசிரியர் வை.ஏ.எம். யூசுப், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் நழீம் எம்.பதுறுதீன், பழைய மாணவர் சங்க செயலாளர் எம்.என். எம்.வசீம், சாதனை மாணவர்களின் பெற்றோர், நலன்விரும்பிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஏ.எல்.எம்.ஷினாஸ்
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் பரத நாட்டிய அரங்கேற்றம், சலங்கை பூஜை

நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளும், கிரிசங்கர் தாரணி தம்பதியினரின் புதல்விகளுமான செல்வி அபிநேத்ரி சங்கர் மற்றும் செல்வி மஞ்சரி கிரிகங்கர் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றமும், செல்வி சாதுரி கிரிசங்கரின் சலங்கை பூஜையும் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ அதிதிகளாக பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அதிபர் அருட் சகோதரி சரிதா தண்டல்கே, பிரபல நாட்டியக் கலைஞர் 'கலைச் செம்மல்' திருமதி பாலசுந்தரி பிராதலிங்கம் மற்றும் சோல் சவுண்ட்ஸ் அகாடமியின் ஸ்தாபக இயக்குனர் திருமதி சௌந்தரி டேவிட் ரோட்ரிகோ ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.





'கலாசூரி', 'ஆச்சாரிய கலா சாகர' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில் நடைபெறும் அரங்கேற்ற நிகழ்வில் ஸ்ரீ அருணந்தி ஆரூரன் (குரலிசை), ஸ்ரீ. சண்முகலிங்கம் நாகராஜன் (மிருதங்கம்), ஸ்ரீ சண்முகநாதன் திபாகரன் (வயலின்), ஸ்ரீ ரட்ணம் ரட்ணதுரை (தாளதரங்கம்), ஸ்ரீ பிரியந்த தசநாயக (புல்லாங்குழல்), ஸ்ரீ. என்.எஸ்.வாகீசன் (வீணை) ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக பங்கேற்றுச் சிறப்பிக்கவுள்ளனர்.



# ரசிகர்களின் உள்ளம் கவர்ந்த பிரபல பாடகி உமா ரமணன் காலமானார்

திரைப்பட பின்னணி பாடகி உமா ரமணன் உடல்நலக் குறைவால் நேற்றுமுன்தினம் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 69.

கடந்த 1980 ஆம் ஆண்டு வெளியான 'நிழல்கள்' திரைப்படத்தில் இடம் பெற்ற 'பூங்கதவே தாழ் திறவாய்' என்ற பாடல் மூலம் பாடகியாக திரை உலகில் உமா ரமணன் அறிமுகமானார். அந்த படத்துக்கு இளையராஜா இசை அமைத்திருந்தார். தீபன் சக்ரவர்த்தி உடன் இணைந்து அந்தப் பாடலை அவர் பாடி இருந்தார்.

கேளடி கண்மணி, தூறல் நின்னு போச்சு, வைதேகி காத்திருந்தாள், தில்லு முல்லு, பன்னீர் புஷ்பங்கள், முதல் வசந்தம், ஒரு கைதியின் டைரி, புதுமைப் பெண், தென்றலே என்னை தொடு, திருப்பாச்சி உள்ளிட்ட பல படங்களில் இவர் பின்னணி பாடியுள்ளார்.

ஆகாய வெண்ணிலாவே தரை மீது வந்ததேனோ, பூபாளம் இசைக்கும் பூமகள் ஊர்வலம், பொன் மானே ஆகிய பிரபல பாடல்களை அவர் பாடியுள்ளார்.

'நிழல்கள்' படத்தில் இவர் பாடிய பூங்கதவே பாடல் இவரை பட்டிதொட்டியெங்கும் பிரபலமாக்கியது. அதனை தொடர்ந்து இளையராஜா இசையமைத்த 100 இற்கும் மேற்பட்ட படங்களில் இவர் பாடினார்.

குறிப்பாக, 'தூறல் நின்று போச்சு' படத்தில் இடம் பெற்ற பூபாலம் இசைக்கும், 'பன்னீர் புஷ்பங்கள்' படத்தில் இடம் பெற்ற ஆனந்த ராகம், 'தென்றலே என்னைத் தொடு' படத்தில் இடம் பெற்ற கண்மணி நீ வர, 'ஒரு கைதியின் டைரி' படத்தில் இடம் பெற்ற பொன்மானே, 'அரங்கேற்ற வேளை' படத்தில் இடம் பெற்ற ஆகாய வெண்ணிலாவே, 'மகாநதி' படத்தில் இடம் பெற்ற ஸ்ரீரங்க ரங்க நாதனின் உள்ளிட்ட பாடல்கள் இவரை உச்சத்துக்குக் கொண்டு சென்றன.



எம்.எஸ்.வி, டி. ராஜேந்தர், தேவா, எஸ்.ஏ. ராஜ்குமார், மணி ஷர்மா, ஸ்ரீகாந்த் தேவா, வித்யாசாகர் உள்ளிட்ட இசையமைப்பாளர்களின் இசையிலும் பாடியிருக்கிறார்.

பழனி விஜய லட்சுமியிடம், கர்நாடக இசை பயிலும் போது ரமணின் அறிமுகம் உமாவுக்கு கிடைத்தது.

அந்த சமயத்தில், ரமணன் மேடை கச்சேரிகளில் திறமையான பாடகர்களை பாட வைப்பதற்கான தேடலில் இருந்தார். அந்த தேடலின் வழியாக, உமா, ரமணனுடன் இணைந்து பணியாற்றுவதற்கான சூழல் வாய்த்தது. அப்போது அவர்களுக்கிடையே இடையே காதல் மலர, இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள்.


# உழைப்பாளர்களை மதிக்கும் மார்க்கம் இஸ்லாம்

மனிதனது கடமைகளையும் பொறுப்புக்களையும் வரையறுத்துக்காட்டும் அல்குர்ஆனும் ஹதீஸும் அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல்களையும் அவனுக்கு வழங்கி இருக்கின்றன. அந்த வகையில் மனிதனது பொறுப்புக்களில் ஒன்றாக இஸ்லாம் உழைப்பை வலியுறுத்தியுள்ளது.

இறைவனின் தூதர்கள் உழைப்பாளர்களாக இருந்தார்கள். அதனை அல்குர்ஆன் பல நபிமார்களதும் வரலாற்றைக் குறிப்பிட்டு சுட்டிக் காட்டுகிறது. நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டதையும் (11:37), தாவூத் (அலை) அவர்கள் ஆயுதங்கள் தயாரித்ததையும் (34:10), மூஸா (அலை) அவர்கள் செம்மறி ஆடுகள் வளர்த்ததையும் (28:26), யூஸுப் (அலை) அவர்கள் தனது அறிவை உழைப்புக்குப் பயன்படுத்தியதையும் (12:55) அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே சுட்டிக்காட்டியுள்ளான்.

அல்லாஹ்வின் மிகவும் விருப்பத்துக்குரிய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வியாபாரம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட்டதை நபியவர்களின் வரலாறும் எடுத்துக் காட்டுகிறது. அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் குறிப்பிடும் போது, 'அல்லாஹ் அனுப்பிய எந்த நபியும் ஆடு மேய்க்காமல் இருந்ததில்லை!' என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறிய போது, நபித்தோழர்கள், 'நீங்களுமா?' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஆம்! மக்காவாசிகளின் சில கீராத் கூலிக்காக ஆடு மேய்ப்பவனாக நான் இருந்தேன்!' என்று பதிலளித்தார்கள் எனக் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

வேலையைக் குறிப்பதற்கு அல்குர்ஆன் அமல் என்ற சொல்லையும் பாவித்திருப்பதில் இருந்து வேலை செய்வதை இஸ்லாம் அமலாக, இபாதத்தாகக் கருதி இருப்பதையும் கண்டு கொள்ள முடிகிறது. அத்தோடு தனது ஜீவனோபாயத்துக்காக உழைக்கச் செல்வதை இஸ்லாம் ஃபீ ஸபீலில்லாஹ்வாக, இறைபாதையிலான உழைப்பாகக் கருதுகிறது. உழைப்பதற்காச் செல்லும் வழியில் மரணித்தவரை ஷஹீதாக, இறை பாதையில் மரணித்தவராக இஸ்லாம் கௌரவிக்கிறது.



உழைப்பதன் மகிமை பற்றி இமாம் கஸ்லாலி (ரஹ்) அவர்கள் தனது இஹ்யா உலூமித்தீனில் குறிப்பிடும் பொழுது, ஈஸா (அலை) அவர்களுடைய சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு முறை ஈஸா (அலை) அவர்கள் வணக்க வழிபாடுகளிலேயே மூழ்கிப் போன ஒருவரை காண்கிறார்கள். உங்களுக்கு உண்ணவும் குடிக்கவும் எங்கிருந்து கிடைக்கிறது என அந்த வணக்கவாளியிடம் அவர்கள் கேட்கிறார்கள். எனது சகோதரன் வேலை செய்து சம்பாதித்து எனக்கும் உண்பதற்காக கொண்டு வந்து தருகிறார் என்று அவரிடம் கூறினார். அப்போது ஈஸா (அலை) அவர்கள் உனது சகோதரன் உன்னை விடச் சிறந்த வணக்கவாளியாக இருக்கிறார் என்று சொன்னார்கள். அல்லாஹ்விடம் துஆ கேட்பதனால் வானத்தில் இருந்து தங்கமோ, வெள்ளியோ பொழியப் போவதில்லை என்று தெரிந்து கொண்டவர்கள், தமது சீவனோபாயத்துக்காக உழைப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ளாமலிருக்கட்டும் என உமர் (ரழி) அவர்கள் கூறியதாக இமாம் கஸ்ஸாலி (ரஹ) அவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதன்படி உழைத்து உண்ண வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. செல்வம் உள்ளவனுக்கோ, உழைக்கும் திறன் உள்ளவர்களுக்கோ தர்மம் ஹலாலாக மாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்:திர்மிதி)

எனவே உழைக்கும் திறனுள்ள, திடகாத்திரமுள்ளவர்கள் உழைக்காமல் தர்மத்தைப் பெற்று வாழ்வது அவர்களுக்கு ஹலாலான சம்பாத்தியமாக மாட்டாது. தேவை இல்லாத நிலையில் யாசகம் பெறுகின்றவன், எரியும் தணலை கையில் வைத்திருப்பவன் போலாவான் (ஆதாரம்: பைஹகி) என்ற நபி மொழியும் இதனை உணர்த்துகிறது. தன்னால் உழைக்க முடியாத அளவுக்கு இயலாமையும் சோம்பலும் வராமல் பாதுகாப்பாயாக என அல்லாஹ்விடம் துஆக் கேட்பவர்களாக நபியவர்கள் காணப்பட்டார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக மிக்தாம் (ரழி) அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது, 'ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது. தாவூத் (அலை) அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தார்கள்.' (ஆதாரம்: புஹாரி) என உழைப்பின் பெறுமதியை எடுத்துக் காட்டினார்கள்.

அதேநேரம் உழைப்பு எதிலுமே ஈடுபடாமல் யாசகம் கேட்பதை இஸ்லாம் கண்டித்துமிருக்கிறது. எடுக்கின்ற கையை விட கொடுக்கின்ற கையே சிறந்தது என இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. கீழே உள்ள கையை விட மேலே உள்ள கை சிறந்தது. மேலுள்ள கை அருள் நிறைந்தது, கீழுள்ள கை யாசகம் பெறுவது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்).

மேலும் நபியவர்கள் குறிப்பிடும் பொழுது, தனது சீவனோபாயத்துக்காக கயிற்றுடன் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி தனது முதுகில் சுமந்து சென்று விற்பனை செய்பவன், அடுத்தவரிடம் கேட்டுச் செல்பவரை விட, அவர் கொடுத்தாலுமோ, கொடுக்காவிட்டாலுமோ, சிறந்தவர் ஆவார் (ஆதாரம்: முஸ்லிம்) எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த ஹதீஸ், யாசகத்தை இழிவாகக் கருதுவதோடு மட்டுமல்லாது கொடுக்கும் கரங்களின் சிறப்பையும் எடுத்துக்கூறி கொடுக்கும் கரங்களாக மாறுவதற்கும் அதனை அடைவதற்காக உழைப்பதற்கும் தூண்டுகிறது.

உழைக்காமல் யாசகத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்பவர்களின் வாழ்வில் பரக்கத் இருக்கப் போவதில்லை. அவர்கள் எவ்வளவு தான் தேடிக் கொண்டு வந்தாலும் அவர்களின் வாழ்க்கையில் பஞ்சம் ஓயப் போவதில்லை. யாசகம் கேட்பவர், முகத்தில் சதைகள் இல்லாமல் அல்லாஹ்வைச் சந்திக்கும் வரை யாசகம் கேட்டுக் கொண்டே இருப்பார் என (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடும் பொழுது, யாசகம் கேட்பது முகத்தில் இருந்து சதையைச் சீவி எடுப்பதைப் போன்றது. யாராவது தமது முகத்தைப் பாதுகாக்க விரும்பினால் அவர் ஆட்சியாளரிடம் கேட்பதைத் தவிர அல்லது கடினமான தேவையின் போது கேட்பதைத் தவிர, யாசகம் கேட்பதை தவிர்ந்து கொள்ளட்டும் (ஆதாரம் : அபூதாவூத், நஸாஈ) என்று கூறினார்கள்.

இந்த வகையில் யாசகம் கேட்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமானால் அதற்காக உழைக்க வேண்டியிருக்கிறது. உழைப்பு என்பது ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் ஈடுபட வேண்டிய விடயம். அல்லாஹ்வின் தூதர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல என்பதும் புலனாகிறது. அத்தோடு உழைப்பில் ஈடுபடுபவர்கள் அல்லாஹ்வின் பாதையில் இருக்கிறார்கள். அல்லாஹ்வால் அவர்களுக்கு இடப்பட்ட கட்டளைகளை அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது. உழைத்தல் என்பது ஒரு இபாதத் என்பதையும் அதற்கு இறைவனிடம் கூலி வழங்கப்படும் என்பதையும் மறந்துவிடலாகாது.

**பியாஸ் முஹம்மத்**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சுயவிசாரணையின் முக்கியத்துவம்

ஒவ்வொரு முஸ்லிமும் தன் அன்றாட வாழ்வில் தன்னைத்தானே சுயவிசாரணை செய்து கொள்வது அவசியமாகும். இதனை அல் குர்ஆனும் ஹதீஸ்களும் வலியுறுத்துகின்றன. ஸஹாபாக்கள், ஸலபுகளும் இவ்விடயத்தில் அதீத கவனம் செலுத்தியுள்ளார்கள். ஆன்மீக சுயவிசாரணை என்பது ஒவ்வொரு முஸ்லிமும் தனது கடந்த கால வாழ்வில் இடம்பெற்ற தவறுகளை நினைத்துப் பார்த்து அவற்றை திருத்திக்கொள்ள முயற்சிப்பதுடன் நிகழ்காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாமல் தன்னை பாதுகாத்துக் கொள்வதோடு எதிர்காலத்தில் ஆன்மீக நிலையில் முன்னரை விட சிறந்த அடைவை அடையத் திட்டமிடுவதே ஆன்மீக சுயவிசாரணையின் நோக்கமாகும்.

அல் குர்ஆன், 'ஈமான் கொண்ட விசுவாசிகளே...! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் நாளைய மறுமை நாளுக்காக எவற்றை சேமித்து வைத்திருக்கின்றோம் என்பதை சிந்தித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்கள் சகல நடவடிக்கைகளையும் அறிந்தவனாகவும் அவதானிப்பவனாகவும் இருக்கின்றான். (ஸூரா ஹஷ்ர்:18) என்று குறிப்பிட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள், 'இவ்வுலகில் யாரேனும் பிறருக்கு பண விடயத்திலோ மானம் மரியாதை விடயத்திலோ அநீதி இழைத்திருப்பின் தங்கமோ வெள்ளியோ பணமோ எந்தப் பயனும் அளிக்காத மறுமைநாளை அடைவதற்கு முன்னர் இவ்வுலகிலேயே அவற்றுக்கான பிராயச்சித்தத்தை தேடிக்கொள்ளவும். மறுமை வந்துவிட்டால் ஒன்றில் இவரின் நன்மைகளிலிருந்து பாதிக்கப்பட்டவருக்கு பறித்து வழங்கப்படும், அன்றேல் பாதிக்கப்பட்டவரின் தீமைகளை இவர் சுமக்க வேண்டிவரும்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி).

'என் உயிர் எவன் வசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக... உங்களில் சிலருக்கு சுவர்க்கத்துக்கும் அவருக்கும் ஒரு சாணளவு இடைவெளியிருக்கும் அளவுக்கு நற்செயல்கள் புரிந்து விட்டு இறுதிக்கட்டத்தில் ஒரு பாவகாரியத்தில் ஈடுபட்டு அத்தனை நல்லமல்களும் அழிக்கப்பட்டு நரகவாதியாகவும் மரணித்து விடுகிறார். மற்றொருவர் நரகத்துக்கும் அவருக்கும் ஒரு சாணளவு இடைவெளி இருக்கும் அளவுக்கு பாவ காரியங்கள் புரிந்து விட்டு கடைசி கட்டத்தில் சொர்க்கத்துக்குரிய ஒரு நற்செயலைச் செய்யும் பாக்கியம் பெற்று மன்னிப்பு பெற்று சொர்க்கவாசியாக உடன் மரணித்தும் விடுகிறார் என்றும் நபிகளார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி).

நமது இறுதி முடிவு எப்படி அமையப் போகின்றது என சிந்தித்து கவலைப்பட்டு இறுதிநேரத்தில் கலிமாவுடன் மரணிக்கும் பாக்கியத்தை நல்க அல்லாஹ்வைப் பிரார்த்தித்து அச்சத்துக்கும் ஆதரவுக்குமிடையில் வாழ தன்னைத் தயார்படுத்துவதும் ஆன்மீக சுயவிசாரணையாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், நிச்சயமாக நான் மறுமையில் யாருக்கும்



பண விடயத்திலோ மானம் மரியாதை விடயத்திலோ அநீதி இழைத்ததாக குற்றஞ்சாட்டாத நிலையில் அல்லாஹ்வை சந்திப்பதற்கே விரும்புகின்றேன்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அபூதாவுத்).

உமர் (ரழியல்லாஹு) அவர்கள், 'உங்களுக்கு மறுமையில் விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உங்களை நீங்களே... விசாரணை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய செயல்கள் மறுமையில் நிறுக்கப்படுவதற்கு முன்னார் நீங்களே அச்செயல்களை நிறுத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். அதுவே உங்களது மறுமை விசாரணையை இலகுபடுத்தும். ஏனெனில் இன்று இவ்வுலகில் ஒருவர் எதை வேண்டுமானாலும் செய்யலாம். அவருக்கு இறைவனிடத்தில் விசாரணை கிடையாது. மறுமையில் அவர் விசாரணைக்கு மட்டும் உட்படுத்தப்படுவார். அங்கு எந்த நல்ல அமலும் செய்ய முடியாது' என்றும் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி) .

மேலும், நபி (ஸல்) அவர்கள், நிச்சயமாக மனிதர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வின் விரல்களுக்கு மத்தியிலே தான் இருக்கின்றன. அல்லாஹ் அவற்றை விரும்பிய படி மாற்றி விடுவதற்கு சக்தி பெற்றவனாவான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி).

அவ்வாறே நபியவர்கள், உள்ளங்களை மாற்றி விடுபவனே! அல்லாஹ்வே என்னுடைய உள்ளத்தை உனது மார்க்கத்தை எடுத்து நடப்பதன் மீது ஸ்திரப்படுத்துவாயாக... உள்ளங்களை புரட்டி விடுபவனே...! என்னுடைய உள்ளத்தை உனக்கு வழிப்பட்டு நடப்பதன் மீது பக்கம் புரட்டி விடுவாயாக... என்று அடிக்கடி பிரார்த்திப்பவர்களாக இருந்துள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி).

ஒரு முறை நபியவர்களிடத்தில் இளைஞர் ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனக்கு விபசாரம் செய்வதற்கு அனுமதி தாருங்கள் கேட்டார். அங்கு குழுமியிருந்த மக்கள் அவரை ஆத்திரத்தோடு உற்று நோக்கினர். நபியவர்களோ கனிவுடன் அவரை அழைத்து நண்பரே.... நீங்கள் விரும்பும் அச்செயலை ஒரு ஆடவன் உங்கள் தாயுடன் ஈடுபடுவதற்கு விரும்புகிறார். அதற்கு நீர் சம்மதிப்பீரா? என்று கேட்க ஒருபோதும் நான் விரும்ப மாட்டேன் என்றார். நபியவர்கள் மீண்டும் அச்செயலை அவன் உன் மனைவியுடன், உன் சகோதரியுடன், உன் மகளுடன் செய்வதற்கு முற்பட்டால் நீ அதைப் பொருந்திக் கொள்வாயா? என கேட்க அதற்கும் அவர் கோபத்துடன் ஒருபோதும் அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன் என்றார். உடனே நபியவர்கள் அவரிடம் , 'நீ ஒரு பெண்ணிடம் விபசாரம் செய்தால் அப்பெண்ணும் ஒரு ஆடவனின் மனைவியாக, தாயாக, சகோதரியாக, மகளாக இருப்பவள் தானே! அப்படியாயின் நீ அப்பெண்ணுடன் புணர்வதால் அவர்களுக்கு எவ்வளவு ஆத்திரமும் அவமானமும் ஏற்படும்? அப்படி நடப்பதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? என அவரின் தவறைப் புரிய வைத்தபோது, அவர் அழுதவராக பாவ மன்னிப்பு கூறினார்.

பின்னர் நபியவர்கள் அவரின் நெஞ்சில் கையை வைத்து யா அல்லாஹ்...! இவரின் உள்ளத்தை பரிசுத்தப்படுத்துவாயாக..., பாவங்களை மன்னிப்பாயாக.... இவரது மர்ம உறுப்பை ஹராத்தை விட்டும் காப்பாயாக.... எனப் பிரார்த்தித்தார்கள் அதன் பின் விபசாரத்தை போல அவருக்கு வெறுப்பான விடயம் வேறு எதுவும் இல்லை என்ற அளவுக்கு அச்செயல் மீது அவருக்கு விருப்பமற்றுப் போய் விட்டது. (ஆதாரம் : அஹ்மத், ஸில்ஸிலா ஸஹீஹா).

இறையச்சம் இல்லாத ஒருவன் இவ்வுலகில் நல்லவனாக வாழ்ந்து மரணிக்க வாய்ப்பே இல்லை என்று சொல்லுமளவுக்கு திரும்பும் பக்கமெல்லாம் தீமைகளும் அநியாயங்களும் மார்க்க விரோத செயல்களும் மலிந்துள்ள ஒரு காலத்தை அடைந்துள்ளோம். எனவே அல்லாஹ்வுடனான எமது தொடர்பையும் நெருக்கத்தையும் அதிகப்படுத்துவது மாத்திரமே இவ்வுலகில் எம்மை நல்லவனாக வாழ வழிசமைக்கும் . அதற்காக நம்மை நாமே சுயவிசாரணை செய்யும் பொறிமுறையை வளர்த்து அதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே எமது வாழ்வில் சுயவிசாரணை மேற்கொண்டு கடந்த கால தவறுகளை திருத்தி சிறந்த எதிர்காலத்தை திட்டமிட்டு நல்ல அமல்கள் புரிவதற்கு அல்லாஹ் எமக்கும் அருள் பாலிக்கட்டும்.

**அப்துல் கபூர் முஹம்மது ஜலீல் மதனி**
பகுதித் தலைவர்,
மஃஹதுஸ் ஸுன்னா
மகளிர் அரபுக் கல்லூரி
காத்தான்குடி.

# இஸ்லாத்தில் பெண்களுக்கான உரிமைகள்

அமைதியையும், சமத்துவத்தையும் போதிக்கும் இஸ்லாம், பெண்களுக்கு அதிகமான உரிமைகளை அன்றே வழங்கியுள்ளது. பெண் குழந்தையை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு, இறைவன் புறத்திலிருந்து வாழ்த்தும், நற்செய்தியும் உண்டு' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு பெண் குழந்தைகள் பிறந்தால் அவர்களை உயிரோடு புதைக்கும் கொடுமையான பழக்கம் அரபு உலகில் இருந்தது. இதை அல் குர்ஆன் (1731) இவ்வாறு கண்டித்தது: "வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்".

இந்த இறைக்கட்டளையின் மூலமாகச் சிசுக்கொலைக்கு இஸ்லாம் முற்றுப்புள்ளி வைத்தது. மேலும் பெண் சிசுக்கொலை பெரும்பாவம் என்கிறது இஸ்லாம்.

'எவருக்கு மூன்று பெண் மக்கள் இருந்து அவர்களை அரவணைத்து, அவர்களின் தேவைகளை நிறைவேற்றி, கருணை காட்டி வருவாரோ அவருக்குச் சொர்க்கம் உறுதியாகிவிட்டது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, அருகிலிருந்த நபித்தோழர் 'இரு பெண் மக்கள் இருந்தாலுமா?' என்று



கேட்டார். அதற்கு நபிகளார் `ஆம், இரு பெண் மக்கள் இருந்தாலும்' என்று பதில் கூறினார்கள் (நபிமொழி).

'ஒரு பெண் தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளுடன் யாசித்த வண்ணம் வந்தார். என்னிடம் அப்போது ஒரு பேரீச்சம் பழத்தைத்தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, அதை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை இரண்டாகப் பங்கிட்டு இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டார். அவர் அதிலிருந்து சாப்பிடவில்லை. பிறகு அவர் எழுந்து சென்றார்' என்ற செய்தியை அன்னை ஆயிஷா (ரழி), நபி (ஸல்) அவர்களிடம் கூறியதும், `இவ்வாறு பெண் குழந்தைகளால் சோதிக்கப்படுகிறவருக்கு, அக்குழந்தைகள் நரகத்திலிருந்து அவரைக்காக்கும் திரையாக இருப்பார்கள்' எனக் கூறினார்கள்.

'அல் குர்ஆன் விரிவுரை, வாரிசுரிமைச் சட்டங்கள், ஹலால் ஹராம், அரபி இலக்கியம், மரபுக் கவிதைகள், வரலாறு போன்ற துறைகளில் ஆயிஷா (ரழி) அவர்கள் புலமை பெற்று திகழ்ந்தார்கள்.

பெண்களுக்குரிய ஆன்மிக, சமூக, பொருளாதார, கல்வி உரிமைகளோடு இவை அனைத்தையும் விட ஒரு பெண்ணின் கண்ணியத்திற்கும், மானத்திற்கும் பாதுகாப்பளிப்பது ஒரு நாகரிக சமூகத்தின் மிகப்பெரிய பொறுப்பு. ஆடை விஷயத்தில் இஸ்லாம் ஓர் அழகிய முன்மாதிரியை வழங்குகிறது. பெண் விடுதலை என்பது பெண், பெண்ணாக வாழ்வதுதான். பெண்கள் ஆண்களைப் போல உடையை அணிந்து கொண்டு வாழ்வது சுதந்திரமாகாது.

பெண்கள் முகம், மணிக்கட்டுகள், பாதம் ஆகியவற்றைத் தவிர மற்ற பாகங்களை மறைக்க வேண்டும்' என இஸ்லாம் கட்டளையிடுகிறது.

திருமண விஷயத்தில் பெண்களுக்கு இஸ்லாம் பல்வேறு உரிமைகளை வழங்கியிருக்கிறது. ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு பெண்ணின் விருப்பமே முக்கியமானது.

`நம்பிக்கை கொண்டோரே....., பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதி இல்லை' (அல் குர்ஆன் 4:19) என்று திருமறையில் இறைவன் கூறுகிறான். திருமணத்திற்குப் பெண்ணின் சம்மதம் அவசியம் என வலியுறுத்துகிறது இஸ்லாம்.

மணமகன் தான் மணக்கப்போகும் பெண்ணுக்கு அவன் சக்திக்கேற்ப மணக்கொடை (மஹர்) கொடுக்க வேண்டும். மணப்பெண் மஹர் எனும் மணக்கொடையைப் பெறுவதை இஸ்லாம் பெண்ணிற்கான உரிமையாக ஆக்கியுள்ளது. இது குறித்து திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது `நீங்கள் திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு அவர்களுடைய மஹரை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள்'. (அல் குர்ஆன் 4:4)

மனைவியுடன் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ நீங்கள் விரும்பாவிட்டாலும் பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில் ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால் அல்லாஹ் அதில் பல நன்மைகளை வைத்திருக்கக்கூடும்' (அல் குர்ஆன் 4:19) என பெண்மையைப் போற்றுகிறது.

விவாகரத்துப் பெறும் உரிமையை இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கி உள்ளது. `அல்லாஹ்வின் வரம்புகளை அவர்கள் இருவரும் நிலைநிறுத்த மாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சினால் அவள் கணவனுக்கு ஏதேனும் ஈடாகக் கொடுத்து பிரிந்து விடுவதில் அவர்கள் இருவரும் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும்' என்ற அல் குர்ஆன் (2:229) வசனத்தின் மூலம் கணவனை விவாகரத்துச் செய்யும் உரிமை மனைவிக்கு உண்டு என்பது தெளிவாகிறது.

'உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளராவார். ஆண் (குடும்பத் தலைவன்) தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். பெண் (மனைவி), தன் கணவனின் வீட்டிற்குப் பொறுப்பாளியாவாள். தன் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.இஸ்லாம் இல்லத்தை அமைதி அளிக்கும் இடமாகக் கூறுகிறது. குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதிலும், குடும்ப உறவுகளைப் பேணுவதிலும் கணவனுக்கும் மனைவிக்கும் சம பங்கு உள்ளது என்கிறது இஸ்லாம்.

**பிந்த் இஸ்மாயீல்**

# "ஒன்றிணைவோம், உரிமைகளை வெல்வோம்"





"ஒன்றிணைவோம், உரிமைகளை வெல்வோம்" என்ற தொனிப்பொருளில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் "UNITE"அமைப்புடன் இணைந்து மேதின பேரணியை (நேற்றுமுன்தினம்) லேக்ஹவுஸ் சுற்று வட்டாரத்தில் ஆரம்பித்தது. இப்பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் நிசாந்த வண்ணியராச்சி உரையாற்றுவதை காணலாம்.

**(படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி. வி. குமார்)**




மருதூர்க்கொத்தன் எழுதிய "நினைவுகளின் தேரோட்டம் " என்ற கட்டுரைகள் அடங்கிய நூலின் வெளியீட்டு விழா கண்டி செல்லத்துரை ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நூல் வெளியீட்டு விழாவில், தமிழ்நாடு, தஞ்சாவூர் , கல்வியல் மற்றும் மேலாண்மைத் துறை பேராசிரியர் கு . சின்னப்பன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அவரிடமிருந்து நூலின் பிரதியை ஸ்ரீ லங்கா சுகந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் தேசபந்து எம். தீபன் பெற்றுக்கொண்டார்.

## இன்றைய பலன்கள்

(03.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
கடந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். இடமாற்றம், ஊர் மாற்றம் எதிர்பார்த்தபடி அமையக்கூடும்.

**ரிஷபம் :**
சகோதர வழியில் உதவிகள் கிடைத்து சந்தோஷம் காண்பீர்கள். பெற்றோர்களின் உடல் நலத்தில் மட்டும் கவனம் தேவை. உத்தியோகப் பணியில் மீண்டும் சேர வாய்ப்பு உருவாகும்.

**மிதுனம்:**
திட்டமிட்ட காரியங்கள் சிலர் நடைபெறாமல் போகலாம். பொருளாதாரத்தில் இருந்த சரிவு நிலை அகலக்கூடும்.

**கடகம்:**
சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அடிக்கடி சீர்கேடுகள் வரலாம்.

**சிம்மம்:**
எதையும் யோசித்து செய்வதன் மூலம் மன நிம்மதி கிடைக்கும். குடும்ப உறவில் விரிசல் ஏற்படலாம். தேவைக்கேற்ற பணம் வந்து சேரும்.

**கன்னி:**
மன பயம் உருவாக்கும். ஆனால் மதிப்பும் மரியாதையிலும் எந்த குறைவும் ஏற்படாது. அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கக்கூடும்.

**துலாம்:**
பொருளாதார நிலை திருப்தி தரும். சொத்து விற்பனையின் மூலம் கடன் சுமை குறைய வழி பிறக்கும். வெளிநாட்டு முயற்சியில் இருந்த தடை அகலும்.

**விருச்சிகம்:**
சேமிப்பு உயரும். செய்யும் செயல்கள் யாவும் வையகத்தார் போற்றுமளவு அமையும் .பாதியில் நின்ற பல பணிகள் மீதும் தொடரும்.

**தனுசு:**
உடல்நலம் சீராகும். அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்க கூடிய வாய்ப்பு உள்ளது. மனையில் மங்கல காரியங்கள் நடைபெறும். தடை தாமதங்கள் ஆகலும்.

**மகரம்:**
உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். ஒரு சிலருக்கு ஊர் மாற்றம் இடமாற்றம் உறுதியாகலாம்.உத்தியோகத்தில் பணியாளர் மாற்றங்களால் நிம்மதி கிடைக்கும்.

**கும்பம்:**
அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமும் அமைதி காண இயலும். நிதானத்தோடு செயல்படுவது நல்லது. உடல் நலத்தில் அதிக தொல்லைகள் ஏற்படலாம்.

**மீனம்:**
தொழிலில் லாபம் பொங்கி வரும். கடுமையாக முயற்சித்து முடிவடையாத காரியங்கள் இப்போது நடைபெறும்.

### மகாவலி காணிகளில் சட்டவிரோத...

பெற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே,

"விவசாயத்துறை சார் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குகிறது. இதன் படி தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் உட்பட சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட விவசாய உற்பத்திகளும் இந்த அமைச்சின் கீழுள்ளன.

அதேபோன்று நாட்டில் 10 பாரிய அணைகள் இருக்கின்றன. அவை இந்நாட்டு நீர்மின்சார உற்பத்திக்கும் நீர்ப்பாசனத்த்திற்கும் பாரிய அளவில் பங்களிக்கின்றன. எனவே இந்த இரு அமைச்சுக்களையும் நாம், முறையான வகையில் செயற்படுத்தி , நவீன விவசாய பொறிமுறைகளுடன் கூடிய அடித்தளத்தை இட்டால், தன்னிறைவடையலாம்.

இதற்காக, விவசாய அமைச்சும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இன் மூலம் இவற்றின் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக முன்னெடுக்க முடிந்துள்ளன.

அதேபோன்று விவசாய நடவடிக்கையுடன் தொடர்புடைய மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான அமைச்சும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது இவற்றின் செயற்பாடுகளை செயற்றிறனுள்ள வகையில் முன்னெடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

ஒரு சில இடங்களில் கைவிடப்பட்டுள்ள சுற்றுலா பங்களாக்களை புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகவும் அழகான சுமார் 30 பங்களாக்களும் உள்ளன. அத்துடன், மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

உறுமய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இணையாக மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் அடிப்படையில் காணி உரிமைகள் இல்லாத மக்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிகளை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் மிக முக்கியமான வேலைத்திட்டம் என்பதைக் கூற வேண்டும். இதன் கீழ், சுமார் 25,000 காணி உறுதிகள் வழங்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

### புங்குடுதீவு குழியிலிருந்து...

தெரிவித்துள்ளனர். இச்சடலம் இந்து முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டதாக இருக்கலாமென, தமது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலய புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேளை, ஆலய சூழலில் குழலை வெட்டிய போது , மனித எலும்பு கூட்டு எச்சங்கள் வெளிவந்தன.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அனுமதியுடன் நேற்று வியாழக்கிழமை நீதவான், சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டவர்கள் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது , புதைகுழியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சடலத்துடன் அரிசித்துகள்கள் , துணி, செப்பு நாணயங்கள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டன.

எலும்புக்கூடு புதையுண்டு இருந்த நிலையை பார்க்கும் போது, உரிய முறைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதனால் இது நல்லடக்கம் செய்யப்பட்டதாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

### நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு...

2024 மார்ச் வரையான மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பின் அளவு அதிகரித்ததாக தெரிவித்துள்ள மத்திய வங்கி, உள்நாட்டு மற்றும் அந்நிய செலாவணி சந்தைகளிலிருந்து நிகர அடிப்படையில் அந்நிய செலாவணியை கணிசமான அளவில் கொள்முதல் செய்ததால் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அதிகரித் ததாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த கையிருப்பு அதிகரிப்பில்

சீன மத்திய வங்கியின் அந்நிய செலாவணியும் உள்ளடங்குகிறது. வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் மார்ச்சில் 1,139 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருட மார்ச்சுடன் ஒப்பிடுகையில் இது 9.8 வீத அதிகரிப்பாக உள்ளது. தொழில்துறை பொருட்களின் ஏற்றுமதியே வருமான அதிகரிப்பில் பங்களிப்புச் செலுத்தியுள்ளது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 9.1 வீதத்தால் அதிகரித்த அதேசமயம், யூரோ, ஸ்டேர்லிங் பவுண்ட், ஜப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகியவற்றுக்கு நிகரான ரூபாவின் பெறுமதியும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

### ஜப்பான் வெளிநாட்டமைச்சர்...

அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடுவர்.

வெளிவிவகார அமைச்சில் நாளை (04) சனிக்கிழமை பிற்பகல் 02.30 முதல் 03.30 வரை நடத்தப்படவுள்ள கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பிலும் ஜப்பான் அமைச்சர் கலந்து கொள்கிறார்.

### சமையல் எரிவாயு...

சந்தையில் 4115 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இதனை 4.000 ரூபாவுக்கு குறைவான விலையில் வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சரியான விலைகளை இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### 2023 GCE A/L பெறுபேறுகள்...

நான்கு இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள தாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### 05 சட்டத்தரணிகளுக்கு 'சிரேஷ்ட...

2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நியமனங்களை வழங்கியுள்ளார்.

கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், டி.எம். சுவாமிநாதன், ஜி.ஜி. அருள்பிரகாசம், எச்.ஆர்.ஏ.டி.பி. குணதிலக்க மற்றும் எஸ்.என்.எம். குணவர்த்தன ஆகியோருக்கே 'சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணி (Senior Instructing AttorneysatLaw) பதவி வழங்கப்பட்டுள்ளது.

### கிழக்கு ஆளுநர் எரிக் சோல்ஹேய்ம் சந்திப்பு...

பல்வேறு விடயங்கள் குறித்து இதில் கலந்துரையாடப் பட்டன. கிழக்கு மாகாணத்தில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழலை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இவர்கள் ஆராய்ந்தனர்.

சந்திப்பில் கிழக்கு மாகாண சுற்றுச் சூழல் சூழல் பாதுகாப்பு செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், நகரசபை செயலாளர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் கிழக்கு மாகாண சுற்றுச் சூழல் சூழல் பாதுகாப்பு செயலாளர், திருகோணமலை, மட்டகளப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர், பிரதேச சபை செயலாளர்,நகர சபை செயலாளர் மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆகியோர், கிழக்கில் சுற்றுச் சூழல் பராமரிப்பு தொடர்பான சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர்.

### காங்கேசன்துறை நாகப்பட்டினம்...

அஞ்சலி செலுத்தினார். இதன் போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம் (ஜனா), மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் பொறியியலாளர் என். சிவலிங்கம் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள கப்பல் சேவையை மீள ஆரம்பித்தல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா,

கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இம் மாத நடுப்பகுதியில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைத்தல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த உயர்ஸ்தானிகர்,

இரு நாடுகளுக்குமிடையே நிலத்தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்து வருகிறோம்.

முதலாவது கட்ட பேச்சுக்கள் நிறைவடைந்துள்ளன. இரண்டாவது கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கிறோம். இது நீண்டகாலத் திட்டம். ஒரு சில வருடத்தில் நிறைவடையும் விடயமல்ல எனவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

### அரிய வகை அம்பரை ரூபா...

முயன்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இதையடுத்து, அஹுங்கல்ல பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இந்நபரிடமிருந்து ஐந்து கிலோ அம்பரை பொலிஸாரால் கைப்பற்றினர். வலான பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே, இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திமிங்கிலங்களிலிருந்து பெறப்படும் அம்பர் கிரிஸ்,பெரும் கிராக்கியாக கருதப்படுகிறது. பலவகை தேவைகளுக்காக இது பயன்படுத்தப்படுகிறது.

### எல்ல பகுதியில் எந்நேரத்திலும்...

மண்சரிவு அபாயம் உமாஓயா பல்நோக்கு திட்டத்தின் விளைவா? இல்லையா? என்பதை கண்டறிவதற்காக தொழில்நுட்ப உபகரணங்களை நிறுவ தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட புவியியலாளர்கள் குழுவொன்று, எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளை நேற்றைய தினம் ஆய்வு செய்ததது.

எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் குறித்து கடந்த (26) முன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, உமாஓயா பல்நோக்கு திட்டத்தினால் இந்த மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிறப்புக் குழுவினால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், அதன் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன கருத்துரைக்கையில், இம் மண்சரிவு அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார். இந்த பகுதிகளில் பொருத்தப்படும் தொழில்நுட்ப கருவிகளின் அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாக இதை,உறுதிப்படுத்த முடியுமென குறிப்பிட்டார்.

### பிரபல பின்னணிப் பாடகி...

வருடன் வாழ்ந்து வந்தார். இவர் 6,000 க்கும் அதிகமான மேடை நிகழ்வுகளில் பாடியுள்ளதுடன் 35 வருடங்களுக்கு அதிகமான காலம் இசைத் துறையில் பயணித்துள்ளார்.

1980ஆம் ஆண்டு வெளியான 'நிழல்கள்' திரைப்படத்தில் இடம் பெற்ற 'பூங்கதவே தாழ் திறவாய்' என்ற பாடல் மூலம் பாடகியாக திரைத்துறையில் அறிமுகமானார்.

அத்துடன் பன்னீர் புஷ்பங்கள், கேளடி கண்மணி, ஒரு கைதியின் டயரி, தென்றலே என்னைத் தொடு, புதையல் உள்ளிட்ட பல திரைப்படங்களில் அவர் பாடிய பாடல்கள் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளன.

பாடகி உமா ரமணின் இறுதிக் கிரியை நேற்று மாலை சென்னை அடையாறில் நடைபெற்றுள்ளது.

### வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியால்...

பொருட்கள் தேங்காய், தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கான கேள்விகள் குறைந்தும் அதிகரித்தும் காணப்பட்டன.

இதையடுத்து, கடந்த பெப்ரவரி மாதத்தில் ஆடைகள், தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்கள் மாணிக்கக்கற்கள் இலத்திரனியல், வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்ட உணவுகள், கடலுணவு, வளர்ப்பு மீன்கள் மரக்கறி, பழங்கள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்கள் மூலமான ஏற்றுமதி வருமானமே அதிகரித்துள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் வர்த்தக உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியில் ஐக்கிய ராஜ்ஜியம், அமெரிக்கா, இந்தியா, ஜெர்மன், இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், துருக்கி, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் முக்கியமாக உள்ளன.

அந்த வகையில் இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் அதிக ஏற்றுமதி வருமானம் ஐக்கிய ராஜ்ஜியம் தவிர ஐரோப்பிய நாடுகள் மூலமே கிடைத்துள்ளன. அது

248,48 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடந்த வருடத்தின் மார்ச் மாதத்தோடு ஒப்பிடுகையில், அது 4.79 வீத அதிகரிப்பு என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அமெரிக்காவுக்கான ஏற்றுமதி மூலம் 241. 5 மில்லியன் டொலர்களும், தெற்காசிய நாடுகளுக்கான ஏற்றுமதி வருமானமாக 103.52 மில்லியன் டொலர்களும் கிடைத்துள்ளதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

# புதைப்பதற்கு தயாராகவிருந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே ஆகும்



## பெருந்திரளான மக்கள் பங்கேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை





சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை வெற்றியடையச் செய்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாக்க அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி,ஜே.வி.பி உள்ளிட்ட அரசியல் கட்சிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

வழமையான அரசியலில் செயற்பட்டு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை எதிர்த்து, அதனை சீர்குலைக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, நாடு 2022 இல் இருந்த நிலைமைக்குத் திரும்புவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினார்.

## 'இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றுவோம்'

கொழும்பு மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் (01) பிற்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

'மீண்டும் வீழாத பெருமைமிகு நாடு என்றென்றும்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மேதினக் கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புள்ள அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி கயாஷான் நவனந்தனவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.

மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி முடிவடைந்து விட்டதாகத் தெரிவித்து கட்சியை சிலர் புதைக்கத் தயாராக இருந்தாலும், புதையுண்டுள்ள பொருளாதாரத்தை ஐக்கிய தேசியக் கட்சியே மீட்டெடுத்தது. நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியையே இன்று நாடு பூராகவும் நடைபெறும் மேதின பேரணிகள் எடுத்துக்காட்டுகின்றன. காலிமுகத்திடலில் இருந்து துரத்தப்பட்ட எதிர்க்கட்சி தலைவருக்கு தமது கட்சியின் மேதினக் கூட்டத்தை சத்தாம் வீதியில் நடத்தக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் வலுவான ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கி இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கும் திட்டமொன்றை முன்வைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"முதலில் இந்த மேதின பேரணிக்கு வருகை தந்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஐக்கிய தேசியக் கட்சி முடிந்துவிட்டதாக சிலர் நினைத்தனர். கட்சியை குழிதோண்டி புதைக்க வேண்டும் என்றார்கள். ஆனால் புதையுண்டிருந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு நாம் புத்துயிர் கொடுக்க வேண்டியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சவப்பெட்டிக்கு கடைசி ஆணி அடிக்கப்பட்டதாக 1956ஆம் ஆண்டு கூறப்பட்டது. ஆனால் ஐ.தே.க மீண்டும் வலுப்பெற்றது. 1970 இல் ஐக்கிய தேசியக் கட்சி முடிந்து விட்டது என்று கூறப்பட்டது. ஆனால் நாங்கள் 17 வருடங்கள் ஆட்சி செய்தோம். முடிந்து விட்டது என்று கூறிய ஐக்கிய தேசியக் கட்சிதான் இன்று நாட்டைக் காப்பாற்ற முன்வந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்குவதற்கு பிரதமர் டி.எஸ். சோனாநாயக்க சுபநேரம் பார்த்தார். அந்தக் கூட்டம் காலையில் நடைபெறாமல் மாலையில் நடைபெற்றது. மேலும் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கும் சுபமுகூர்த்தம் பார்க்கப்பட்டது. எனவே நாட்டுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும்தான் சுபமுகூர்த்தம் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதனால்தான் வீழ்ந்த நாட்டைஎம்மால் உயர்த்த முடிந்தது.

இன்று கொழும்பைச் சுற்றி பல மேதினப் பேரணிகள் நடைபெறுகின்றன. கெம்பல் மைதானத்தில் பொதுஜன பெரமுனவும், சத்தாம் வீதியில் ஐக்கிய மக்கள் சக்தியும் தலவாக்கலையில் திகாம்பரமும், கொட்டகலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பியும் இன்று மேதினக் கூட்டங்களை நடத்துகின்றன. இதுதான் ஜனநாயகம். நான் சர்வாதிகாரி என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் இன்று நடுவீதியில் கூட்டங்களை நடத்தலாம். என்னை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். இந்த நிலைமை இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் இருக்கவில்லை.

அன்று எதிர்க்கட்சித் தலைவர் தாக்கப்பட்டு காலிமுகத்திடலில் இருந்து துரத்தப்பட்டார். ஆனால் இன்று அவரது மேதின பேரணியை சத்தாம் வீதியில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுதான் ஜனநாயகம். இந்த நாட்டின் அரசியல் முறைமை சீர்குலைந்ததால் நான் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆனேன்.

பொதுவாக ஒவ்வொரு நாட்டிலும் பிரதமர் பதவி விலகும்போது எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக நியமிக்கப்படுவார். ஆனால் நம் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல, ஏனைய அனைத்துக் கட்சிகளும் பின்வாங்கி ஓடிவிட்டன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளும் எவருக்கும் ஆதரவளிப்பதாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் இருந்த பொதுஜன பெரமுன அறிவித்திருந்தது. முதலில் எதிர்க்கட்சித் தலைவரிடம் வினவப்பட்டது. ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் ஜே.வி.பி முன்வரவில்லை. இறுதியாக, தனியொரு எம்.பியைக் கொண்ட கட்சியின் தலைவர் என்ற முறையில், நான் நாட்டின் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று. ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் சவால்களில் இருந்து ஓடியதில்லை. இதை ஏற்க வேண்டாம் என்று சிலர் கூறினர். ஆனால் நாங்கள் அனைவரும் ஒன்றாக முன்னேற்றம் கண்டோம்.

அன்று ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் பாராளுமன்றத்தை கைப்பற்ற முயன்றார்கள். இதையடுத்து பாராளுமன்றத்தில் இருந்த அனைவரும் ஓடிவிட்டனர். 'நான் என்ன செய்யலாம்' என்று இராணுவத் தளபதி என்னிடம் கேட்டார். 'கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு என்ன நடந்தது' என்று கேட்டேன். அனைவரும் சென்றுவிட்டதாக அவர் சொன்னார். அப்படியானால் பாராளுமன்றத்தைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு என்று அவரிடம் சொன்னேன். அன்று தப்பி ஓடியவர்கள் இன்று பாராளுமன்ற ஜனநாயகம் பற்றி எப்படி பேசுகிறார்கள்? அந்தக் குழு பதவியில் இருந்திருந்தால், இன்றைய நாட்டின் நிலைமையை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

இன்று சகல இடங்களிலும் மேதினக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் பஸ்களில் வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன், பஸ்களை இயக்குவதற்கு எரிபொருள் இருக்கவில்லை. சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்கள் இன்றும் நாடு முழுவதும் கொண்டாடப்படுகின்றன. புத்தாண்டை மிகச் சிறப்பாக கொண்டாடினார்கள். இப்போது மேதினத்தை கொண்டாடுகிறோம். இன்னும் மூன்று வாரங்களில் வெசாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகும். அப்பொழுது கொழும்பு மீண்டும் மக்களால் நிரம்பியிருக்கும். அரசாங்கத்தை நாம் துணிச்சலுடன் முன்னோக்கிக் கொண்டு வந்ததாலேயே கண்டி பெரஹெராவை கண்டுகளிக்கவும் நல்லூர் திருவிழா மற்றும் தெவிநுவர பெரஹரா போன்றவற்றை பார்வையிடச் செல்வதற்கும் உகந்த சூழல் உருவானது. இதற்காக உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மொட்டுக் கட்சியின் ஒரு பகுதியினர் ஒத்துழைப்பு வழங்கினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தரப்பினரும் உதவ முன்வந்தனர். டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல தரப்பினர் எங்களுடன் இணைந்துச் செயற்படுகின்றனர். கட்சி சின்னமொன்று இல்லை. மொட்டுக் கட்சியின் ஒரு குழு எம்மோடு இணைந்தது. மற்றுமொரு குழு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது. மிகவும் சிரமப்பட்டு இந்த நிலைக்கு வந்துள்ளோம். எமது தீர்மானங்கள் வெற்றியளிக்கும் என்று எவரும் நினைக்கவில்லை. மேலும், குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. சிரமத்துடனாவது அந்தத் தீர்மானங்களை எடுத்தோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் போது புதிதாக பணத்தை அச்சிட முடியாது என்று அறிவிக்கப்பட்டது. மேலும் அரச வங்கிகளில் கடன் வாங்கவும் முடியாதென அறிவிக்கப்பட்டது. அரசு வருமானம் ஈட்ட வேண்டும் என்றும் தெரிவித்தனர். ரூபாயை பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கஷ்டமாக இருந்தாலும் அதற்கான முடிவுகளை எடுத்தோம். மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியும் அப்போது என்ன சொன்னார்கள்? ஆனால் இன்று நாட்டின் நிலைமை என்ன? இன்று ரூபாயின் பெறுமதி

## 'நாட்டில் ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டுள்ளதால், காலிமுகத்திடலில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரால் சத்தாம் வீதியில் மேதினக் கூட்டத்தை நடத்த முடிந்துள்ளது'

பலப்படுத்தப்பட்டுள்ளது. டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாவின் பெறுமதி 280 ஆக உள்ளது. ரூபாய் பெறுமதி வலுவடைந்திருப்பதால் மக்கள் கையிலிருக்கும் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது.

தற்போது, பல்வேறு நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகின்றனர். மேலும், கடந்த பெரும்போகத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. மேலும் தொழில்கள் மீண்டும் உயிர்பெறுகின்றன. மேற்படி துறைகளை பாதுகாப்பதற்காக தனிப் பிரிவொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அதனால் மிகவும் சிரமப்பட்டே இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தினால் அந்த பாதுகாப்பு கிடைத்துள்ளது. இந்த நிலைமையை பாதுகாத்து முன்னேறிச் செல்வதா? அல்லது நாட்டை 2022 இல் இருந்த நிலைக்கு கொண்டு செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகளும் இத்திட்டத்திற்கு எதிராக செயற்படக் கூடாதென கேட்டுக்கொள்கிறேன்.

வேலைத்திட்டத்திற்கு இடையூறு செய்யவும் வேண்டாம். இந்த நிலையைப் பாதுகாக்க மக்களைப் பற்றிச் சிந்தித்து அரசாங்கத்துடன் இணைந்துச் செயற்பட முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நாம் அனைவரும் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். 2003 ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டிற்குச் சென்று 03 பில்லியன் டொலர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தேன். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கினார்.

அதனால் 04 பில்லியன் டொலர்கள் கிடைத்தன. ஆனால் 2004 ஆம் ஆண்டில் அனைத்தும் மாறியது. அதனால் அவர்கள் திரும்பிச் சென்றனர். அந்த 04 பில்லியன் டொலர்கள் எம்மிடம் இருந்தால் இன்று அதன் பெறுமதி 10 பில்லியன் டொலர்களாக இருக்கும். 2018_2019 இற்குள் வரவு செலவுத் திட்டத்தில் உபரி ஏற்பட்டது. அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை மாற்றினால் நெருக்கடி ஏற்படலாம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நாட்டின் துரித அபிவிருத்திக்கு தேவையான நிபந்தனைகள் அடங்கிய சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன். அதற்கு ஆதரவு தருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு ஆதரவளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதோடு, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாகவும் மாற வேண்டும். இந்த நாட்டின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. நாட்டு மக்கள் இன்னமும் கஷ்டத்தில் வாழ்கின்றனர். பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். 03 வருடங்களாக இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு சரிவடைந்தது. எனவே இளைஞர்களுக்கான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். பழைய பொருளாதார முறைமையினால் இதனைச் செய்ய முடியாது. இதற்கு பொருளாதாரம் திறக்கப்பட்டு புதிய முதலீடுகள் கொண்டுவரப்பட வேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் நிறுவனங்களின் வருமானம் குறைவடைந்திருந்தது. நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக 04,05 பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். வறுமையை ஒழிக்க கிராமப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளோம். நலன்புரித் நிவாரணத் தொகை மூன்று மடங்காக மேம்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கை 24 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் தனியார் துறையினருக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதற்கான திட்டத்தை முன்வைக்கிறேன்.எனவே, பாரம்பரிய அரசியலை கைவிட்டு எம்மோடு இணையுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அழைப்பு விடுக்கிறேன். அதேபோல், நாட்டிலிருக்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாத்து புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஆதரவளிக்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி தனது மேதின உரையில் தெரிவித்தார்.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**



# கிழக்கின் குரல்



பொத்துவிலிலுள்ள

## உணவு கையாளும் நிலையங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்

### சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் அறிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**



அம்பாறையின் பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்களும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஒருமாத காலத்துக்குள் தமது பதிவை மேற்கொள்ள வேண்டுமென, பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.உவைஸ் அறிவித்துள்ளார்.

உணவு விற்பனை செய்யும் நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து நுகர்வோருக்கு சுகாதாரமான உணவை வழங்க வேண்டும். இவ்வாறான ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காமல், அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் நிலவும் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனை அடுத்து கடந்த சில தினங்களாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு வரப்படுகின்றன. உணவு கையாளும் நிலையங்களும் அவற்றில் பணி புரிபவர்களும் ஒரு மாத காலத்துக்குள் பதிவு செய்வதுடன், தமக்குரிய மருத்துவச் சான்றிதழ்களை பணி புரிபவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

சுகாதாரமின்றிய உணவுகளாலும் தவறான உணவுப் பழக்கத்தாலும் அதிகளவானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆகையால் உணவுகளை கையாளும் நிலையங்களும் உணவு விற்பனை நிலையங்களும் நுகர்வோருக்கு தரமான, சுகாதாரமான உணவை விற்பனை செய்யும் பொருட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும், அவர் கூறினார்.

அம்பாறையில்

## முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு

**சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கிளைகளுக்கான புனரமைப்புப் பணி பூர்த்தியாகியதைத் தொடர்ந்து அது தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையை மு.கா. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமிடம் அம்மாவட்ட கட்சிக் கிளைகளின் புனரமைப்புக் குழுவினர் நேற்று முன்தினம் புதன் கிழமை (01) கையளித்தனர்.

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமின் விசேட பணிப்புரைக்கமைய, அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களின் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் மு.கா. கிளைகளை புனரமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் இதுவரையில் இறக்காமம், வரிப்பத்தான்சேனை, ஒலுவில், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் மு.கா.வின் 67 கிளைகள் புனரமைக்கப்பட்டதுடன், அக்கட்சிக்காக மத்திய குழுக்களை நியமிக்குமாறு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமிடம் அம்பாறை மாவட்ட கட்சிக் கிளைகளின் புனரமைப்புக் குழுவினர் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

மு.கா.வின் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, மு.கா.வின் உயர்பீட உறுப்பினரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேயருமான கலாநிதி சிராஸ் மீரா சாஹிப், மு.கா.வின் அம்பாறை மாவட்டச் செயலாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பில்

## காந்தியடிகள் உருவச்சிலைக்கு இந்திய உயர்ஸ்தானிகர் அஞ்சலி



**ஆரையம்பதி தினகரன், பெரிய போரதீவு தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாநகர காந்தி பூங்காவில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

மட்டக்களப்புக்கு நேற்று வியாழக்கிழமை சந்தோஷ் ஜா விஜயம் செய்தார்.

இதன்போது இந்திய உயர்ஸ்தானிகரை மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என்.சிவலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) உள்ளிட்ட பலர் சந்தித்து கலந்துரையாடினர்.

மட்டக்களப்பு மாநகரத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களையும் தற்போது நிலவும் குறைபாடுகளையும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் அவர்கள் எடுத்துரைத்தனர்.

ஏறாவூர் நகர சபையில்

## அலி சாஹிர் மௌலானாவுடன் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் சந்திப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரு பற்றிக் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுக்கும் இடையில் ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விசேட சந்திப்பு நடைபெற்றது.

விவசாயம், மீன்பிடி, குடியிருப்புக் காணி, ஏறாவூர் நகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடு உட்பட பல்வேறு விடயங்களில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் அலி சாஹிர் மௌலானா எம்.பி. எடுத்துக் கூறினார்.

ஏறாவூர் நகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாக தமக்கு மனிதாபிமான உதவி கிடைக்க வேண்டுமெனக் கோரி அந்நகர சபை செயலாளர் மூலமாக மகஜரும் பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த விடயங்களை மிகவும் அவதானமாக கேட்டறிந்த பிரித்தானிய உயர்ஸ்தானிகர், தன்னிடம் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்வதாகக் கூறினார்.

இந்த சந்திப்பின் போது ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச். எம்.ஹமீம், உலமா சபையின் ஏறாவூர் கிளையினர், வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பெண்களுக்கு தொழிற்பயிற்சி

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேசத்தில் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள பெண்களுக்காக மூதூர் ரவ்ழத்துல் அத்பால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தால் இலவச தொழிற்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாய், தந்தையை இழந்த, கணவனை பிரிந்த மற்றும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 17 வயது முதல் 25 வயது வரையான பெண்களை இலக்காகக் கொண்டு 'பெண்கள் ஆறுதல் இல்லத்தில்' பல தொழிற்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தையல் பயிற்சி, திருமண அலங்காரப் பயிற்சி, அலங்காரப் பொருட்கள் தயாரிப்பு, சமையல் கலை பயிற்சி, கணினி பயிற்சிகளுடன் ஆங்கிலமொழி பாடமும் கற்பிக்கப்பட்டு வருவதாக, மூதூர் ரவ்ழத்துல் அத்பால் சிறுவர் அபிவிருத்தி நிலைய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வாறானவர்களுடைய பிள்ளைகளின் நலன் கருதி பாடசாலை கல்வி மற்றும் மார்கக் கல்வியை பெறுவதற்கும் மேற்படி நிலையத்தால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினூடாகவே எமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்கலாம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



பொதுமக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதாக இருந்தால் அனைத்து அமைச்சு பதவிகளும் வட, கிழக்குக்கு கிடைக்க வேண்டுமென, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினூடாகவே எமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்கலாமெனவும், அவர் கூறினார்.

தமிழரசுக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின நிகழ்வு, மட்டக்களப்பின் பெரியகல்லாறு பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் புதன் கிழமை (01) நடைபெற்றதுடன், இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மே தின நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"மட்டக்களப்பில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பல்வேறு கட்சிகளுக்கு கடந்த பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்தமை காரணமாக இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் வந்துள்ளார்கள். ஆனால் எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதாக இருந்தால் அனைத்து அமைச்சு பதவிகளும் வட, கிழக்குக்கு கிடைக்க வேண்டும்.

மாகாண சபை, வடக்கு மற்றும் கிழக்கு இணைந்த கட்டமைப்பு போன்ற நிர்வாக கட்டமைப்பு தேவை. அவற்றினூடாக தமிழ் மக்களிலிருந்து கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்றவற்றுக்குரிய பல அமைச்சர்கள் உருவாகினால் வட, கிழக்கிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இந்நிலையில் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் தமிழரசுக் கட்சி மிக முக்கியமான தீர்மானங்களை எதிர்காலத்தில் எடுக்க வேண்டும்" என்றார்.

## சம்மாந்துறைக்கு புதிய பிரதி கல்வி பணிப்பாளர்

**காரைதீவு குறூப் நிருபர்**



சம்மாந்துறை கல்வி வலய முகாமைத்துவத்துக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி நைறூஸ்கான் ஹிதாயத்துல்லாஹ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கான நியமனக் கடிதத்தை சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா நேற்று வழங்கி வைத்துள்ளார்.

ஏற்கெனவே இப்பதவியிலிருந்த நிதர்சினி மகேந்திரகுமார் மட்டக்களப்பு வலயத்துக்கு இடமாற்றலாகிச் சென்றதை அடுத்து நிலவிய வெற்றிடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மூதூருக்கு சுற்றுலா பயணிகள் வருகை

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரில் அமைந்துள்ள கொட்டியாரக்குடா கடற்கரை, வட்டத்து முனை பூங்கா, பொழுதுபோக்கு பூங்கா, கெவுளியானமுனை கோபுரம் உள்ளிட்ட இடங்களுக்கு தற்போது அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

மட்டக்களப்பு – திருமலை நெடுஞ்சாலை கரையோரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உப்பாறு, கங்கை, இறால்குழி பாலங்கள் அமைந்துள்ள கடற்கரையோரங்களையும் இச்சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதுடன், கரையோரப் பகுதியில் காணப்படும் நீர் ஓடைகளுக்கும் மோட்டார் படகுகளில் பயணித்து மகிழ்கின்றனர்.

## கிண்ணியா நகரை மையப்படுத்தி அபிவிருத்தி

### பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல்

**கிண்ணியா மத்திய, கிண்ணியா தினகரன் நிருபர்கள்**

கிண்ணியா நகரை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டத்தை அடையாளப்படுத்தும் முகமாக கிண்ணியா பிரதேச செயலகத்தில் விசேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம்.அதாஉல்லா தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றதுடன், இதன்போது கிண்ணியா நகர அபிவிருத்தி திட்டம் மற்றும் அதற்கான முன்மொழிவு தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

கிண்ணியா நகர அபிவிருத்தியின் மையப்புள்ளியாக கிண்ணியா பாலத்திலிருந்து உப்பாறுவரையான கரையோரப்பகுதி அடையாளம் காணப்பட்டதுடன், இது தொடர்பாக திட்டவரைபு மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

கிண்ணியா பாலத்தின் கீழ்ப்பகுதியை மக்களுக்கு மகிழ்வூட்டும் தளமாக மாற்றுதல், பெரியளவிலான போக்குவரத்து பஸ் நிலையம் அமைத்தல், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் தோனா பகுதியில் சுற்றுலா ஹோட்டல்கள் அமைத்தல் தொடர்பாகவும் தற்போது தோனா பகுதியிலுள்ள கருவாட்டுக் கடைகளை உப்பாறுக்கு மாற்றுவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## காத்தான்குடியில் பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி ஒக்சி கார்டனின் (பசுமை கழகம்) ஏற்பாட்டில் மாவட்டத்தில் ஒரு இலட்சம் பயன் தரும் கன்றுகள் நடும் வேலைத்திட்டத்தின் கீழ் காத்தான்குடி கப்பல் ஆலிம் வீதியில் பயன் தரும் கன்றுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (01) நடப்பட்டன.

மேற்படி கழகத் தலைவர் எம்.ஐ. எம்.கமால்தீன் தலைமையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றதுடன், இதன்போது காத்தான்குடியில் வசிப்பவர்களுக்கு பயன் தரும் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.



பயன்தரும் கன்றுகள் வளர்ப்பதின் அவசியம் தொடர்பாகவும் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்தும் வகையில் அவர்களை பாதுகாக்கின்ற ஒரு பொழுதுபோக்காகவும் பயன் தரும் கன்றுகள் நடும் விடயம் அமைந்துள்ளதாக, இந் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளது உரையில் குறிப்பிடப்பட்டது. மேலும் நகரில் வெப்பநிலையை கட்டுப்படுத்தி, சுத்தமான காற்றை சுவாசிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்க முடியுமெனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயஸ்ரீதர், காத்தான்குடி நகர சபைச் செயலாளர் றிப்கா சபீன், காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஜநாயக்க, சமூகநலப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஜவாஹிர் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# உலகில் முதல்தர பொருளாதார சக்தியாக மாறும் சவுதி



உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய மாநாடு முதன் முறையாக சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் ஏப்ரல் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெற்றுள்ளது. பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் தலைமையில் நடைபெற்றுள்ள இந்த மன்றத்தில் உலகின் பல நாடுகளது தலைவர்களும், அமைச்சர்களும் பங்குபற்றினர். இம்மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் அவர் தலைமையிலான தூதுக்குழுவினரும் கலந்து கொண்டனர். அத்தோடு முதலீட்டாளர்கள், வர்த்தகத் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள், துறைசார் வல்லுநர்கள் என உலகின் முன்னணி முக்கியஸ்தர்கள் பெருந்திரளாகப் பங்குபற்றிய இம்மாநாடு வெற்றிகரமாக நிறைவுற்றுள்ளது.





டாவோஸ் மாநாடு என பொதுவாக அறியப்படும் உலக பொருளாதார மன்றத்தின் இம்மாநாடு வழமையாக சுவீட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறக்கூடியதாகும். உலக அரசியல் தலைவர்கள், முதலீட்டாளர்கள், பொருளியல் நிபுணர்கள், வர்த்தகத் தலைவர்கள் என துறைசார்ந்த அதிதிகள் எனப் பெருந்திரளானோர் பங்குபற்றக் கூடிய மன்றமே இது.

இந்த மன்றம் 1971 இல் ஜேர்மன் நாட்டின் பொறியியலாளர் ஒருவர் ஸ்தாபித்ததோடு பொருளாதாரம், வர்த்தகம், அரசியல், கல்வியியல் உள்ளிட்ட துறைகளை மேம்படுத்துவதை அவர் நோக்காகக் கொண்டிருந்தார். அதனால் இம்மன்றத்தின் மாநாடுகள் பெரும்பாலும் டாவோஸில் நடைபெறக்கூடியதாக இருந்து வந்தது.

இவ்வாறான சூழலில் சவுதி அரேபிய பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மானின் முயற்சியின் பயனாக இம்மன்றத்தின் இவ்வருட மாநாடு ரியாத் நகரில் நடைபெற்றுள்ளது. அதாவது ஐம்பது வருடங்களுக்கு பின்னர் முதல் தடவையாக, டாவோஸில் இருந்து ரியாத் நகருக்கு உலகப் பொருளாதார மன்றம் இடமாற்றம் பெற்றிருக்கிறது.

> சர்வதேச பொருளாதார மன்றம் ரியாத் மாநகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், "இன்சைபர் மன்கி" எனும் சர்வதேச பத்திரிகை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. இளவரசர் முஹம்மத் பின் சல்மான், மத்திய கிழக்கில் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராகவும், சீனா, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ஜனாதிபதிகளுக்கு அடுத்தபடியாக உலகில் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராகவும் இருக்கிறார்' என்று அப்பத்திரிகை சுட்டிக்காட்டி இருந்தது.



இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் "விஷன் 2030" வேலைத்திட்டங்களது முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் உலக பொருளாதார மன்றத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அதன் பிரதிபலனாகவே டாவோஸிலிருந்து ரியாத்துக்கு உலகளாவிய வணிக சமூகம் நகர்ந்திருக்கிறது. 'விஷன் 2030 வேலைத்திட்டத்தின் எட்டாவது ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி நிறைவடைந்தது. அதன் எட்டாவது ஆண்டறிக்கை வெளியிடப்பட்ட 03 நாட்களுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட ஆண்டு நிறைவில், பல்வேறு நிலைகளில் சவுதி அரேபியா அடைந்துள்ள மாபெரும் முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துக் காட்டும் வகையில் இந்த உலகளாவிய மன்றம் நடைபெற்றிருக்கிறது.

'சர்வதேச ஒத்துழைப்பு, அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கான ஆற்றல்' என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்றுள்ள இம்மன்றத்தில், உலகின் பல நாட்டுத் தலைவர்களுடன் 1,000க்கும் மேற்பட்ட சிரேஷ்ட அதிகாரிகள், சர்வதேச நிபுணர்கள், பொருளாதார வல்லுநர்கள், தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் பங்குபற்றியுள்ளனர். 92 நாடுகளில் இருந்து பல்துறை சார்ந்த சர்வதேச நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கிய தனியார் நிறுவனங்கள் பலவும் இம்மன்றில் பங்குபற்றி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சவுதி பொருளாதார ரீதியாக மிகவும் முன்னேறிய நாடாக மாறியிருப்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட இம்மன்றம் பெரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இது சவுதி அரேபியாவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

சவுதி அரேபியா உலகில் எண்ணெய் வள நாடுகளில் ஒன்றாகும். என்றாலும் எண்ணெய் வளமின்றி பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்பதே இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் பிரதான இலக்காகும். அதனை அடிப்படையாகக் கொண்டு தான் அவர் 'விஷன் 2030' வேலைத்திட்டத்தை தயாரித்து முன்னெடுத்து வருகிறார். இத்திட்டத்தின் கீழ் நியோம், உலகின் ஐந்தாவது தனித்துவமான பெரிய திட்டமான திர்இயா, முகஅப், கித்திய்யா, அல் உலா சுற்றுலா மையம், மன்னர் சல்மான் மற்றும் செங்கடல் சர்வதேச விமான நிலையம், அல்ரியாத் விமான சேவை, "விசிட்டர் இன்வெஸ்டர்" வணிக விசா சேவை உள்ளிட்ட பல பாரிய அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சவுதி அரேபியா அடைந்து வரும் பாரியளவிலான பொருளாதார முன்னேற்றங்களின் பின்புலத்தில் சர்வதேச நாணய நிதியம் அதன் பிராந்திய அலுவலகத்தை ரியாத் நகரில் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இது சவுதியின் பொருளாதார கூட்டாண்மைகளை வலுப்படுத்த வழிவகுப்பதோடு சவுதி அரேபியாவையும் வளைகுடா பிராந்தியத்தையும் பொருளாதார ரீதியில் உலகளாவிய சக்தியாக மாற்றத் துணை புரியும்.

இம்மாநாடு தொடர்பில் சவுதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அல்இப்ராஹீம் செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றும் போது, 'உலகப் பொருளாதார மன்றமானது, நமது உலகளாவிய பங்காளிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண ஆக்கபூர்வமான உரையாடல்களை முன்னெடுக்க உதவும் ஒரு புதிய தளம்' என்று குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான சூழலில் உலக பொருளாதார மன்றத்தின் மாநாடு ரியாத்தில் நடைபெற்றிருப்பதானது, சவுதிக்கும் உலகப் பொருளாதார மன்றத்திற்கும் இடையில் வலுவான இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்தியுள்ளமையை வெளிப்படுத்தி நிற்பதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் விண்வெளி துறைகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் சவுதியில் விண்வெளி மையத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கையிலும் ரியாத்தில் நடைபெற்ற மாநாட்டின் உலகப் பொருளாதார மன்றத்துடன் சவுதி கையெழுத்திட்டுள்ளது.

அதேநேரம் மனிதாபிமான நெருக்கடிகள், காலநிலை மாற்றம் மற்றும் பொருளாதார சவால்களை உலகம் எவ்வாறு கையாள வேண்டும் என்பன குறித்து இம்மாநாட்டில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அத்தோடு பலஸ்தீன மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டிய தன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர்களுக்கும் இடையிலான கூட்டு சந்திப்பொன்றும் ரியாத் பொருளாதார மாநாட்டின் ஒரு அங்கமாக நடைபெற்றது.

சவுதி வெளிவிவகார அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், காஸா மற்றும் ரஃபாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் உடனடி போர் நிறுத்தத்தின் முக்கியத்துவம், அவசர மனிதாபிமான உதவியை மேலும் உறுதி செய்வதற்கான முயற்சிகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேநேரம், காஸா பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக அரபுஇஸ்லாமிய கூட்டு மாநாட்டின் ஊடாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் கூட்டம் சவுதி வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரியாதில் நடைபெற்றது.

சவுதி அரேபியாவானது பலஸ்தீனில் அமைதியைக் கொண்டு வர உலகத் தலைவர்களுடன் எப்போதும் கலந்தாலோசித்து வரும் நாடாகும். சவுதி அரேபிய ஸ்தாபக மன்னர் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் காலம் தொட்டு இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரினதும் மற்றும் பட்டத்து இளவரசரினதும் காலம் வரையான வரலாறு நெடுகிலும் பலஸ்தீன விடயத்தில் மிகக் கவனமெடுத்து வருகின்றனர். மேலும் சவுதி பாரிய அபிவிருத்தியடைந்த நாடாக மாறியுள்ளதன் பயனாக ஜி 20 நாடுகள் அமைப்பு, பிரிக்ஸ் அமைப்பு போன்ற பலமான பொருளாதார அமைப்புகளுடனும் சவுதி தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது.

2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் சவுதி அரேபியா முக்கியமான பொருளாதார முன்னேற்றங்களை அடைந்துள்ளது. அதன் பின்னணியில் பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகள் பல ரியாத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளன. அதன் ஊடாக உலகெங்கிலும் உள்ள பெரிய நாடுகளுடன் கூட்டணிகளையும் பொருளாதார முகாம்களையும் சவுதி அமைத்துக் கொண்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இளவரசர் முகம்மத் பின் சல்மான், 'பொருளாதார பன்முகப்படுத்தல் தொலைநோக்கு இலக்குகளுடன் ஒத்துப்போகும் மாபெரும் திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார். இதில் 'எக்ஸ்போ 2030' சவுதி வரலாற்றில் தடம் பதித்த ஒன்றாக விளங்குகிறது.

மேலும் தனது பொருளாதார மேம்பாட்டை மேலும் ஸ்தீரப்படுத்தவென சவுதி பல சர்வதேச பொருளாதார மாநாடுகளை ஏற்கனவே நடாத்தியுள்ளது. அவற்றில் அரபுசீன வணிகர்கள் மாநாட்டின் பத்தாவது அமர்வு, சவுதி - அரபு ஆபிரிக்க பொருளாதார மாநாடு, சவுதி - துருக்கி முதலீட்டு மாநாடு, சவுதி - கொரிய முதலீட்டு மாநாடு, சவுதி - ஐரோப்பிய முதலீட்டு மன்றம், உலக சுற்றுலா தின நிகழ்வுகள் மற்றும் எதிர்கால முதலீட்டு முன்முயற்சியின் ஏழாவது மாநாடு என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

உலகப் பொருளாதாரங்களில் வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக சவுதி விளங்குகிறது. இது 'விஷன் 2030 உள்ளடக்கியுள்ள இலக்குகளால் நிரம்பப்பெற்றுள்ளது. அதனால் புதுமை மற்றும் நிலைபேறான பல்வகைப்படுத்தலுக்குரிய உலகளாவிய மையமாக சவுதி அரேபியாவை மாற்றுவதற்கும் வலுவான அரபு பொருளாதாரமாக திகழுவதற்கும் அடித்தளமாக அமைந்தது.



சவுதி அரேபியாவுக்கும், அரேபிய தீபகற்பத்திற்கும், அனைத்து முஸ்லிம்களுக்கும் உலக பொருளாதார நிபுணர்களுக்கும் நம்பிக்கையையும், பெருமையும், இலட்சியத்தையும் விதைத்த பெருமை இளவரசர் முஹம்மத் பின் சல்மானையே சாரும். அதேநேரம் சமகாலப் பொருளாதார சிந்தனையை மேம்படுத்துவதற்கும், குடிமக்களுக்கு புதிய அறிவியல் எல்லைகளைத் திறப்பதற்கும் பங்களிக்கும் தலைவராக விளங்குகிறார் இளவரசர் முஹம்மத் பின் சல்மான்.

உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான்,

'பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றலில் உலகளாவிய தாக்கத்தை உருவாக்கி, விஷன் 2030 மூலம் சவுதியை மேம்படுத்துவதிலும், அனைத்து துறைகளிலும் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் செழிப்புக்கான பாதையில் பயணிக்கவும் விஷன் 2030 வழிவகுத்துள்ளது.

மேலும் அனைவருக்கும் விரிவான வளர்ச்சியை ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த பொருளாதார நெகிழ்வுத்தன்மையை அடைதல் மற்றும் பிராந்தியத்திலும் உலகிலும் ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் அமைதியை ஆதரிக்கும் சக்தியாக செயல்படுகிறோம். இந்த நோக்கத்துடன் சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான சவுதியின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துகிறோம். பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி பிராந்திய மற்றும் உலகளாவிய பங்காளிகளுடன் கூட்டுறவுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம்.

சர்வதேசப் பிரச்சினைகளில் சவுதி ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. வலுவானதும், நீடித்த மற்றும் நிலையான உலகளாவிய அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் பங்களிப்புக்களை வழங்குகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். சர்வதேச ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் ஆற்றலின் முக்கியத்துவத்தை சவுதி ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டுள்ளது. அதனை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தன் உரையின் ஊடாக வெளிப்படுத்தினார். சவுதி அரேபியா உள்நாட்டில் காணும் பொருளாதார மற்றும் சமூக மாற்றத்திற்கு இணையாக சர்வதேச பிரச்சினைகளிலும் முக்கிய பங்கை வகிக்கிறது. சர்வதேச அளவில் சவுதி முன்னெடுத்த முயற்சிகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது. சவுதி அரேபியாவில் சமூக வாழ்வு மற்றும் அதில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார முன்னேற்றங்கள், 2016 முதல் தொழிலாளர்களில் பெண்களின் பங்களிப்பினாலும் இரட்டிப்பானது.

'Saudi Vision 2030' என்பது ஒரு பயணம், அது இறுதி இலக்கு அல்ல, இது சவுதி அரேபியாவின் தற்போதைய சாதனைகளின் ஆரம்ப நிலை மாத்திரமேயாகும். இன்னும் பலவற்றைச் செய்ய நாங்கள் அயராது உழைக்கிறோம். இவ்வாறு எதிர் காலத்திற்கான வரைபடத்தை வழங்கும் சிறந்த உரையுடன் சர்வதேச பொருளாதார மன்றத்தில் அறிக்கைகளை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் முன்வைத்தார்.

சர்வதேச பொருளாதார மன்றம் ரியாத் மாநகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், "இன்சைடர்மன்கி" எனும் சர்வதேச பத்திரிகை இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. இளவரசர் முஹம்மத் பின் சல்மான், மத்திய கிழக்கில் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராகவும், சீனா, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ஜனாதிபதிகளுக்கு அடுத்தபடியாக உலகில் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராகவும் இருக்கிறார் என்று அப்பத்திரிகை சுட்டிக்காட்டி இருந்தது.

இன்று சவுதி இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் தலைமையில் உலகளாவிய உச்சி மாநாடுகள், கூட்டங்கள் அடிக்கடி நடைபெறும் பூமியாக விளங்குகிறது. சவுதி, இளவரசர் மத்திய கிழக்கின் தலை சிறந்த தலைவராகவும் உலகளவில் மக்கள் மதிக்கப்படுகின்ற நான்காவது சிறந்த தலைவராகவும் இருக்கிறார். உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இராஜதந்திரிகளும் இளவரசர் முஹம்மத் பின் சல்மானை சந்திப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

அவரது அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள் சீர்திருத்தங்களை உலகத் தலைவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். ஊழல் ஒழிப்பு, போதை ஒழிப்பு, பயங்கரவாத ஒழிப்பு பாதுகாப்பு, சிறந்த பொருளாதாரக் கொள்கை, நாட்டின் அபிவிருத்தி, மனிதாபிமான நடவடிக்கைகள் என்பன சவுதியை உலகின் முக்கிய நாடுகளில் ஒன்றாக உருவாக்கியது. இவை இளவரசர் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களும் உலகளாவிய அங்கீகாரமும் ஆகும்.

இதேவேளை ரியாத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் அமைச்சர் அலி சப்ரி பங்குபற்றியமை இலங்கைக்கும் பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெற வழிவகுக்கும். இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த சவுதி அரேபியா பல வகையிலும் ஒத்துழைப்புக்களை நல்கி வருகிறது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த சவுதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அல் இப்ராஹீம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் முக்கிய அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதோடு இலங்கைப் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையிலான ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.


> இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி சவுதி அரேபியா ஊடாக இலங்கை பொருளாதாரத்தை வலுப்படுத்த தொடர்ந்தும் உதவி ஒத்துழைப்புக்களையும் பல இராஜதந்திர நகர்வுகளையும் முன்னெடுத்து வருவதும் சுட்டிக் காட்டத்தக்கது.

அதேநேரம் இலங்கைக்கான சவுதி தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியும் சவுதி அரேபியா ஊடாக இலங்கை பொருளாதாரத்தை வலுப்படுத்த தொடர்ந்தும் உதவி ஒத்துழைப்புக்களையும் முன்னெடுத்து வருவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். மேலும் இம்மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்து நடாத்தி முடிக்கப்பட்டிருப்பதானது இரு புனித பள்ளிவாசல்களின் காவலரும், சவுதி மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சவுத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மானின் தலைமைக்கும் கிடைக்கப்பெற்றுள்ள மாபெரும் வெற்றி என உறுதிபடக்கூறலாம்.

எனவே இரு புனித பள்ளிவாசல்களின் காவலரும், சவுதி மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சவுத் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான், சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் ஆல் சவுத், பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் அல் இப்ராஹீம் மற்றும் சவுதி அரேபிய உயர் அதிகாரிகள் அனைவரினதும் சிறந்த மற்றும் மகத்தான முயற்சிகளுக்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.







அஷ் ஷேய்க் எம்.எச். ஷேஹுத்தீன் மதனி
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நலன்புரி நிறுவனம், கொழும்பு.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான




திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13


## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

01. பின்வரும் உருக்களில் வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.




02. ஒரு கூட்டத்தில் சேர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான மூன்று பொருட்கள் எவை?




i. ஆகாய விமானம், பேருந்து, குருவி
ii. பட்டம், குருவி, ஆகாய விமானம்
iii. ஆகாய விமானம், குருவி, பேருந்து

03. கட்டத்துள் காணப்படும் உருவை உருவாக்க அவசியமான உருத்தொகுதிகளைக் கொண்ட கட்டம் எது?



04. “யானையின் நிறையில் பரிசாகக் கிடைத்த புத்தகங்கள் உள்ளன” இக் கூற்றிற்கு மிகவும் பொருந்தக்கூடிய கருத்து.
i. பரிசுகள் யானையின் நிறையளவிற்கு கிடைத்துள்ளன என்பதாகும்.
ii. பரிசாக நிறைய புத்தகங்கள் கிடைத்துள்ளன என்பதாகும்.
iii. பெருந்தொகையான புத்தகங்கள் உள்ளன என்பதாகும்.

05. கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்யுங்கள்.




06. இந்த கட்டத்துள் நிரையாகவோ அல்லது நிரலாகவோ ஒரே இலக்கம் இரண்டு முறை ஒரு வரிசையில் வராவிடின் A, B என்ற எழுத்துக்களுக்கு வரவேண்டிய இலக்கங்கள் முறையே
i. 2, 3    ii. 4, 2    iii. 1,4


| | | | |
|---|---|---|---|
| 1 | | B | 4 |
| | 4 | 3 | |
| A | 2 | 1 | |
| 3 | 1 | | 2 |

07. துஷாரி 20 தாள்களைக் கொண்ட புத்தகம் ஒன்றில் $\frac{1}{4}$ ஐ வாசித்து முடித்தாள். அவளுக்கு இன்னும் வாசிக்க உள்ள தாள்கள் எத்தனை?
i. 30    ii. 10    iii. 120

08. அடுத்த கட்டத்திற்கு வரவேண்டிய உரு எது?



09. கீழுள்ள A, B, C ஆகிய படங்கள் மூன்றையும் அவதானியுங்கள்.



A    B    C

மூன்று படங்களிலும் இரண்டு படங்கள் சமனாகும். ஒரு படத்தில் பொதுத் தன்மையைக் காண முடியாது. சமமான பொதுத் தன்மை உடைய சோடியாக்கக் கூடிய இரண்டு படங்களாவன.
i. A, B    ii. A, C    iii. B, C

10. கணிதம், தமிழ்மொழி, சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய நான்கு பாடங்களில் தேவி இரண்டு பாடங்களை விரும்பவில்லை. பவானுக்கு விருப்பமான பாடம் கணிதம் ஆகும். மதி ஆங்கிலம் மற்றும் சுற்றாடல் பாடங்களில் மிகவும் விருப்பமுடையவர். இமேஷாவுக்கு விருப்பமில்லாத பாடங்களான கணிதம் மற்றும் தமிழ்மொழி பாடத்தில் தாரணி மிகவும் விருப்பமுடையவர். இக்கூற்றுகளுக்கேற்க உறுதியாக கூறக்கூடியது,
i. தேவி கணித பாடத்தில் விருப்பம் காட்டுபவர்.
ii. தாரணி தமிழ்மொழி பாடத்தில் விருப்பம் காட்டுபவர்.
iii. மதி சுற்றாடல் பாடத்தில் விருப்பம் இல்லாதவர்.

11. கீழே தரப்பட்டுள்ள உடைந்த பென்சில் ஒன்றின் 4 பகுதிகளையும் கொண்டு புதிய பென்சிலை உருவாக்கப் பொருத்த வேண்டிய சரியான முறையைக் காட்டும் விடை



i. 4, 2, 1, 3    ii. 3, 4, 1, 2    iii. 4, 1, 3, 2

12. பேருந்து ஒன்றில் பெண் பயணிகளை விட இரண்டு மடங்கு ஆண் பயணிகள் உள்ளனர். பெண் பயணிகளில் அரைவாசி 5 பேர் எனின் பேருந்தில் உள்ள முழு பயணிகளின் எண்ணிக்கையாவது?
i. 10    ii. 30    iii. 20

13. நீளம் பாயும் போட்டி ஒன்றில்
- கமல் விமலை விட தூரம் பாய்ந்தான்.
- சமன் கமலை விட தூரம் பாய்ந்தான்.
மேலுள்ள இரண்டு கூற்றுக்களுக்கிணங்க கூடுதலான தூரமும் குறைவான தூரமும் பாய்ந்த இரண்டு பிள்ளைகளின் ஒழுங்கு முறையாவது
i. கமல், சமன்    ii. விமல், கமல்    iii. சமன், விமல்

14. - சமிலா சப்னாவை விட கூடுதலான புள்ளி பெற்றுள்ளார்.
- சப்னா தனுவை விட குறைவான புள்ளி பெற்றுள்ளார்.
- தனு சமிலாவை விட கூடுதலான புள்ளி பெற்றுள்ளார்.
இதற்கேற்ப புள்ளிகள் கூடிக்கொண்டு செல்லும் ஒழுங்கு முறையில் புள்ளிகள் பெற்றுள்ளோர்,
i. சப்னா, சமிலா, தனு    ii. சமிலா, தனு, சப்னா    iii. சப்னா, தனு, சமிலா

15. கோலத்திற்கேற்ப வெற்றுக் கட்டத்திற்கு பொருத்தமான இலக்கம் எது?

1 → 10 → 30 → [ ] → 600

i. 120    ii. 60    iii. 30

16. நிமாலி காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவளது நிழல் இடது கை பக்கம் விழுந்தது. அவள் எந்த திசையை நோக்கி பயணம் செய்தாள்?
i. வடக்கு    ii. மேற்கு    iii. தெற்கு


17. பாடசாலை ஒன்றில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு முறை மணி ஒலிக்கப்படும். இரண்டாவது முறையாக மு.ப. 8.10 இற்கு மணி ஒலித்திருந்தது. 4ஆவது முறையாக எத்தனை மணிக்கு மணி ஒலிக்கப்படும்.
i. பி.ப. 10.10    ii. மு.ப. 11.10    iii. மு.ப. 10.10

18. மரமொன்றில் A கிளையில் இருந்த குருவிகளில் இரண்டு B கிளைக்கு பறந்து சென்ற பின்னர் 3 குருவிகள் எஞ்சியிருந்தன. அப்போது B கிளைகளில் 4 குருவிகள் இருந்தன. ஆரம்பத்தில் A மற்றும் B கிளைகளில் இருந்த குருவிகளின் எண்ணிக்கை முறையே
i. 2, 7    ii. 5, 2    iii. 4, 5

19. 2 மாம்பழங்களின் விலை = 1 அப்பிளின் விலை
2 அப்பிள்களின் விலை = 1 அன்னாசியின் விலை
மேலுள்ள விலைக்கு ஏற்ப பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
i. 4 மாம்பழங்கள் வாங்கும் விலைக்கு அப்பிள்கள் 6 வாங்கலாம்.
ii. 2 அன்னாசிகளின் விலைக்கு மாம்பழங்கள் 8 வாங்கலாம்.
iii. 2 அப்பிள்களின் விலைக்கு மாம்பழங்கள் 2 வாங்கலாம்.

20. லக்மாலிடம் 2 ரூபாய் நாணயக்குற்றிகளும் 5 ரூபாய் நாணயக் குற்றிகளுமாக 19.00 ரூபாய் இருந்தது. அதில் இருந்த 2 ரூபாய் நாணயக்குற்றிகள் எத்தனை?
i. 2    ii. 4    iii. 8


21. படத்தில் காணக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 12    ii. 8    iii. 10



22. ஒரு பாடசாலையில் உள்ள மாணவர்களது வீடுகளின் தூரம் கீழேயுள்ளவாறு அமைந்துள்ளன. பாடசாலைக்கு 200 m கிழக்கில் கீதாவின் வீடும், பாடசாலைக்கு 400m தெற்கில் கவிதாவின் வீடும், கவிதாவின் வீட்டிற்கு 200m கிழக்கில் விஷ்ணுவின் வீடும் அமைந்துள்ளன. கீதாவின் வீடு அமைந்திருப்பது விஷ்ணுவின் வீட்டிற்கு
i. 400m தெற்கில்    ii. 600m வடக்கில்    iii. 400m வடக்கில்

23. A சாக்கில் 100 தேங்காய்கள் இருந்தன. B சாக்கில் A சாக்கை விட 30 தேங்காய்கள் குறைவாகும். C சாக்கில் B சாக்கைவிட இரண்டு மடங்கு தேங்காய்கள் உள்ளன. A, B மற்றும் C சாக்குகளில் தேங்காய்களின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கு முறையாவது
i. BAC    ii. ABC    iii. BCA

24.



X    Y    Z

மேலுள்ள X Y Z என்ற கனவுருக் குற்றிகளைக் கொண்டு சதுரமுகியொன்றின் வடிவினை உருவாக்க ஒன்றின் மேல் ஒவ்வொரு கனவுருக்களை வைத்தால் எத்தனை கனவுருக் குற்றிகள் அவசியமாகும்.
i. 12    ii. 15    iii. 4

25. நிற மின்விளக்கு கோர்வையில் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை என்ற ஒழுங்கில் மின் விளக்குகள் காணப்படுகின்றன. அங்கு 65ஆவது மின்விளக்கின் நிறம் யாது?
i. நீலம்    ii. சிவப்பு    iii. மஞ்சள்

26. குறித்த ஒரு மாதத்தின் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் அம்மாதத்திலுள்ள சனிக்கிழமைகளின் திகதிகளாக அமையக்கூடியன.
i. 2, 9    ii. 9, 10    iii. 15, 29

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்


27. கடிகாரமொன்றில் மணிமுள் ஒரு நாளில் எத்தனை தடவைகள் சுற்றும்
i. 24 ii. 12 iii. 48

28. கீழுள்ள எண் கோலத்தில் இடைவெளிக்குப் பொருத்தமான விடையை வெற்றுக்கட்டத்தில் எழுதுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 5 | 7 | 6 | 8 |
| 24 | 48 | 35 | ...... |


i. 63 ii. 56 iii. 48

29. தரப்பட்ட உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?




i. 18 ii. 28 iii. 32

- **மாவட்டம், இலங்கை, மாகாணம், கிராமம் என்பன முறையே குறியீடுகளால் கீழே காட்டப்பட்டுள்ளன.**



30. அவற்றுக்கிடையே சரியான தொடர்பை காட்டும் விடை எது?



i. ii. iii.

- **இலக்கம் 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

```
  P Q R        S T U        R T R
+ P Q R      - T R Q      - U R U
  4 2 8        1 2 2        1 2 1
```


31. இதற்கேற்ப P + Q+ T விடைக்கு சமனானது,
i. 8 ஆகும் ii. 9 ஆகும் iii. 18 ஆகும்

32. இதற்கமைய P + S – U இன் பெறுமானம்,
i. Q ii. T iii. U

33. ஒரு இறாத்தல் பாணில் இருந்து 20 பாண் துண்டுகளை வெட்டி இரு பாண் துண்டுகளுக்கு இடையே 10g மாஜரின் பூசப்படுகிறது. மாஜரின் 300g பூசப்பட்டதெனின் கொண்டு வரப்பட்ட பாண் இறாத்தலின் எண்ணிக்கை யாது?
i. 2 ii. 3 iii. 4

34. சரஸ்வதியின் தற்போதைய வயது 11 வருடங்களாகும். அவளுடைய தந்தையின் வயது அவளின் வயதிலும் 3 மடங்கிலும் 2 வருடங்கள் குறைவாகும். சரஸ்வதியின் தந்தையின் வயது யாது?
i. 33 வயது ii. 31 வயது iii. 35 வயது

35. கீழே காணப்படுவது கம்பியை வளைத்து செய்யப்பட்ட சட்டகமாகும். இது A என்ற புள்ளியில் ஆரம்பித்து A என்ற புள்ளியிலேயே முடிவடைகிறது. இதைச் செய்ய கம்பியை எத்தனை தடவைகள் மடிக்க வேண்டும்?
i. 11 தடவைகள்
ii. 12 தடவைகள்
iii. 8 தடவைகள்




36. ஒரு நீர்க் குழாயில் இருந்து நிமிடத்துக்கு 15 லீற்றர் தண்ணீர் வெளியேற்றப்படுகின்றது. இதேபோல் சமமான 3 நீர்க் குழாய்கள் ஒரே நேரத்தில் திறக்கப்படுமாயின் ஒரு குழாயின் மூலமாக 5 நிமிடத்தில் எவ்வளவு நீர் வெளியேற்றப்படும்.
i. 65 லீற்றர் ii. 225 லீற்றர் iii. 75 லீற்றர்

37. கீழே தரப்பட்டவைகளை வாசித்து வரவேண்டிய சொல்லை எழுதுங்கள்.
முயலில் உண்டு வயலில் இல்லை.
கண்ணில் உண்டு காதில் இல்லை.
கம்பில் உண்டு காதில் இல்லை ......................

38. மீனவனுக்கு கடல் போல விளையாட்டு வீரனுக்கு ....................
i. விளையாட்டுத் திடல் ii. பந்து iii. சப்பாத்து

39. ரவி வைத்திருந்த பணத்தில் ¼ பங்கை என்னிடம் தந்த பின்னர் அவனிடம் ரூபாய் 15.00 மிகுதியாக இருந்தது. எனில் அவன் கொடுத்த பணம் எவ்வளவு?
i. ரூ. 20.00 ii. ரூ. 15.00 iii. ரூ. 24.00

40. தரப்பட்ட கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு 2 மணித்தியாலங்களின் பின்னர் கடிகார முகத்தில் தெரியும் நேரம் என்ன?
i. மு.ப. 1.30 ii. பி.ப. 12.30 iii. பி.ப. 1.30



# கடந்த வார (26.04.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. உயிரினங்களை துன்புறுத்தக் கூடாது
02. வேடிக்கை
03. நாம்
04. கயிறு இறுகியதால்
05. கழுத்து
06. ஆரம்பத்திலே
07. i. நல்லவனே ii. சென்றன
08. i. அடிமை ii. வாடி
09. i. வாதி ii. சுயநலவாதி

**II.**
10. i. சொல்லும்
11. ஒற்றுமையே பலம்
12. i. காற்று ii. பட்டம்
13. i. வானொலி நிகழ்ச்சிகள் படிக்காத பாமர மக்களிடையே கூட எளிதில் சென்று விடுகிறது
ii. நாம் எப்போதும் உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும்.
14. i. கம்பீரம் ii. சொன்ன சொல் தவறுதல்
15. i. கன்று ii. கூட்டம்

**III.**
16. வேருடன் கெடும்
17. i. நகைச்சுவையாக கதை சொல்பவன்
ii. அறுபதாவது ஆண்டு விழா
iii. பத்தாண்டு காலப்பகுதி
18. i. தண்மை ii. ஆக்கம்
19. i. My cat has four legs ii. I am reading a book
20. i. நண்பன் ii. அத சோதன்ன
21. 5 தடவைகள்
22. ரூ. 87.50
23. 26 மணி 30 நிமிடம்
24. 6
25. 291m
26. 16
27. 8இற்கு நேராக
28. i. $\frac{6}{10}$ ii. 0.4
29. 135. 00, 150.00, 210.00, 645.00

**IV.**

| | | |
|---|---|---|
| 30. 2 | 39. 3 | 49. 2 |
| 31. 2 | 40. 3 | 50. 1 |
| 32. 2 | 41. 2 | 51. 1 |
| 33. 3 | 42. 2 | 52. 1 |
| 34. 2 | 43. 2 | 53. 2 |
| 35. 2 | 44. 2 | 54. 2 |
| 36. 3 | 45. 3 | 55. 1 |
| 37. 2 | 46. 2 | 56. 2 |
| 38. 3 | 47. 1 | 57. 2 |
| | 48. 1 | 58. 2 |

## கண்டல் தாவரங்களை பாதுகாக்க நடவடிக்கை

# முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மண்டைதீவுக்கு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோச கரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் (Mr. Erik Solheim) வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸுடன் யாழ்ப்பாணம் மண்டைத்தீவு பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

கண்டல் தாவரங்களினால் இயற்கையாக அமைந்த நன்மைகள் பற்றியும், மண்டைதீவில் கண்டல் தாவரங்களின் பரம்பல் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன.



வெள்ள அனர்த்தத்தை தவிர்க்கவும், நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கவும் இப்பிரதேசத்தில் வளரும் கண்டல் தாவரங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தவகையில் அவ்வாறான பங்களிப்பை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன.

# புங்குடுதீவு மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் ஆரம்பம்

*(யாழ்.விசேட நிருபர்)*



யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் நேற்றைய தினம் ஆரம்பமானது.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் , சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் முன்னிலையில் அகழ்வுபணிகள் ஆரம்பமானது.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்பு பணிகளின் போது மனித எலும்பு கூட்டு எச்சங்கள் அண்மையில் மீட்கப்பட்டன.

அதனை தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அதுதொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அப்பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து அவ்விடத்தில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதனடிப்படையில் நேற்றையதினம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

# கண்டி– யாழ்ப்பாணம் பஸ்சில் உயிரிழந்தவர் அடையாளம்

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற பஸ்சில் கடந்த 30 ஆம் திகதி உயிரிழந்த முதியவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தென்மராட்சி வரணிப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாத்தளையிலுள்ள உறவினர்களுடைய வீட்டுக்குச் சென்று மீண்டும் பஸ்சில் வீடு திரும்பிய போதே இவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதியவர் கண்டி யாழ்ப்பாண பஸ்சில் பயணம் செய்திருந்தார். நீண்டநேரம் அசைவற்று இருந்தமையால் சந்தேகமடைந்த நடத்துனர் அவரை தட்டி எழுப்ப முயற்சித்த போதும் அவர் எழும்பவில்லை. இதனால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அவரை கொண்டு சென்று பரிசோதித்த போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.



# மன்னாரிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு யாத்திரை

*(மன்னார் குறூப் நிருபர்)*

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் மன்னாரைச் சேர்ந்த 20 சாமியார்கள் நேற்றுமுன்தினம் மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்திலிருந்து யாத்திரை ஆரம்பித்தனர்.

மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி மண்டல பூஜையும் மதிய அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 15ஆம் திகதி மன்னார் செல்வநகர் அம்பாள் ஆலயத்திலிருந்து முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை நோக்கி சாமியார்கள் யாத்திரை ஆரம்பிக்கவுள்ளனர்.

20 ஆம் திகதி காலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை சென்றடைந்து தமது விரதத்தை பூர்த்தி செய்யவுள்ளனர்.

# கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைது

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

சாவகச்சேரிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் அண்மையில் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழிப் பகுதியில் போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இப்பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. 1200மில்லிகிராம் மற்றும் 960 மில்லி கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

*ரமழான் மாத வினா விடைப் போட்டி;*

# முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் 'நாசு டிரவல்ஸின்' உம்ரா பெக்கேஜ்








கொழும்பு மாளிகாவத்தையில் இயங்கும் 'நாசு டிரவல்ஸ் அண்ட் டுவர்ஸ்' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை மூலம் புனித ரமழான் மாதத்தில் நடத்திய வினா விடை போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டு மைதானத்தில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மொஹமட் நஜீப் மொஹமட் பஸ்லான் தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. நிகழ்வில் அஷ்ஷெய்க் சித்தீக் நியாஸ் மற்றும் உளவியல்துறை சிரேஷ்ட ஆலோசகர் அஷ்ஷெய்க் ஆதில் ஹசன் ஆகியோர் விஷேட பேச்சாளராக கலந்துகொண்டனர். போட்டியில் முதலிடத்தில் தெரிவு செய்யப்பட்ட வெலிகமையைச் சேர்ந்த திருமதி ரிஹானா சாலிஹ் உம்ராவிற்கான முதல் பரிசைப் பெற்றுக்கொண்டார். இரண்டாவது வெற்றியாளராக பேருவளை, சீனன்கோட்டையைச் சேர்ந்த திருமதி இனாசா அமீன் உம்ராவுக்கான பயணச்சீட்டையும் மற்றும் மூன்றாவது வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்ட கொழும்பு 12, திருமதி நூருல் சமீனா உம்ராவுக்கான விசாவையும் அதிதிகளிடம் பெற்றுக்கொண்டனர். மேலும் இவ்விழாவில் வெற்றி பெற்ற 100 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை தயாரிப்பாளர் எஸ். எச். எம். ரீசா மற்றும் ஏனைய உத்தியோகத்தவர்கள் மற்றும் நாசு டிரவல்ஸ் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**ருஸைக் பாரூக்**






## சம்பள உயர்வு வெற்றியளித்ததால் தொழிலாளர்கள் கொண்டாட்டம்




பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பள உயர்வு மற்றும் மேலதிகமாக பறிக்கப்படும் தேயிலை கொழுந்து கிலோ ஒன்றுக்கு 80 ரூபா என்ற அடிப்படையில் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டதையடுத்து நுவரெலியா, கந்தப்பளை, இராகலை பிரதேச தோட்டங்களில் வெற்றிக் கொண்டாட்டங்கள் களைகட்டின.

காலை வேளையில் வழமையான தொழிலுக்கு சென்ற தொழிலாளர்கள் தோட்ட ஆலயங்கள், தொழிற்சாலைகள், கொழுந்து நிறுக்கும் இடங்கள், மலைக் கோயில்கள் ஆகியவற்றில் விசேட பூஜைகளை ஏற்பாடு செய்திருந்ததுடன் பாற்சோறு சமைத்து, பட்டாசு வெடித்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அமரர். ஆறுமுகம் தொண்டமானின் உருவப்படத்துக்கு மாலையிட்டு விசேட பூஜைகளை செய்ததை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், மனுஷ நாணயக்கார உள்ளிட்ட அரசாங்கத்துக்கும் இதன்போது தோட்ட தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநில பிரதிநிதி எஸ்.ரமேஷ், சிரேஷ்ட மகளிர் அணி அதிகாரி எஸ்.கௌரி, மாவட்ட தலைவர் ஆ.கிருஸ்ணகுமார் ஆகியோருடன் தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

(ஆ.ரமேஷ்)

## ரூ.30 இலட்சம் செலவில் அசானா வீதி திறந்து வைப்பு



**(மாவத்தகம தினகரன் நிருபர்)**



அக்குறணை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனின் நிதிபங்களிப்பில் அக்குறணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட காசாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அசானா வீதி கொங்கிறீட் வீதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதை மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்குறணை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக வீதியை திறந்து வைத்தார்.

## அகில இலங்கை சமாதான நீதவான்களாக நியமனம்



நுவரெலியா மார்கார்ஸ் தோட்டம் கீழ் பிரிவைச் சேர்ந்த கிட்ணன் ரவிச்சந்திரன் அகில இலங்கை சமாதான நீத வானாக நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் என்.டபிள்யூ.கே.எல் பிரபுத்திகா லங்காணி முன்னிலையில் (02) நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பிரஜா பொலிஸ் ரூவான்எலிய கிராம பிரிவு உப தலைவராகவும், நுவரெலியா மாகாஸ்தோட்டம் கீழ் பிரிவு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இயங்கும் அறநெறி பாடசாலை தலைவராகவும், பிரதேசத்தில் சமூக கலாசார அமைப்பு அதன் நிர்வாக சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருவதுடன், பல்வேறு சமூகப்பணிகளிலும் ஈடுபட்டுவருகிறார்.

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**



தலவாக்கலை நகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நல்லையா பரஞ்சோதி அகில இலங்கை சமாதான நீதவானாக நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி கே.டபிள்யு. கே.எல். பிரபுத்திக்க லங்கானி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் நாவலப்பிட்டி கெடபுலா பிரதேசத்தை பிறப்பிடமாகவும் தலவாக்கலை நகரை வசிப்பிடமாகவும் கொண்டவர். அதேபோல் தலவாக்கலை அஞ்சு உணவக உரிமையாளரும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் கதிர்காம யாத்திரை குழுவின் தலவாக்கலை பிரதேச குரு சாமியாகவும் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜன சஹன நடமாடும் சேவை



ஊவா மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊவா வெல்லஸ்ஸ 'ஜன சஹன' நடமாடும் சேவையின் முதலாவது வேலைத்திட்டம் அண்மையில் மொனராகலை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் எண்ணக்கருவுக்கு அமைய மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகள் மக்களிடம் சென்று, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கண் மற்றும் பல் சிகிச்சை, தொற்றா நோய் தொடர்பான அறிவுறுத்தல்கள், ஆயுர்வேத மருத்துவ கிளினிக் மற்றும் சேவைகள், தொழில் பயிற்சிகளில் இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தல், சுற்றுலாத் துறையின் பாடநெறிகளுக்கான ஆட்சேர்ப்பு, புலமைப்பரிசில் திட்டங்கள், காணி தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு, பொதுபோக்குவரத்து சேவை தொடர்பான சிக்கல்களுக்கான தீர்வு, சாரதி பயிற்சிக்கான பதிவுகள், சிறிய மற்றும் நடுத்தர தொழிலாளர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குதல், உள்ளிட்ட பல சேவைகள் பொதுமக்களுக்காக முன்னெடுக்கப்பட்டன. ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்க உள்ளிட்ட பிரதேச அரசியல் பிரமுகர்கள், மாகாண பிரதான செயலாளர் தமயந்தி பரணகம உள்ளிட்ட மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வழங்கினர்.

## மலைச்சாரல்

### கண்டி நகரில் சட்டவிரோத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி நகரிலும் மத்திய சந்தைப்பகுதியிலும் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் சட்டவிரோத வர்த்தக நிலையங்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி நகர அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும் கண்டி மத்திய சந்தைத்தொகுதி அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக வேறு ஒரு தொகுதி அமைக்கப்படும்.

அதுவரைக்கும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார். குறிப்பாக காய்கறி, பழவகைகள் விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்கள் அத்துமீறி செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். கண்டி நகரமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறையினருக்கு முக்கிய இடமாகவுள்ளது.

குறிப்பாக எசல பெரஹறா காலங்கள் மற்றும் தலதா மாளிகைக்கான தரிசனம் போன்றன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். எனவே இவற்றுக்காக வருகை தரும் மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் காணப்படும் விற்பனை நிலையங்கள் அகற்றப்படுவதுடன் அவற்றின் ஊடாக தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாற்றுவழிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆளுநர் மாநகரசபை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காத்தான்குடிக்கு

# இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா விஜயம்



**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பின் காத்தான்குடி பிரதேசத்துக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று வியாழக்கிழமை (02) விஜயம் செய்தார். இதன்போது இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வரவேற்கப்பட்டதுடன், அவர் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களினுடைய சம்மேளனத்தின் அழைப்புக்கமைய அவரது காத்தான்குடி விஜயம் அமைந்தது.

மேற்படி சம்மேளனத்தின் உப தலைவர் எம்.சீ.எம்.ஏ.சத்தார் தலைமையில் காத்தான்குடி மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, காத்தான்குடி நகர சபைச் செயலாளர் ரிப்கா ஷபீன், காத்தான்குடி மெத்தை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ரவூப் ஏ.மஜீட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்றில் மாதாந்த

# நீர் கட்டணம் செலுத்தாதோரின் நீரிணைப்பை துண்டிக்க ஏற்பாடு

## அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர்

**ஒலுவில் விசேட நிருபர்**



தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய அலுவலக பிரிவில் ஒரு மாதத்துக்கும் மேலாக மாதாந்த நீர்ப் பாவனை கட்டணம் செலுத்தாத பாவனையாளர்களின் நீரிணைப்பு துண்டிக்கப்படவுள்ளதாக, அப்பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜித் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, பொத்துவில், கல்முனை ஆகிய பிரதேசங்களில் 06 மாதங்களாக மாதாந்த நீர்ப் பாவனை கட்டணம் செலுத்தப்படாமலுள்ளது. இந்நிலையில் நீர் துண்டிப்பு தொடர்பாக பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

நீர்ப் பாவனையாளர்களின் நிலுவை தொகை மற்றும் நீர்ப் பாவனை அளவு போன்றவற்றை கருத்தில் கொண்டு இணைப்பு துண்டிக்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், குறிப்பிட்ட நிலுவையை செலுத்தாமலுள்ள வாடிக்கையாளர்களை அதனைச் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் நீர் துண்டிப்புச் செய்யப்படும் வாடிக்கையாளர்களுக்கு நீர் கட்டண பட்டியல் தொகையுடன் அபராதத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே மீளிணைப்பு வழங்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று ஹிஜ்ரா கல்லூரி சாதனையாளர் விருது விழா



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று வலய கல்வி பணிமனைக்குட்பட்ட அக்/ஹிஜ்றா வித்தியாலயத்தின் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு அக்கல்லூரி அதிபர் எம்.ஹிர்பான் தலைமையில் அண்மையில் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், இறுதி தவணை பரீட்சையில் முதல் 05 இடங்கள்வரை புள்ளி பெற்ற மாணவர்கள், மாணவ தலைவர்கள், ஆளுமை விருத்தி செயலமர்வில் பங்குபற்றிய மாணவர்கள் ஆகியோர் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது இக்கல்லூரி வளர்ச்சிக்கு பாடுபட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.ஏ.அலாவுதீனும் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று வலய கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா...



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாவை அண்மையில் நடத்தியது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் விபுலாநந்த நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வும் நடைபெற்றது. (காரைதீவு குறூப் நிருபர்)

# ஒலுவில் மீனவர்களுக்கு வாழ்வாதார உதவி

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

ஒலுவில் துறைமுக கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை கடற்றொழிலாளர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கல்முனையில்

# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது.

இந்தக் குடும்பத்துக்கு கல்முனை 18ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவு முகாம் இராணுவத்தினரால் வீடு நிர்மாணித்து கொடுக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட 241ஆவது இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன அடிக்கல்லை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ஒரு கோடி ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு: பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் ஒரு கோடி ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற சம்பவத்துடன் தொடர்புபட்ட பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மரண அச்சுறுத்தல் விடுத்து நபர் ஒருவரை தாக்கி பணத்தை கொள்ளையிட முயன்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதுடன் அந்த சம்பவத்துடன் தொடர்புடைய, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட சந்தேகநபர் நால்வரையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் ஊழல், மோசடி விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் நேரடி கண்காணிப்பின் கீழ் விசாரணைகள் இடம்பெற்று சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் குருநாகல் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் என தம்மை அடையாளம் காட்டிக் கொண்டு ஒரு கோடி ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற நால்வரை இலஞ்ச ஊழல், மோசடி ஆணைக் குழுவினர் அண்மையில் கைது செய்தனர்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றை சோதனையிடுவதாக தெரிவித்து முறைப்பாட்டாளரின் 12,000,000 ரூபாவையும் 3500 டொலரையும் சந்தேக நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் வீட்டில் பணிபுரிந்துள்ள ஊழியரான இந்தியப் பிரஜை ஒருவரின் வெளிநாட்டு கடவுச்சீட்டையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் அவர்கள் எடுத்துச் சென்றுள்ள வெளிநாட்டு கடவுச்சீட்டை மீள வழங்குவதற்கு நான்கு கோடி ரூபாவை இலஞ்சமாகக் கோரியுள்ளனர். பின்னர் அதனை மூன்றரை கோடியாக குறைத்து அதன் முதற் கட்டமாக ஒரு கோடி ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ளனர்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட நால்வரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பணத்திலிருந்து 16 இலட்சம் ரூபாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தினர் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிபிலை மொ/ கொடிகமுவ முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டி

**லுணுகலை நிருபர்**





பிபிலை கல்வி வலயத்துக்குட்பட்ட மொ/கொடிகமுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்த 2024ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி வெகுசிறப்பாக நடைபெற்றது.

அதிபர் எம்.எம்.எம். இர்பான் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக பிபிலை வலய கல்வி பணிப்பாளர் பிரசாத் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக மத தலைவர்களும், விளையாட்டுத்துறை ஆசிரியர் ஆலோசகர் அமரசிறி, மெதகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நட்புறவு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் தெரிவாகிய மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் இதன்போது நடைபெற்றன. பிரபல வர்த்தகர் நூஹூ ஹாஜியார் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களுக்கான உதவித்தொகையையும் பதக்கங்களையும் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர் கௌரவிப்பு விழா





**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை (சுபீட்சம்) இந்து சமூக நலன்புரி சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாத்தளை சர்வதேச காந்தி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி ஒன்றியத்தின் தலைவர் வி.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாத்தளை மற்றும் நாவுல ஆகிய கல்வி வலயத்துக்குட்பட்ட தமிழ் பாடசாலைகளில் கடந்த 22,23ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் ஆகியோர் இதன்போது போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதில் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஒமன் லங்கா மினரல் எக்ஸ்போலஸ் நிறுவனத்தின் தலைவர் எஸ்.மோகன சங்கர் பிரதம அதிதியாகவும் பேராதனை போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களான செந்தில் சந்திர சேகரம், எஸ்.கிருஷ்னா பிரதீப் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத சொத்து சேர்ப்பு; சந்தேகநபரின் சொத்துக்கள் முடக்கம்

**மன்னார் குறூப் நிருபர்**

யுக்திய தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் மன்னாரில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரின் 9 கோடியே 30 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் நேற்றைய தினம் முடக்கப்பட்டன.

தலைமன்னார் பகுதியை சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் ஒருவருக்கு சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்கலாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் 2002 ஆம் ஆண்டு அரச வீட்டுத்திட்டமொன்றை பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்துள்ளார். எனினும் 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் பல கோடி சொத்துக்களை சேர்த்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நேற்று நீதிமன்ற அனுமதியை பெற்று வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜேசேகர மேற்பார்வையின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்றபுலனாய்வு பிரிவின் சட்டவிரோத விசாரணை பிரிவு பொலிஸாரினால் அவருடைய சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. அதேநேரம் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனைதொடர்ந்து உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். சட்டவிரோதமாக சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு மக்களுக்கு பெரும் பணியாற்றியவர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

## தென்மாகாண ஆளுநராக இன்று கடமைகளை பொறுப்பேற்கிறார்



தென் மாகாணத்தின் 12 ஆவது ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந் நாட்டின் மூத்த அரசியல்வாதியான முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்பட்டார்.

தென்மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இன்று (03) காலியில் உள்ள தென்மாகாண ஆளுநர் அலுவலகத்தில் தனது கடமைகளை ஆரம்பிக்கவுள்ளார்.

மாகாண சபை முறைமையை ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்ட முதலாவது தேர்தலில் தென்மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர், தற்போது தென்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காலி மகிந்த வித்தியாலயத்தில் கல்வி கற்று, 1982 ஆம் ஆண்டு தீவிர அரசியலில் ஈடுபட்ட லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வாக்குச்சீட்டிற்குப் பதிலாக தோட்டா என முன்னிலை பெற்ற பயங்கரமான காலப்பகுதியில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பல்வேறு அச்சுறுத்தல்களை அச்சமின்றி எதிர்கொண்டு 1988 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றார். அன்று தொடக்கம் மாத்தறை மாவட்டத்தில் மட்டுமன்றி தென் மாகாணத்திலும் மக்களுக்காக உழைத்து குறுகிய காலத்திலேயே மக்கள் மத்தியில் பிரபலமான, சிறந்த அரசியல்வாதியாகப் பெயர் பெற்றார். அதன் பின்னர் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் தென் மாகாண சபைக்கு மீண்டும் போட்டியிட்டு அத்தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்றார்.

1994ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்டு அத்தேர்தலில் வெற்றி பெற்று 2002ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலத்துறை அமைச்சரானார். தனது அமைச்சுப் பதவியின் மூலம் மக்களின் முன்னேற்றத்திற்காக பெரும் சேவை செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர், அதன் விளைவாக 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று 2007 ஆம் ஆண்டு ஊடகத்துறை அமைச்சரானார். முப்பது வருடங்களாக நீடித்த யுத்தத்தின் முக்கியமான கட்டத்தில், ஊடக இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டு, உள்ளூரில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பயங்கரவாதிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் கருத்தை எடுத்துரைத்து யுத்த வெற்றிக்கான சித்தாந்த வெற்றியை பெற்றுக் கொடுக்க முயன்றார்.

மீண்டும் 2010 இல் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும், 2013 இல் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரவை அமைச்சராகவும், சிவில் விமான போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகவும், பாராளுமன்ற விவகார அமைச்சராகவும் பல பொறுப்புகளை வகித்தார்.

அவர் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக இருந்த காலத்தில் இந்நாட்டுக்கு பல வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர முடிந்தது. அவர் 2015 இல் நிதி ராஜாங்க அமைச்சராகவும், 2018 இல் தொழில்முனைவு அபிவிருத்தி அமைச்சராகவும், 2020 இல் மீண்டும் ஊடகத்துறை அமைச்சராகவும் ஆனார். ஊடகப் பதவியில் இருந்த காலத்தில் அனைத்து ஊடகவியலாளர்களுடனும் நட்புறவாகவும் ஒத்துழைப்பாகவும் பணியாற்றினார். பத்திரிகையாளர்களின் நலனுக்காக சிறப்புப் பங்காற்றினார்.

அதன் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தாலும், இலங்கை வரலாற்றில் அதிக வாக்குகள் பெற்று தோல்வியடைந்த ஒரே எம்.பி ஆவார். இறுதியாக கடந்த பொதுத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் பலர் தமது சொந்த வெற்றிகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதேவேளை, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தனது வெற்றியை விட கட்சியின் வெற்றிக்காக தன்னை அர்ப்பணித்தார். அங்கு பல்வேறு தரப்பினரால் அழுத்தம் கொடுத்து அபத்தமான குற்றச்சாட்டுகளை முன்வைத்த போது அதனை எதிர்கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு 71,106 வாக்குகள் என பெரும் எண்ணிக்கையிலான வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார்.

அபாரமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை விடவும், தோல்வியடைந்தாலும் தமது அரசியல் பயணத்தை முன்னெடுத்துச் செல்லும் அவர் இன்று தனது மாவட்டத்திற்கும் மக்களுக்கும் சேவையாற்றுவதற்காகவே செயற்பட்டு வருகின்றார்.

தென்மாகாண ஆளுநராக நியமிக்கப்படும் வரை ஏறக்குறைய ஒரு வருட காலம் வடமேல் மாகாண ஆளுநராக தனித்துவமான பணியை மேற்கொண்டார். மதத் தலைவர்கள், அதிகாரிகள், மக்களுடன் இணக்கமாகச் செயற்பட்டதன் மூலம் வடமேற்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக பல பணிகளைச் செய்ய முடிந்தது. லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன வடமேற்கு மாகாணத்தில் உள்ளார்ந்த பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்வை மேம்படுத்த பெரும் சேவையை ஆற்றினார். அதன் காரணமாக அந்த மாகாணத்தில் அனைவராலும் நேசிக்கப்பட்டு மதிக்கப்பட்டார்.

மாத்தறை அரசியலில் கறைபடியாத ஆளுமையாக விளங்கிய லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன அவர்களை 'அபே லக்ஷ்மன் மஹத்மயா' என்று அன்பாக அழைத்தனர்.

(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

---

நாட்டைக் கட்டியெழுப்பும்

## தொழில் முனைவோரை கட்டியெழுப்ப, அரசு அதிகபட்ச ஆதரவு வழங்க வேண்டும்

### இராமஞ்ஞ நிக்காய அனுநாயகர் வண. கலாநிதி வலேபொட குணசிறி தேரர்



"நமது தொழிலதிபர்களுக்கு அந்தத் தொழில்களை தொடங்கவும், தொடர்ந்து மேம்படுத்தவும் வசதிகள் இல்லையெனில் அவை நலிவடையும். எனவே, தொழில்துறையினர், தொழில்முனைவோருக்கு அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் அதிகபட்ச ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்க வேண்டும்.

அதற்காக, தொழில் அபிவிருத்தி சபை இவ்வாறு "மஹா சங்கரத்னவின் ஆசீர்வாதங்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக பிக்குகள் சொற்பொழிவை ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். " என்று இலங்கை இராமஞ்ஞ மகாநிக்காயவின் வணக்கத்திற்குரிய கலாநிதி வெலேகொட குணசிறி அனுநாயக்க தேரர் தெரிவித்தார்.

கட்டுபெத்த கைத்தொழில் அபிவிருத்தி சபை கேட்போர் கூடத்தில் 27ம் திகதி இடம்பெற்ற "நாட்டைக் கட்டியெழுப்பும் உற்பத்தித் தொழில் தொழில் முனைவோர் கலாசாரத்தை கட்டியெழுப்பும் பிக்குகள் சொற்பொழிவில்" அவர் இதனைத் தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் இலங்கை இராமஞ்ஞ நிக்காயாவின் அனுநாயக்கர் வணக்கத்திற்குரிய கலாநிதி வலேபொட குணசிறி தேரர் , களனிப் பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும் பௌத்த கற்கைகள் துறை பேராசிரியர் வணக்கத்திற்குரிய பேராசிரியர் எல மல்தெனியே சாராநந்த தேரர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வணக்கத்திற்குரிய கலாநிதி மடிகே சுகத சிறி அவர்களின் தலைமையில், தர்ம பேச்சாளர்களான அறுபது (60) தேரர்களின் பங்குபற்றுதலுடன் சொற்பொழிவு நடைபெற்றது.

---






சீனன்கோட்டை, அல் ஹுமைஸரா அஹதிய்யாப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாணவர் தலைவர் பதவியேற்பு, ரமழான் கேள்வி பதில் திறந்த போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் ரமழான் ஆன்மீக பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டதோடு, மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வின் பிரதம அதிதி நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

---

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு - 55**

அநுராதபுரம் மாவட்டத்தின் நெகெனஹிர நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் நகர் எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 110210 கண்ட இல. 03 பத்திர இல. 01 துண்ட இல. 110 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த,

இல.16, தேசிய வீடமைப்பு, ஆர்.எஸ்.பெர்னான்டோ மாவத்த எனும் விலாசத்தைக் கொண்ட கஸ்தூரி ஆரச்சி கங்கானமலாகே அனுலா குணதிலக்க எனும் ஆள் 2016.11.07 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 87/25A, தர்மபால மாவத்த, அநுராதபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.30 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

# DISTRICT GENERAL HOSPITAL KILINOCHCHI

## Invitation for Bids (2024/01)

1. The **Chairman, Regional Procurement Committee, District General Hospital, Kilinochchi** on behalf of the Director District General Hospital, Kilinochchi, invites sealed bids from eligible and qualified bidders for the construction/Renovation/rehabilitation/refurbishment/ Renovation work described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
   "*Bidding will be conducted through National Competitive Bidding. Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No.04/2016 (iii).*
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below .
4. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in **Schedule (Section 5).**
5. Interested bidders may obtain further information from the **address given below in 6**, and inspect the bidding documents at the same place on any working day from9.00 a.m. to 4.00 p.m.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the address given below **From 03.05.2024 until 16.05.2024 between 9.00 a.m. and 3.00 p.m. upon payment of non-refundable fees as given in the below table**. The method of payment should be by cash. **District General Hospital, A9 Road, Kilinochchi. (T.P: 021-2285329, 021-2284111, Fax: 021-2285327).**
7. Bids (Original and Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, District General Hospital Kilinochchi, A9 Road Kilinochchi** at or before **11.30 a.m. on 17.05.2024.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, District General Hospital, Kilinochchi, A9 Road Kilinochchi** commencing at **10.00 a.m.** on **10.05.2024.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the in the table below.

| | |
|---|---|
| **Document Issuing / Purchasing Period** | **03.05.2024 – 16.05.2024** |
| **Pre-Bid Conference** | **10.05.2024** |
| **Closing and Opening of Bids** | **17.05.2024** |

| Bid No. | Description of Work | Estimated Cost / (Rs. in Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/DGH/ KOC/2024/ PSDG (Conti)/ W/03 | Renovation of Sewarage Canal at DGH Kilinochchi | 3.35 | 60 Days | C7 and C8 | 33,500.00 | Till 02.08.2024 | 1,500.00 |
| NP/DGH/ KOC/2024/ M/W/02 | Water supply system to Netherland Project at DGH Kilinochchi | 2.00 | 60 Days | C7, C8 and C9 | 20,000.00 | Till 02.08.2024 | 1,500.00 |

**Chairman**
**Regional Procurement Committee**
**District General Hospital, Kilinochchi.**

---

## கரைத்தீவு மு. வித்தியாலயத்தில் இரு பெரும் விழாக்கள்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்தலும், கல்லூரியின் புறச்சூழலில் மர நடுகையும் அண்மையில் (30) இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் ஏ.கே. நயீமுல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் டீ.எம்.கே. திஸாநாயக்க,

சிறப்பு அதிதிகளாக BMI சமீர (மத்திய சுற்றாடல் அதிகார சபையின் டீ.ஈ.ஓ. சமிர, புத்தளம் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் ஏ.எச்.எம்.எம். சாபி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

---


**கேள்விப்பத்திர அறிவித்தல்**

**மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்தியம்**

**சுத்திகரிப்பு சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்**

மக்கள் வங்கியின் மட்டக்களப்பு பிராந்தியத்தைச் சேர்ந்த காத்தான்குடி, மட்டக்களப்பு, வாழைச்சேனை, மட்டக்களப்பு நகரக்கிளை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, செங்கலடி, கல்லாறு, ஓட்டமாவடி, கொக்கட்டிச்சோலை ஆகிய கிளைகளிலும் ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், வாகரை, கிரான், வவுணதீவு, மண்டூர், சித்தாண்டி ஆகிய சேவை நிலையங்களிலும் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயம் ஆகிய சேவை நிலையங்களிலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்களிடம் மூடப்பட்ட கேள்வி பத்திரம் கோரப்படுகின்றன.

மீள செலுத்தப்படாத 1500/- ரூபா கேள்விப்பத்திர படிவக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2024 வைகாசி மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எந்தவொரு வார நாட்களில் மு.ப 9.00 - 4.00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் கேள்விப்பத்திர விபரங்களை, விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களை நன்கு பரிசீலிக்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு ஆவணங்களுக்குரிய வைப்பிலிடப்பட்ட குறிப்பிட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி உரிய கட்டிட வளாகங்களைப் பார்வையிடுமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

2024 வைகாசி 28ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணி அல்லது அதற்கு முன்பு கிடைக்கப்பெறுமாறு எல்லா கேள்விப்பத்திரங்களும் நேரடியாக பிராந்திய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடப்படுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக்காரியாலயம்**

**இல.25/1, கோவிந்தன் வீதி மட்டக்களப்பு**
**Fax: 065 2222657**
**Email: batrho@peoplesbank.lk**
**Telephone: 065 2222652 / 065 2222653**

PEOPLE'S BANK

# கேள்விக்கான அழைப்பு

## தென் மாகாண சபை

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – மாத்தறை

01. மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சார்பாக மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் திறன் உடைய மற்றும் தகைமையுடனான கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்காணும் ஒப்பந்தத்திற்காக வேறு வேறாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விகள் விநியோகிக்கும் கால எல்லை** : 2024.05.03ம் திகதி மு.ப. 9.00 முதல் 2024.05.21 பி.ப. 3.00 வரை

**கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைதல் மற்றும் திறத்தல்** : 2024.05.22 மு.ப. 10.30 இற்கு.

| தொ. இல. | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை (வெட் இன்றி) ரூபா | நிர்மாணக் காலம் (நாட்கள்) | தேவைப் படும் பதிவு CIDA (கட்டிடங்கள்) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | கெக்கணதுர ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவின் வெளிநோயாளர் பிரிவு கட்டிடம் பழுதுபார்த்தல் | 157,179.55 | 56 | C9 and C8 | 2,000.00 | 1000.00 |
| 02 | பெரலபனாத்தர ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு மூன்று சுற்று மின்சாரத்தை பெற்றுக் கொள்ளல் | 444,861.00 | 56 | C9 and C8 | 4,000.00 | 1500.00 |
| 03 | கொட்டவில சுகாதார நிலையத்தின் இழைய விஞ்ஞானப் பிரிவின் பார்டிசன் இடல் | 257,526.00 | 56 | C9 and C8 | 3,000.00 | 1000.00 |
| 04 | தெனியாய ஆதார வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் முதலாம் மாடியின் மிகுதி வேலை | 2,979,187.35 | 105 | C8 and C7 | 30,000.00 | 2000.00 |
| 05 | மிரிஸ்ஸ ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவில் தங்கிநிற்கும் அலகின் கூரையை பழுதுபார்த்தல் | 421,543.00 | 56 | C9 and C8 | 4,000.00 | 1500.00 |
| 06 | கிரிந்த புஹுல்வெல்ல ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவில் தங்கி நிற்கும் அலகினை நிர்மாணித்தல் | 1,923,250.15 | 105 | C9 and C8 | 19,000.00 | 2000.00 |
| 07 | அக்குரெஸ்ஸ ஆதார வைத்திய சாலை கர்ப்பிணி வார்ட்டை பழுது பார்த்தல் | 3,787,463.88 | 105 | C8 and C7 | 38,000.00 | 2500.00 |
| 08 | தங்கல்ல ஆதார வைத்தியசாலை புதிய கட்டிடத்தின் மேல் மாடியில் கேட்போர் கூடத்தின் கதவு, ஜன்னல் பழுதுபார்த்தல் | 2,309,107.20 | 105 | C8 and C7 | 23,000.00 | 2500.00 |

02. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இந்த விலைக்கோரல்கள் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. இந்தப் பெறுகையின் கீழ் நிறைவேற்றுவதற்குள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக உள்ளதால் (வெட் மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) 2021-02-18ஆம் திகதிய 04/2016(iv) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA முன்னுரிமை கவனத்திற் கொள்ளப்படும்.

05. ஆர்வமுள்ள திறமை வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2024.05.03ஆம் திகதி முதல் 2024.05.21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி, மாத்தறை, பரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்துக் கொடுப்பனவுகளையும் ரொக்கப் பணத்தில் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் 041-2222154 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

06. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மாத்தறை, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் பெற்றுக்கொண்ட 2024.06.14ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

07. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தத்திற்கு இயைபான விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் மூலப்பிரதியில் மூலப்பிரதி என்றும் நகல்பிரதியில் நகல் பிரதியென்றும் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, அந்த இரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறையை முத்திரைக் குறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விபரங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.05.22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாத்தறை மாவட்ட சுகாதார பணிப்பாளர் அலுவலகம், பரமுல்ல, மாத்தறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு குறித்த பதிவேட்டில் பதிவிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024.08.20ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. விலைமனுக்கள் 2024.05.22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து மாத்தறை, மாவட்ட சுகாதார சேவைபப்பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

10. தங்கல்ல ஆதார வைத்தியசாலையில் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கைத்தொழிலில் கேள்வி கொள்வனவு செய்தல் ஹம்பாந்தோட்ட மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்வதுடன் அதனை மேற்படி தினத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் அந் நேரத்திலேயே கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாத்தறை, மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்,**
**பரமுல்ல, மாத்தறை.**

2024.05.02ஆம் திகதி

For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### கணக்குப் பிரிவிற்கு AUTOMATION SYSTEM வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் கணக்குப் பிரிவிற்கு AUTOMATION SYSTEM வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2024.05.30** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2024.05.31 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கணக்குப் பிரிவிற்கு AUTOMATION SYSTEM வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு, (மேஜர்),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

SELACINE

## பெறுகை அறிவித்தல்

## அநுராதபுரம் மாநகர சபை

**'புரவர உதானய - 2024' நகர்ப்புற வருமானத்தை உருவாக்கும் வேலைத்திட்டம் - 2024 ஜூன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை களியாட்ட இடப்பரப்பிற்குள் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கு (பரிசு விளையாட்டுக்கள்) நிலப்பரப்புகளை குத்தகைக்கு வழங்குதல்**

2024 பொசொன் உற்சவ வேளையில் அநுராதபுரம் மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்படும் ''புரவர உதானய - 2024'' வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்ட வேளையில் இடப்பரப்பிற்குள் பின்வரும் இடங்களை பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்காக (பரிசு விளையாட்டுக்கள்) நிலப் பரப்புகளை குத்தகைக்கு வழங்குவற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இதற்காக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையில் (அரச வேலை நாட்களில்) வழங்கப்படும்.

**01. சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்கு வழங்குதல்**

| தொ. இல. | பெயரிடப்பட்டுள்ள அரிச்சுவடு | அளவு | படிவக் கட்டணம் | ஆகக் குறைந்த விலைக்கோரல் | மீளளிக்கப்படும் பிணைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | B | 10'X40' | 2,000.00 | 500,000.00 | 250,000.00 |
| 02 | C | 10'X40' | 2,000.00 | 500,000.00 | 250,000.00 |
| 03 | D | 10'X40' | 2,000.00 | 500,000.00 | 250,000.00 |
| 04 | F | 10'X40' | 2,000.00 | 350,000.00 | 175,000.00 |

**நிபந்தனைகள் மற்றும் ஏனைய அறிவுரைகள்**

1. விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது அநுராதபுர மாநகர சபையினால் வழங்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் மட்டுமே சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
2. விலைக்கோரல் படிவக் கட்டணமான 2,000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை அநுராதபுரம் மாநகர சபையின் நிதித் திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2024-05-03 ஆம் திகதி முதல் 2024.05.27 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் மீளளிக்கப்படும் பிணை வைப்பைச் செலுத்துதல் கட்டாயமாகும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் வைப்பிற்கு இயைபான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி மற்றும் விலைமனுதாரரின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புரவர உதானய 2024 களியாட்ட இடப்பரப்பினுள் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்காக விலைமனு (இயைபுடைய ஆங்கில அரிச்சுவடு சகிதம்)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்த நாள் பிரசித்த விடுமுறைத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் மு.ப. 10.00 மணிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது நிறைவு செய்யப்பட்டு அக்கணமே விலைமனுக்கள் திறக்கப்படும்.
5. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதானால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் கட்டாயமாகும்.
8. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 025-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மற்றும் மாநகர சபையின் பின்வரும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர் - 025-2222276**
**கணக்காளர் - 025-2227745**
**பிரதான வருமான பரிசோதகர் - 071-2365971**

**டபிள்யூ.எம். ருவன் விஜேசிங்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

**2024-04-29ஆம் திகதி,**
**அநுராதபுரம் மாநகர சபை அலுவலகத்தில்.**

Daily News Classifieds, the Housewives' companion

# டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணித் தேர்வுக்கு ஐ.சி.சி. அவகாசம்

## ஐ.பி.எல். வீரர்கள் நேராக அமெரிக்கா பயணம்



டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான 15 பேர் குழாத்தை வெளியிடுவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் கடந்த மே 1 ஆம் திகதி வரை கெடு விதித்த நிலையில் இலங்கை அணி 15 பேருக்கு பதில் 25 பேர் கொண்ட ஆரம்ப அணியின் பட்டியலையே ஐ.சி.சி. இடம் வழங்கியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் எதிர்வரும் 1 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்திற்கு ஐ.சி.சி. விதித்த கெடுவுக்குள் பெரும்பாலான அணிகள் தமது 15 பேர் குழாத்தை வெளியிட்டுள்ளன. இந்த குழாத்தில் மாற்றங்கள் செய்வதற்கு ஐ.சி.சி. எதிர்வரும் மே 22 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியுள்ளது.

இதில் மே 1 ஆம் திகதிக்குள் 15 பேர் குழாத்தை அறிவிப்பது கட்டாயமாக இருந்தபோதும் அந்தக் காலப்பகுதியில் 25 பேர் கொண்ட ஆரம்ப அணியை சமர்ப்பிப்பதற்கு ஐ.சி.சி. அனுமதி அளித்ததாக இலங்கை தேர்வுக் குழு தலைவர் உபுல் தரங்க தெரிவித்துள்ளார். உலகக் கிண்ணத்திற்கான இறுதி அணித் தேர்வு பயிற்சி முக்கோண டி20 தொடரின்போதே மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் இந்த பயிற்சி முக்கோணத் தொடர் ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று (02) ஆரம்பமானதோடு இந்தப் போட்டிகள் எதிர்வரும் மே 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் ஆரம்ப அணியில் இடம்பெற்றுள்ள இலங்கை வீரர்கள் மூன்று அணிகளாக பிரிக்கப்பட்டு போட்டிகளில் ஆடுகின்றனர். எனினும் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் இலங்கை வீரர்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரில் மதீஷ பதிரண, மஹீஷ் தீக்ஷன, நுவன் துஷார, துஷ்மந்த சமீர மற்றும் விஜய காந்த் வியாஸ்காந்த ஆகிய ஐந்து இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி எதிர்வரும் மே 14 ஆம் திகதி அமெரிக்காவை நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது. போட்டிகளில் பங்கேற்பதற்காக அணிகள் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு வருகை தருவதற்கு ஐ.சி.சி. மே 25 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியபோதும் முன்னேற்பாடுகளுக்காகவே இலங்கை அணி முன்கூட்டியே அங்கு செல்லவுள்ளது.

முக்கோண டி20 தொடரில் ஐ.பி.எல். வீரர்கள் இடம்பெற மாட்டார்கள் என்றபோதும், இலங்கையின் இறுதி 15 பேர் குழாத்திற்கு தேர்வு செய்யப்படும் வீரர்கள் நேராக அமெரிக்கா சென்று அணியுடன் இணைந்து கொள்வார்கள்.

ஐ.பி.எல். தொடர் மே மாதம் கடைசி வரை நீடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியில் 12 வீரர்கள் கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில் அணித் தேர்வு இறுதிக் கட்டத்தில் இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது. இதில் 15 பேர் குழாத்தை பூர்த்தி செய்வதற்கு மேலதிக துடுப்பாட்ட வீரர், சுழற்பந்து வீச்சாளர் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் ஒருவரை தேர்வு செய்வது குறித்து தேர்வாளர்கள் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

தற்போது நடைபெற்று வரும் பயிற்சி முக்கோணத் தொடரின் மூன்று அணிகளுக்கும் இலங்கை டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்க (மஞ்சள் அணி), சரித் அசலங்க (சிவப்பு அணி) மற்றும் ஜனித் லியனகே (பச்சை அணி) தலைவராக செயற்படுகின்றனர். ஒவ்வொரு அணியிலும் 14 வீரர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றில் டி குழுவில் ஆடும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் ஜூன் 3ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி நியூயோர்க்கில் நடைபெறும்.

டி20 உலகக் கிண்ணத்திற்கான இலங்கை அணியின் ஜேர்சி அறிமுகம் எதிர்வரும் மே 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க விசாவுக்காக வீரர்கள் இலங்கை வருகை



இந்திய பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்றிருக்கும் இலங்கை வீரர்கள் டி20 உலகக் கிண்ணத்திற்காக அமெரிக்கா செல்வதற்கான விசாவை பெறுவதற்கு இலங்கை வந்துள்ளனர்.

இதன்படி, மதீஷ பதிரண, மஹீஷ் தீக்ஷன, துஷ்மந்த சமீர மற்றும் நுவன் துஷார அமெரிக்காவுக்கான தமது வீசா நடைமுறைக்காக கொழும்பு வந்துள்ளனர். இந்த வீரர்கள் நேற்று (02) கொழும்பில் விசாவுக்கான நேர் முகப்பரீட்சைக்கு முகம்கொடுத்தபோதும், அவர்கள் மீண்டும் ஐ.பி.எல். தொடரில் தமது அணியுடன் இணைவது தொடர்பில் உறுதி செய்யப்படவில்லை.

எனினும் இந்த வீரர்கள் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி ஆரம்பமாகும் டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்கான அமெரிக்க விசாவை பெற்ற பின்னர் தமது ஐ.பி.எல். அணிக்கு திரும்புவார்கள் என்று நம்பப்படுகிறது.

## சர்வதேச செய்திகள்

### ஐ.அ. இராச்சியத்தில் மீண்டும் கனத்த மழை



ஐக்கிய அரபு இராச்சியத்தில் மீண்டும் கனத்த மழை பெய்ய ஆரம்பித்திருக்கும் நிலையில் பல இடங்களில் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 8 மணிக்கு முன்னதாக சில வட்டாரங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பொழிந்ததாக தேசிய வானிலை ஆய்வகம் கூறியது. நேற்று முன்தினம் இடி மின்னலுடன் பெருங்காற்று வீசியது.

டுபாயின் சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது. உலகின் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான டுபாய் விமான நிலையத்தில் 13 விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன. 5 விமானச் சேவைகள் இடம் மாற்றிவிடப்பட்டதாக பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். டுபாய் விமான நிலையமும் சீரற்ற வானிலை தொடர்பாக பயணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது. பயணிகள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே ஆரம்பிக்குமாறும், அவர்கள் காரிலோ அல்லது பொதுப் போக்குவரத்திலோ பயணித்தாலும் சரியான நேரத்தில் விமான நிலையத்தை அடைய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

பாடசாலைகள் வீட்டிலிருந்து பயிலும் நடைமுறைக்கு மாறின. அரச துறை அலுவலகங்கள் மூடப்பட்டன.

இருப்பினும் அது இரு வாரங்களுக்கு முன் பெய்த மழை அளவு மோசமில்லை என்று கூறப்பட்டது.

இரு வாரங்களுக்கு முன் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பல பகுதிகளைக் கடும் மழையும் வெள்ளமும் புரட்டிப்போட்டன.

சில இடங்களில் இதுவரை காணாத மழைப்பொழிவு பதிவானது. 2,000 விமானச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. 295.5 மில்லிமீற்றர் மழை பதிவானது. வெள்ளத்தில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர். பருவநிலை மாற்றம் அதற்கு முக்கியக் காரணம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

### பாக்: பங்கரவாதத்தை தடுக்க நடவடிக்கை

பாகிஸ்தான், கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பயங்கரவாத செயற்பாடுகளையும் தாக்குதல்களையும் கட்டுப்படுத்தவென ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என்று மாகாண முதலமைச்சரின் ஆலோசகர் பாரிஸ்டர் முஹம்மது அலி சைஃப் தெரிவித்துள்ளார்.

இம்மாகாணத்தில் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை ஒரு தேசிய நெருக்கடியென குறிப்பிட்டுள்ள அவர், அரசாங்கமும் பொலிஸாரும் இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினரும் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பு படையினரும் சுங்க அதிகாரிகளும் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு உள்ளாவது அதிகரித்துள்ளமை குறித்தே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

### காசா போர் நிறுத்தத் திட்டம் குறித்து ஹமாஸ் பாதக நிலைப்பாடு: தொடர்ந்து பேச்சுவார்த்தை

காசாவில் இஸ்ரேல் படை தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி பலஸ்தீன போராளிகளுடன் கடும் மோதல் இடம்பெற்று வரும் நிலையில், போர் முன்மொழிவு தொடர்பில் தமது நிலைப்பாடு பாதகமாக இருப்பதாக ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் போர் நிறுத்த முன்மொழிவு தொடர்பான (ஹமாஸ்) அமைப்பின் நிலைப்பாடு பாதகமாகவே இருப்பதாகவும் ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் ஓசாமா ஹம்தான் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு நேற்று (02) குறிப்பிட்டிருந்தார்.



இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதே தமது அமைப்பின் நோக்கமாக இருந்து வருகிறது என்று ஹமாஸ் மூத்த அதிகாரி சுஹைல் அல் ஹின்தி ஏ.எப்.பி. இடம் குறிப்பிட்டுள்ளார். இது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் நிலைப்பாட்டுக்கு முரணானது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

காசாவின் தெற்கு விளிம்பில் உள்ள ரபாவில் 1.5 மில்லியன் பொதுமக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையில் அந்தப் பகுதியிக்கு தரைப்படையை அனுப்புவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாக குறிப்பிட்டிருந்தார்.

'உடன்பாடு எட்டப்பட்டாலும் இல்லாவிட்டாலும் நாம் ரபாவுக்குள் நுழைந்து ஹமாஸ் படைப்பிரிவுகளை ஒழிப்போம்' என்று நெதன்யாகு இந்த வாரத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இரகசிய இடம் ஒன்றில் இருந்து தொலைபேசியில் பேசிய ஹமாஸ் அதிகாரி ஹின்தி, 'எல்லாவற்றையும் அழித்து வரும் பலஸ்தீன மக்கள் மீதான இந்தப் பயங்கரப் போரை முடிவுக்குக் கொண்டுவர ஹமாஸ் மற்றும் அனைத்து பலஸ்தீன போராட்டக் குழுக்களும் பெரும் ஆர்வத்துடன் உள்ளன.

ஆனால் அது எந்த விலை கொடுத்ததாகவும் இருக்காது' என்று குறிப்பிட்டார். 'எந்த சூழ்நிலையிலும் வெள்ளைக் கொடியை உயர்த்தவோ அல்லது இஸ்ரேலிய எதிரியின் நிபந்தனைகளுக்கு சரணடையவோ முடியாது' என்று அவர் வலியுறுத்தினார்.

காசா போர் நிறுத்தத் திட்டத்தை ஏற்கும்படி அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் ஹமாஸ் அமைப்பை வலியுறுத்தி வருகிறார்.

40 நாள் போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பல பலஸ்தீனர்களுக்காக பணயக் கைதிகளை விடுவிக்கும் திட்டத்தை மத்தியஸ்தர்கள் ஹமாஸிடம் முன்வைத்துள்ளனர்.

இந்த முன்மொழிவுக்கு விரைவில் பதிலளிப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

'ஹமாஸ் ஆம் என்று குறிப்பிட்டு இதனைச் செய்ய வேண்டும்' என்று ஒக்டோபர் 7 ஆம் திகதி காசா போர் வெடித்த பின்னர் ஏழாவது முறையாக பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிளிங்கன் இஸ்ரேல் சென்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பின்னர் கருத்துத் தெரிவித்த அவர், 'பலஸ்தீன மக்கள் மீது அக்கறை செலுத்தி அவர்கள் படும் வேதனையை உடன் நீக்கும் உண்மையான நோக்கத்தை ஹமாஸ் கொண்டிருந்தால் இந்த உடன்படிக்கையை அவர்கள் ஏற்பார்கள்' என்றார்.

காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் கெய்ரோவில் இடம்பெற்று வருகிறது.

உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு தேவையான நெகிழ்வுப் போக்கை அனைத்து தரப்புகளும் காண்பிக்க வேண்டும் என்று எகிப்து வெளியுறவு அமைச்சர் ஹசாமிஹ் ஷுக்ரி அழைப்பு விடுத்துள்ளார். போர் நிறுத்த முயற்சியாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஸ்டபனே செஜோர் கெய்ரோ பயணித்த நிலையில் அவரை சந்தித்தபோதே சுக்ரி இதனைத் தெரிவித்தார்.

எனினும் மற்றொரு தற்காலி போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஹமாஸ் உடன்படும் என்பதில் சந்தேகம் நீடிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். அவ்வாறான போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இஸ்ரேல் தமது படை நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு அதிகம் உள்ளது.

இதில் ஹமாஸிடம் இருந்து இன்னும் ஓர் இரு நாட்களில் போர் நிறுத்தம் குறித்து பதில் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கட்டார் மத்தியஸ்தர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேலின் முன்மொழிவில் 'உண்மையான சலுகைகள்' இருந்ததாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குறிப்பாக ஆரம்ப போர் நிறுத்தத்தை தொடர்ந்து 'நிலையான அமைதி' மற்றும் பணயக்கைதிகள் பரிமாற்றம் ஆகியவை உள்ளடங்குகிறது.

எனினும் காசாவில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவது சர்ச்சைக்குரியதாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் அங்கிருந்து இஸ்ரேலிய படையினர் வாபஸ் பெற ஹமாஸ் நிபந்தனை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மேலும் 28 பேர் பலி**

இந்நிலையில் மத்திய காசாவின் பிராதான சந்தியில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரேலிய துருப்புகள் மீது பலஸ்தீன போராட்டக் குழுக்கள் நேற்று கடும் தாக்குதல்களை நடத்தியதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த புதன் இரவு தொடக்கம் காசாவில் இஸ்ரேலின் வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் தீவிரமாக இருந்ததாக அங்கிருப்பவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதில் மத்திய காசாவின் நுசைரத் அகதி முகாமில் இஸ்ரேலின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதோடு அங்குள்ள பள்ளிவாசல் ஒன்றையும் இஸ்ரேலிய படைகள் தாக்கியுள்ளன.

மத்திய காசாவின் அல் சஹ்ரா பகுதியில் இடம்பெற்ற இஸ்ரேலின் குண்டு வீச்சில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. அங்கு குடியிருப்பாளர்கள் மற்றும் மீட்பாளர்கள் இடிபாடுகளில் இருந்து மூன்று சிதைந்த உடல்களையும் கண்டுபிடித்துள்ளனர்.



தெற்கு நகரான கான் யூனிஸில் கா அல் குரைன் பகுதில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சில் ஒருவர் கொல்லப்பட்டு பலரும் காயமடைந்தாக வபா குறிப்பிட்டது.

அதேபோன்று காசா நகரின் தெற்கில் உள்ள அல் செய்தூன் பகுதியின் இஷ்தைவி குடும்பத்திற்கு சொந்தமான குடியிருப்பு கட்டடத்தின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் நடத்திய குண்டு மழையில் இருவர் கொல்லப்பட்டதோடு காணாமல்போன பலரும் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காசாவில் 28 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 51 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,596 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 77,816 பேர் காயமடைந்துள்ளனர்.

### இஸ்ரேலுடனான உறவை துண்டிக்கிறது கொலம்பியா



காசா போர் தொடர்பில் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவை துண்டிக்கப்போவதாக கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ அறிவித்துள்ளார்.

தலைநகர் பொகோடாவில் நேற்று முன்தினம் (01) நடந்த மே தின ஊர்வலத்தில் பேசிய ஜனாதிபதி, காசாவில் இஸ்ரேலின் முற்றுகை போர் குற்றமாகும் என்றும் குறிப்பிட்டார். லத்தீன் அமெரிக்காவில் இஸ்ரேலின் நெருங்கி நட்பு நாடாக கொலம்பியா இருந்து வந்தபோதும், 2022 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இடதுசாரி தலைவரான பெட்ரோ, காசா போர் வெடித்தது தொடக்கம் பிராந்தியத்தில் இஸ்ரேலை கடுமையாக விமர்சிப்பவராக மாறியுள்ளார்.

'இனப்படுகொலைகளுக்காக இஸ்ரேல் அரசுடனான இராஜதந்திர உறவை நாளை முறித்துக் கொள்கிறோம்' என்று கூறிய பெட்ரோ, 'பலஸ்தீனர் உயிரிழந்தால், மனித குலத்தின் உயிரிழப்பாகும், அதனை மரணிக்க நாம் விடமாட்டோம்' என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மின்வலு மற்றும் சக்திவலு அமைச்சு
## இலங்கை அணுசக்தி சபை

# பெறுகை அறிவித்தல்
# சேவைகளின் பெறுகை

இலங்கை அணுசக்தி சபையின் பின்வரும் தேவைப்படுத்தல்களுக்காக இலங்கையிலுள்ள புகழ்வாய்ந்த சேவை வழங்குனர்களிடமிருந்து வெல்லம்பிட்டிய, ஒறுகொடவத்த, பேஸ்லையின் வீதி, 60/460 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை அணுசக்தி சபை, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- ❖ சுகாதார சுத்திகரிப்பு சேவை - இலங்கை அணுசக்தி சபை, 60/460 பேஸ்லைன் வீதி, ஒறுகொடவத்த, வெல்லம்பிட்டிய
- ❖ சுகாதார சுத்திகரிப்பு சேவை - பாதிப்பை ஏற்படுத்தாத பரீட்சித்தலுக்கான தேசிய நிலையம் - 977/18, புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி.

Complete information is in SLAEB webpage www.aeb.gov.lk (under the tap procurement/paper advertisement)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல் மட்டம்),**
**இலங்கை அணுசக்தி சபை,**
**60/460 பேஸ்லையின் வீதி,**
**ஒறுகொடவத்த,**
**வெல்லம்பிட்டிய.**

**தொலைபேசி: 0112 533 427**
**தொலைநகல்: 0112 533 448**
**மின்னஞ்சல்:** procurement@aeb.gov.lk

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

2022/2023 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிகளுக்காக 2024.05.20 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுனர் (Demonstrator)

**சமூக விஞ்ஞானங்கள் கற்கைநெறிப் பீடம்**

பல்லூடக தொடர்பாடல்/ தத்துவசாஸ்திரம்/ நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம்/ வரலாறு/ சமூகவியல்/ புவியியல்/ தொல்லியல்/ பொருளாதாரம்/ சமூக புள்ளி விபரம்/ சமூக விஞ்ஞானம்/ சர்வதேச கற்கைநெறிகள்/ தகவல் தொழில்நுட்பவியல்.

**பீடாதிபதியின் அலுவலகம்**

வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகள் கற்கைநெறிப்பீடம் வர்த்தகம் மற்றும் நிதிசார் முகாமைத்துவம்/ கணக்கியல் திணைக்களம்

**விண்ணப்பிக்கும் முறை:**

விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்-லையினூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**03.05.2024**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Contract No.: PD/UDA/DPC/FIMS/14/2024**

### நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக நிதி முகாமைத்துவ தகவல் முறையை (FMIS) வடிவமைத்தல், மேம்படுத்தல் மற்றும் அமுல்நடத்தல்

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக நிதி முகாமைத்துவ தகவல் முறையின் செயற்பாட்டிற்காக வடிவமைத்தல், மேம்படுத்தல் மற்றும் அமுல்நடத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் (மேல் மட்டம்) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்கும் தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, கட்டம் 1, ‘செத்சிரிபாய’, 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகைக் தலைவரிடமிருந்து பெற்று 2024 மே 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 3 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பெறுகை தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2024 மே 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 3 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 13,000 ரூபாவையும் மற்றும் வரிகளையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவிலுள்ள சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, கட்டம் 1, ‘செத்சிரிபாய’, 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமான விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரொருவரினால் கொள்வனவு செய்யலாம்.
5. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் விலைமனுக்கோரல் ஆவணங்களிலுள்ள உருமாதிரிக்கேற்றவாறு 530,000 ரூபா பெறுமதியான வங்கி உத்தரவாத பாங்கில் 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று வரையுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை என முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024 ஜூன் 4 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியுடன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிரிபாய, 1 ஆம் கட்டம், பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், விலைமனுதாரர் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. 2024 மே 21 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு பத்தரமுல்ல, கட்டம் 1, ‘செத்சிரிபாய’, 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகை அலகில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனுதாரர்கள் அனைவரும் இந்த கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி மதியுரை வழங்கப்படுகின்றனர்.
8. விலைமனுதாரரின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவ இருப்பு நிலை ஆகியன விலைமனுதாரர்களை தெரிவு செய்தலில் கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். குறைவாக செயற்பாட்டை காட்சிப்படுத்தும் விலைமனுதாரர்கள் விலைமனுக்களை வழங்குவதற்காக பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.
9. எந்தவொரு விலைமனுக்களையும் தயாரிக்கும் ஆகுசெலவிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித பொறுப்பையும் ஏற்க மாட்டாது. திணைக்கள பெறுகைக் குழுவானது (உயர் மட்டம்) பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமானதொரு விலைமனுவை தெரிவு செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**7 ஆம் மாடி, ‘செத்சிரிபாய’, 1 ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

### E-1 தெற்கு அதிவேக வீதியில் 119வது கி.மீற்றரில் உள்ள உடுகாவ சேவை பிரதேசத்தை நிர்மாணிப்பதற்காக AGGREGATE BASE COURSE பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல்

1. E-1 தெற்கு அதிவேக வீதியில் 119வது கி.மீற்றரில் உள்ள உடுகாவ சேவை பிரதேசத்தை நிர்மாணிப்பதற்காக AGGREGATE BASE COURSE பொருட்களுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பாக பிராந்திய பெறுகைக் குழு விசேடத் திட்டப் பிரிவு தலைவர் அழைக்கின்றார்.
2. சித்திகரமான விலைமனுதாரர் அல்லது அவரது முகவர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| # | ஒப்பந்த இல. | விபரங்கள் | பொறியியலாளர் மதிப்பீடு (வெட் இன்றி) | AGGREGATE இன் அளவு (mm) | மொத்த அளவு (CUM) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | காலம் (மாதங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | RDA/PRJT/WP/TB/ 2024/K-15 | E-1 தெற்கு அதிவேக வீதியில் 119வது கி.மீற்றரில் உள்ள உடுகாவ சேவை பிரதேசத்தை நிர்மாணிப்பதற்காக AGGREGATE BASE COURSE பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 26 மில்லியன் | 37.5mm | 4000 | 300,000.00 | 02 |

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள வழங்குநர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’ 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2876600, தொலைநகல்: 011-2877226) மற்றும் 2024-05-01ஆம் திகதி முதல் www.rda.lk எனும் இணையதளத்தில் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டை (பண வைப்புச் சீட்டின் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) 2024-05-02ஆம் திகதி முதல் 2024-05-21ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை விசேட செயற்றிட்டப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சலின் ஊடாக அனுப்பி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை மின்னஞ்சலின் ஊடாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   மின்னஞ்சல் முகவரி: rda.ddqsp@gmail.com

   மீளளிக்கப்படாத 4200.00 ரூபா கேள்விக் கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

   **கணக்கின் பெயர் : Project Diector (WP) - RDA**
   **கணக்கிலக்கம் : 70532635**
   **வங்கியின் பெயர் : இலங்கை வங்கி - பத்தரமுல்ல**

   விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது பரீட்சித்துப் பார்க்கப்படும். செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, செத்சிறிபாய, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 1ஆம் மாடி, விசேட செயற்றிட்ட அலுவலகத்தில் இடம்பெறும்.
7. பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடனான விலைமனுக்களை நகல் பிரதியுடன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதிப்பணிப்பாளர் நாயகம், விசேட செயற்றிட்டப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 1ஆம் மாடி, ‘செத்சிறிபாய’, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-05-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’ 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ E-1 தெற்கு அதிவேக வீதியில் 119வது கி.மீற்றரில் உள்ள உடுகாவ சேவை பிரதேசத்தை நிர்மாணிப்பதற்காக AGGREGATE BASE COURSE பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல்’’ எனத் தயவு செய்து குறிப்பிடவும்.
9. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். ஒவ்வொரு விலைமனுவுடனும் 2024-08-06ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விசேட செயற்றிட்டப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


Education Co-operative Society (EDCS)

# மாவட்ட அலுவலகங்களுக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கத்தின் பின்வரும் நகரங்களில் கிளைகளை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான வர்த்தக ரீதியிலான கட்டிடங்களை குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்படும் திறந்த விலைமனுக்கோரல்.

| தொ. இல. | மாவட்ட அலுவலகம் | கட்டிடம் இருக்க வேண்டிய நகரம் | தேவையான சதுர அடி அளவு |
|---|---|---|---|
| 01 | மாத்தறை மாவட்ட அலுவலகம் | மாத்தறை | 4250 - 4500 |
| 02 | புத்தளம் மாவட்ட அலுவலகம் | புத்தளம் | 3500 - 4000 |
| 03 | மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் | மட்டக்களப்பு | 3000 - 3500 |
| 04 | மொனராகலை மாவட்ட அலுவலகம் | மொனராகலை | 2800 - 3000 |
| 05 | குருநாகல் மாவட்ட அலுவலகம் | குருநாகல் | 6800 - 7000 |

**கட்டிடம் தொடர்பில் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் :**

- கேள்வி சமர்ப்பிக்கப்படும் கட்டிடமானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களின் பிரதான வீதிக்கு அல்லது கிளை வீதிக்கு முகப்பாக நகரத்திற்கு அண்மித்ததாக இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் கட்டிடம் அலுவலகத்திற்குப் பொருத்தமான வகையில் இருக்க வேண்டும் என்பதுடன் கட்டிடத்தில் தரைக்கு தரையோடு (Tile) பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆகக் குறைந்தது 05 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் இருத்தல் வேண்டும்.
- சிறந்த தரத்துடனான துப்புரவேற்பாட்டு வசதிகள் (ஆகக் குறைந்தது 04 மலசலகூடங்கள்) இருத்தல் வேண்டும்.
- முழுக் கட்டிடமும் வளிச்சீராக்கத்துடன் இருத்தல் வேண்டும். வளிச்சீராக்கம் அற்றவையானால் வளிச்சீராக்கம் செய்து கொடுக்கக் கூடிய விலைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- நீர் மற்றும் மின்சார வசதிகள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும். என்பதுடன் நீரைச் சேமித்து வைப்பதற்காக 2000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் விலைகளுடன் கட்டிடத்தின் திட்ட வரைபடம் மற்றும் உறுதியின் பிரதியொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் மாதாந்த வாடகை போன்று 6 மடங்கு தொகை முற்பணமாக வழங்கப்படும்.

உரித்துடைமையை நிரூபிக்கும் மற்றும் இயைபுடைய சகல ஆவணங்களுடன் உரிமையாளர் அல்லது அட்டோர்ணி அதிகாரம் உள்ளவர்கள் மாத்திரம் விலைமனுக்களை 2024.05.18ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன் சங்கத்தின் பிரதான செயலாளருக்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கட்டிட குத்தகைக்கான விலைமனு’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கவனிக்கவும்:**

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிகளை பிரதான அலுவலகம் அல்லது மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அம்மாதிரிப் படிவங்களிலேயே கேள்விப் படிவங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தலைமையகத்தின் நிர்வாக சபை அறையில் திறக்கப்படுவதுடன், அன்றையதினம் உங்களுக்கு சமுகமளிக்க முடியும் எனத் தெரிவிக்கிறேன்.

மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்களின் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுவது நிர்வாக சபையினால் ஆவதுடன் அத்தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

**பிரதான செயலாளர்,**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்கம்,**
**இல. 294, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி இல. 0112 370067 / 0112 575172**
**தொலைநகல்: 0112 577475**


The Housewives' companion
Classifieds on
Daily News

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch
Acc. No. 000000377

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

ABA-6491 BAJAJ 2015, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 028366

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் மீதான ஏல விற்பனை

| கிளை | அடகு வைக்கப்பட்ட கால வரையறை | ஏலம் விடப்படும் இடம் மற்றும்திகதி |
|---|---|---|
| சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டி, கிரிஉல்ல, மாகோ, ஆனமடு, வாரியப்பொலை, நாரம்மலை | 31.03.2023 | 15.05.2024(புதன்கிழமை) SDB வங்கி PLC, வடமேல் பிராந்திய அலுவலகம் 105, கொழும்பு வீதி, குருநாகல் |
| அனுராதபுரம், பொலன்நறுவை, தம்புத்தேகம, மதவாச்சி, அரலகங்வில, கலன்பிந்துனுவேவ, கெக்கிராவை, தலாவை, நொச்சியாகம | 31.03.2023 | 16.05.2024 (வியாழக்கிழமை) SDB வங்கி PLC, இல.12, மைத்திரிபால சேனாநாயக்க வீதி, அனுராதபுரம் |
| வவுனியா, யாழ்ப்பாணம், நானாட்டான், கிளிநொச்சி, சுன்னாகம், மன்னார் | 31.03.2023 | 17.05.2024(வெள்ளிக்கிழமை) SDB வங்கி PLC, இல.234, கண்டி வீதி, வவுனியா |
| திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, மூதூர், பொத்துவில், தெஹியத்தைகண்டிய, களுவாஞ்சிக்குடி, சம்மாந்துறை, வாழைச்சேனை, உகணை, கந்தளாய்,ஹிங்குரான, அக்கரைப்பற்று | 31.03.2023 | 18.05.2024 (சனிக்கிழமை) SDB வங்கி PLC, இல.24வ, பார் வீதி, மட்டக்களப்பு |
| கராப்பிட்டிய, அக்குரஸை, அம்பலாந்தோட்டை, அம்பலாங்கொடை, மாத்தறை, காலி, தல்கஸ்வல, தெனியாய, அங்குனுகொலபெலஸ்ஸ, எல்பிட்டிய, யக்கலமுல்ல, கட்டுவான, திஸ்ஸமகராமை. | 31.03.2023 | 21.05.2024 (செவ்வாய்க்கிழமை) SDB வங்கி PLC, இல. 6A, புதிய வீதி, அம்பலாங்கொடை |
| மொனராகலை, பதுளை, சியம்பலாண்டுவை, புத்தல, பண்டாரவளை | 31.03.2023 | 22.05.2024 (புதன்கிழமை) SDB வங்கி PLC, இல.139, வெள்ளவாய வீதி, மொனராகலை |
| மாத்தளை, கண்டி, ரிக்கில்லகஸ்கட, தம்புள்ள, கம்பளை, பிலிமத்தலாவை, ஹதரலியத்தை, கலேவலை | 31.03.2023 | 27.05.2024 (திங்கட்கிழமை) SDB வங்கி PLC, மத்திய பிராந்திய அலுவலகம், இல.171, டீ.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி |
| கேகாலை, எம்பிலிப்பிட்டிய, ருவன்வெல்ல, இரத்தினர்பி, வறக்காப்பொல, ரம்புக்கணை, தெரணியகலை‑ மாவனல்லை | 31.03.2023 | 28.05.2024 (செவ்வாய்க்கிழமை) SDB வங்கி PLC, இல.342, பிரதான வீதி, கேகாலை |
| யூனியன் பிளேஸ் கிளை, பத்தரமுல்லை, ஹொரணை, கிரிபத்கொடை, தெமட்டகொடை, களுத்துறை, நீர்கொழும்பு, மத்துகமை, கிருலப்பனை, மொரட்டுவை, கடுவெலை, அழுத்கமை, மஹரகமை,கம்பஹா, மாலபே, மாபாகே, தெஹிவளை, ஏக்கலை, பிலியந்தலை, பாணந்துறை | 31.03.2023 | 29.05.2024 (புதன்கிழமை) SDB வங்கி PLC, மேல் மாகாண பிராந்திய அலுவலகம் 1, இல.210/01, கடுவெலை றோட், பத்தரமுல்லை |

ஏலத்தில் விடும் நிகழ்வு மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகும்

(இந்நிகழ்வை இரத்து செய்வதற்கு, ஒத்தி வைப்பதற்கு அல்லது ஏலத்தில் விடும் நிகழ்வில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதற்கு மற்றும் ஏலம் இடம்பெறும் இடத்தில ஏதேனும் மாற்றங்களை முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்வதற்குரிய சகல உரிமையும் வங்கியையே சாரும்.)

**முகாமையாளர் அடகு**
இல 12 எட்மன்டன் வீதி
கிருலப்பனை, கொழும்பு 06 ,இலங்கை.
தொலைபேசி 011 5411411 / 011 2832500

SDB வங்கி #உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating of BB +(lka),Reg. No: PB62PQ

# மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏலவிற்பனை

வ/ப பன்னில்பத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான கஹவத்த எந்தான, பஹமுனுபத்த, தெமுவான, பொரஹின்எல்ல, மடலகம ஜனபதய, நஹல்வத்துர, பனாபிட்டிய எனும் கிராமிய வங்கிகளில் 2022-07-01ஆம் திகதி முதல் 2023-01-31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு ஆனால் 2024-06-14ஆம் திகதி வரை மீட்கப்படாத அடகுத் தங்க ஆபரணங்களை 2024-06-15ஆம் திகதி மு.ப. 09.30 மணி முதல் கஹவத்த வ/ப பன்னில்பத்து பல

நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்.**

**தொலைபேசி இல. 0452271153 / 0452270242 / 0718302768**

# 2024/2025 க்கான டோடி வாடகை விற்பனை மாதம்பே பிரதேச செயலகத்தில் 01.07.2024 முதல் 30.06.2025 வரை

2024.04.01 முதல் 30.06.2025 வரையிலான காலப்பகுதிக்கான கள் வாடகை விற்பனைக்கான டெண்டர்கள் 2024.06.04 காலை 10.30 மணி பெறப்படும். மேலும் விபரங்களுக்கு 2024.05.03 அன்று இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியைப் பார்க்கவும்.

**ஈ.எம்.பி.பி. ஏகநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**மாதம்பே**

**2024.04.19 அன்று**
**பிரதேச செயலகம்,**
**மாதம்பே**

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## அநுராதபுரம் மாநகர சபை

### பொசன் உற்சவத்தின் பொருட்டு வியாபார இடப்பரப்புகளை குத்தகைக்கு வழங்குதல் 2024 ஜூ ன் 21ஆம் திகதி முதல் ஜூ லை 01ஆம் திகதி வரை

2024ஆம் வருடத்தில் பொசன் உற்சவம் இடம்பெறும் ஜூன் மாதம் 21ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 01ஆம் திகதி வரையில் விற்பனை நடவடிக்கைகளுக்காக பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள தற்காலிக விற்பனை இடப்பரப்புகளை குத்தகைக்கு வழங்குவதற்காக 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

01. விற்பனை இடப்பரப்பு (10 அடி 10 அடி அளவு)

| இடப்பரப்பின் விபரம் | இடப்பரப்பு அமைந்துள்ள வலயம் | ஒரு இடப் பரப்பிற்கான ஆகக் குறைந்த விலைக்கோரல் (வரிகள் இன்றி) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ஒரு இடப்பரப்பிற்கு) |
|---|---|---|---|
| சிங்க தூண் பாலத்திற்கு அண்மையிலுள்ள பகுதி | E | 20,000.00 | 10,000.00 |
| ஜயந்தி மாவத்தை (சிங்க தூண் பாலத்தின் இறுதியிலிருந்து ரத்னமாலி ஓய்வு மண்டபம் வரை) | F | 32,000.00 | 16,000.00 |
| ஜயந்தி மாவத்தை (சீ பேங்க் ரெஸ்ட் விடுமுறை களிப்பிடத்திற்கு முன்னால்) | G | 32,000.00 | 16,000.00 |
| ஜயந்தி மாவத்தை (விடுமுறை களிப்பிடத்திற்கு முன்னால்) | H | 32,000.00 | 16,000.00 |
| ஜயந்தி மாவத்தை (அனுர குஜி முன்பள்ளிக்கு முன்னால்) | I | 20,000.00 | 10,000.00 |
| ஜயந்தி மாவத்தை (புகையிரத இல்லத்திற்கு முன்னால்) | J (13,14,15 தவிர) | 16,000.00 | 8,000.00 |
| ஜயந்தி மாவத்தை (புகையிரத இல்லத்திற்கு முன்னால்) | K (1,2,3 தவிர) | 32,000.00 | 16,000.00 |
| ஜயந்தி மாவத்தை (புகையிரத இல்லத்திற்கு முன்னால்) | L | 32,000.00 | 16,000.00 |
| ஜயந்தி மாவத்தை (சுகாதார நிலையத்திற்கு முன்னால்) | M | 28,000.00 | 14,000.00 |
| ஜயந்தி மாவத்தை (ஹரிஸ்சந்திர பூங்காவிற்கு முன்னால்) | N 1 - 18 (2,3,4,5,15,16,17,18 தவிர)<br>N 19 - 31<br>N 32 - 45<br>N 46 - 35 | 30,000.00<br>20,000.00<br>10,000.00<br>5,000.00 | 15,000.00<br>10,000.00<br>5,000.00<br>2,500.00 |
| ஜயந்தி மாவத்தை (ஹரிஸ்சந்திர பூங்காவிற்கு முன்னால்) | N - 2, 3, 4, 5 | 400,000.00 | 200,000.00 |
| ஜயந்தி மாவத்தை (ஹரிஸ்சந்திர பூங்காவிற்கு முன்னால்) | N - 15, 16, 17, 18 | 400,000.00 | 200,000.00 |
| ஜயந்தி மாவத்தை (புகையிரத இல்லத்திற்கு முன்னால்) | J - 13, 14, 15 | 300,000.00 | 150,000.00 |
| ஜயந்தி மாவத்தை (புகையிரத இல்லத்திற்கு முன்னால்) | K - 01, 02, 03 | 300,000.00 | 150,000.00 |

**நிபந்தனைகள் மற்றும் ஏனைய அறிவுரைகள்**

01. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது அநுராதபுரம் மாநகர சபையினால் வழங்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் மட்டுமே சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
02. விலைக்கோரல் படிவக் கட்டணமான 2,000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை அநுராதபுரம் மாநகர சபையின் நிதித் திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் மீளளிக்கப்படும் பிணை வைப்பைச் செலுத்துதல் கட்டாயமாகும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் வைப்பிற்கு இயைபான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி மற்றும் விலைமனுதாரரின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
03. N வலயத்தில் 2, 3, 4, 5 இலக்கங்களும் J வலயத்தில் 13, 14, 15 இலக்கங்களும் K வலயத்தில் 1,2,3 எனும் இலக்க நிலப்பரப்புகள் பொழுதுபோக்கு விளையாட்டுகளை நடாத்துவதற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
04. மேற்கூறிய 03ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்புகள் தவிர்ந்த ஏனைய நிலப் பரப்புகளில் பொழுதுபோக்கு விளையாட்டுகளை நடாத்துவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதுடன் விற்பனை நடவடிக்கைகளுக்காக மட்டும் அனுமதி வழங்கப்படும்.
05. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் வைப்பிற்கு இயைபான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி மற்றும் விலைமனுதாரரின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வெற்றிகரமான விலைமனுதாரரின் விலைக்கோரல் தொகைக்காக மீளளிக்கப்படும் வைப்பை ஈடுசெய்யலாம்.
06. நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை இன்றி சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.
08. விற்பனை இடப்பரப்பைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது, ''விற்பனை இடப்பரப்பை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வலயத்தின் ஆங்கில அரிச்சுவடு'' (உதா - விற்பனை இடப்பரப்பை குத்தகைக்கு வழங்குதல் N வலயத்திற்கான விலைமனு) எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
09. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்த நாள் பிரசித்த விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் மு.ப. 10.00 மணிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது நிறைவு செய்யப்பட்டு அக்கணமே விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதானால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் கட்டாயமாகும்.
11. தெரிவு செய்யப்படும் வெற்றிகரமான விலைமனுதாரருக்கு விலைக்கோரல் வழங்கப்பட்டதன் பின் குறித்த விலைக்கோரல் தொகையை உடனடியாக மாநகர சபைக்குச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாவிட்டால் அந்த விலைமனு நிராகரிக்கப்படும் என்பதுடன் மீளளிக்கப்படும் வைப்புத் தொகை மாநகர சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.
12. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 025-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மற்றும் மாநகர சபையின் பின்வரும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர் - 025-2222276**
**கணக்காளர் - 025-2227745**
**பிரதான வருமான பரிசோதகர் - 071-2365971**

**டபிள்யூ.எம். ருவன் விஜேசிங்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

**2024-04-29ஆம் திகதி,**
**அநுராதபுரம் மாநகர சபை அலுவலகத்தில்.**

# பெறுகை அறிவித்தல்

## அநுராதபுரம் மாநகர சபை

### 'புரவர உதானய - 2024' நகர்ப்புற வருமானத்தை உருவாக்கும் வேலைத்திட்டம் - 2024 ஜூ ன் 21ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை களியாட்ட இடப்பரப்பிற்குள் சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்கு வழங்குதல்

2024 பொசொன் உற்சவ வேளையில் அநுராதபுரம் மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்படும் ''புரவர உதானய - 2024'' வருமானத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்ட வேளையில் இடப்பரப்பிற்குள் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகளை அநுராதபுரம் மாநகர சபையினால் தரப்படுத்தப்படுதலின் போது A தரத்தைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இதற்காக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையில் (அரச வேலை நாட்களில்) வழங்கப்படும்.

**01. சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்கு வழங்குதல்**

| தொ. இல. | அளவு | படிவக் கட்டணம் | ஆகக் குறைந்த விலைக்கோரல் | மீளளிக்கப்படும் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | 20' x 40' | 2,000.00 | 350,000.00 | 175,000.00 |

**நிபந்தனைகள் மற்றும் ஏனைய அறிவுரைகள்**

1. சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான இடப்பரப்பு மட்டும் (நிலப்பரப்பு திட்டத்தை நகர சபை வளவில் பரீட்சித்துப் பார்க்கலாம்) வழங்கப்படும் என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரினால் தேவையான மறைப்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்படல் வேண்டும்.
2. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது அநுராதபுரம் மாநகர சபையினால் வழங்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் மட்டுமே சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. விலைக்கோரல் படிவக் கட்டணமான 2,000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை அநுராதபுரம் மாநகர சபையின் நிதித் திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் மீளளிக்கப்படும் பிணை வைப்பைச் செலுத்துதல் கட்டாயமாகும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் வைப்பிற்கு இயைபான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதி மற்றும் விலைமனுதாரரின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அநுராதபுரம் மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''புரவர உதானய 2024 களியாட்ட இடப்பரப்பினுள் சிற்றுண்டிச்சாலைக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்த நாள் பிரசித்த விடுமுறைத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் மு.ப. 10.00 மணிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது நிறைவு செய்யப்பட்டு அக்கணமே விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதானால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் கட்டாயமாகும்.
7. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 025-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மற்றும் மாநகர சபையின் பின்வரும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர் - 025-2222276**
**கணக்காளர் - 025-2227745**
**பிரதான வருமான பரிசோதகர் - 071-2365971**

**டபிள்யூ.எம். ருவன் விஜேசிங்க,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

**2024-04-29ஆம் திகதி,**
**அநுராதபுரம் மாநகர சபை அலுவலகத்தில்.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/- (Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

The Housewives' companion Classifieds on Daily News

## இலங்கை ஜேர்மனி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் – (CGTTI) – மொறட்டுவ

(கல்வி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு)

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கனனிகள் மற்றும் துணைப்பாகங்கள், பயிற்சி உபகரணம் மற்றும் இயந்திராதி ஆகியவற்றின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்காக கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், பயிற்சி உபகரணங்கள் மற்றும் இயந்திராதி ஆகியவற்றின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன திணைக்கள பெறுகைத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | IFB விலைமனு இலக்கம் | விளக்கம் | அம்சங்களின் எண்ணிக்கை | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 1 | CGTTI/TB/01/20/2024 | CGTTI இற்கு வளிச்சீராக்கல்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 07 | 20,000.00 |
| 2 | CGTTI/TB/01/25/29/2024 | CGTTI இற்கு கணனி துணைப்பாகங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 63 | 120,000.00 |
| 3 | CGTTI/TB/01/31/2024 | CGTTI இற்கு கருவிகள் மற்றும் பயிற்சி உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல். | 41 | 100,000.00 |
| 4 | CGTTI/TB/01/32/2024 | CGTTI இன் வார்ப்பியல் மற்றும் உருக்கியிணைத்தல் பிரிவுகளுக்கு பயிற்சி உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல். | 12 | 52,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
2. பல எண்ணிக்கையுள்ள விருப்புக்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. (விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்பவரின் விபரக்குறிப்புக்களுக்கு மாத்திரமே அமைந்தொழுகல் வேண்டும்)
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்று 2024 மே 27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம் (தொலைபேசி: 0112605625/0115741007)
4. விலைமனுதாரர் வியாபார பதிவைக் கொண்டிருப்பதுடன் கிட்டிய மூன்று வருடங்களில் நிகரான உற்பத்திகளை வழங்கலின் அனுபவம் மற்றும் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது 20 மில்லியனுக்கு (இருபது மில்லியன்) அதிகமாக அல்லது நிகராகவிருத்தல் வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக தேவையான சான்றுபகரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
5. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 2024 மே 03 ஆம் திகதியிலிருந்து 2024 மே 27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் CGTTI இன் கணக்கியல் பிரிவில் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனு முன்கூட்டமானது 2024 மே 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கல்கிசை, காலி வீதி, 582 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாநாட்டு அறையில் நடைபெறும்.
7. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையின் தொகைகள் மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு தொகைக்காகவும் 120 நாட்களுக்கு (2024 மே 28 ஆம் திகதியிலிருந்து 2024 செப்டம்பர் 24 ஆம் திகதி வரையும்) விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்தும் பணிப்பாளர்/ அதிபர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தலும் வேண்டும்.
8. விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் 2024 மே 28ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்களை நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாளர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். "IFB Bid No. and Description of bid should be written on top left hand corner of the envelope"

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்,**
**582, காலி வீதி, கல்கிசை.**
**03.05.2024.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் CKE & OCH இற்கு Reflector Tabs ஐ வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்.<br>கேள்வி இல.: RDA/EOM&M/CKE&OCH/REFLECTORS/2024/12 |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்குறிப்பிட்டுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை 2024.05.03 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதி வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், அநெஇப ம நி பிரிவு பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| அம்ச இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை, வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஆகியவற்றிற்கான கட்டண தடை இயந்திரங்கள் மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நீடித்தல். RDA/EOM&M/ELE/TBM/2024/13 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்குறிப்பிட்டுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை 2024 மே 03 ஆம் திகதியிலிருந்து 2024 மே 29 ஆம் திகதி வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், வீஅஅ பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# பெறுகை அறிவித்தல், மாவட்டப் பொது வைத்தியசாலை – நுவரெலியா

### நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் "The Second Phase of Digitalizing the PAC System and HHIM System for the New Hospital Building" என்பதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

இலங்கை சுகாதார அமைச்சின் சார்பில் நுவரெலியா, மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவினால் வைத்தியசாலை "The Second Phase of Digitalizing the PAC System and HHIM System for the New Hospital Building" என்பதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், வைத்தியசாலைக்கு ஒப்படைத்தல் மற்றும் சேவை மற்றும் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | உருப்படி / உபகரணம் | எண்ணிக்கை | | | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (மீளளிக்கப்படாதது) | விலைமனு மாதிரிப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) |
|---|---|---|---|---|---|---|
| | | (PSSP Project) PACS முறைமை | (GOSL FUND) HHIMS முறைமை | மொத்த எண்ணிக்கை | | |
| 1 | Laptops | 45 | 10 | 55 | 230,000.00 | Rs.4000.00 |
| 2 | Tablets | 55 | 0 | 55 | 152,500.00 | |
| 3 | Desktop Computer with UPS 600KVA | 20 | 0 | 20 | 116,500.00 | |
| 4 | Barcode Readers | 35 | 5 | 40 | 25,000.00 | |
| 5 | Inkjet printers | 20 | 0 | 20 | 40,000.00 | |
| 6 | Laser Printers | 1 | 2 | 3 | 4,500.00 | |
| 7 | Sticker Printer | 0 | 1 | 1 | 2,000.00 | |
| 8 | HD Webcam | 1 | 2 | 3 | 3,000.00 | |
| 9 | LED TV (55") | 1 | 0 | 1 | 3,500.00 | |
| 10 | All in one PC with Touch Screen (24") | 4 | 0 | 4 | 33,700.00 | |
| 11 | Heavy Duty photocopier (Digital) | 1 | 0 | 1 | 17,000.00 | |
| 12 | Laminating Machine | 2 | 0 | 2 | 2,000.00 | |
| 13 | Keyboard | 0 | 3 | 3 | 250.00 | |
| 14 | UPS Units (Online UPS 1KVA) | 0 | 2 | 2 | 4,300.00 | |
| 15 | Cisco Access Point | 0 | 1 | 1 | 650.00 | |
| 16 | Hot air rework soldering Station | 1 | 0 | 1 | 750.00 | |
| 17 | Portable Digital Soldering Microscope | 1 | 0 | 1 | 1,250.00 | |
| 18 | DC Adjustable Power Supply 30V/10A | 1 | 0 | 1 | 500.00 | |

- 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-23ஆம் திகதி வரையிலான சகல வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் நுவரெலியா, மாவட்ட பொது வைத்தியசாலை வழங்கல் மற்றும் அபிவிருத்திப் பிரிவிற்கு (Planning & Development Unit) வருகை தந்து, இயைபுடைய வேண்டுகோள் கடிதம், வியாபாரப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்து விலைக்கோரல் மாதிரிப் படிவக் கட்டணத்தை வைத்தியசாலை கணக்கிடல் பிரிவிற்கு செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான கடித உறைகளில் இட்டு பின் மீண்டும் அவ்வுறைகளை வேறொரு உறையில் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பெறுகை விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பின்வரும் வகையில் பெறுகை இலக்கம் மற்றும் இயைபுடைய பெறுகையின் பெயரை மிகவுத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் "The Second Phase of Digitalizing the PAC System and HHIM System for the New Hospital Building" என்பதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - GH/NE/PDU/02/PAC System/Stage-II/2024/25)
- விலைக்கோரல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-05-27ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும். 2024-05-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- சகல விலைமனுக்களின் பொருட்டும் மேற்கூறப்பட்ட விபரங்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியாக அல்லது கட்டளையொன்றாகச் சமர்ப்பிக்கலாம்.
- விலைக்கோரல் பிணை முறியை விலைக்கோரலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உருப்படிகளுக்கான பணத்திற்கு மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானதாகும்.
- எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
- மேலதிக விபரங்கள்: திருமதி. மேனகா கணேஷ்வரன் வழங்கல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு (Planning & Development Unit) (தொலைபேசி இல. 052-2224307, 052-2224306 (Ext 6622 அல்லது 6633)

**மருத்துவ நிபுணர் W.R.M. மஹேந்திர செனெவிரத்ன,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### அம்பாறை மாவட்டத்தில் சாஹிராக் கல்லூரிக்காக (தேசிய பாடசாலை) 1 ஆம் கட்டம் – கேட்போர் கூடத்துடன் மூன்று மாடி கட்டிட நிர்மாணம்.

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிருமாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அம்பாறை, அம்பாறை நிருவாக மாவட்ட, மாவட்ட செயலாளரின் சார்பாக திணைக்கள குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| வேலைகளின் விளக்கம் மற்றும் விலைமனு இல. | பெசேவ நீங்கலாக கேள்வியிடக் கூடிய விலைமனுத் தொகை (மில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்காட்டி நாட்கள்) | தேவைப்படும் தரம் மற்றும் விஷேடத்துவம் | தேவைப்படும் விலைமனுப் பிணை | | விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | செல்லுபடியாகும் காலப்பகுதி | |
| கல்முனை சாஹிராக் கல்லூரிக்காக (தேசிய பாடசாலை) கேட்போர் கூடத்துடனான மூன்று மாடி கட்டிட நிர்மாணம் | 50.50 மில் | 180 நாட்கள் | சி-4 அல்லது மேற்பட்டது | 505,000.00 | 2024.09.24 வரையும் | 2024.08.26 |

1. கல்முனை, 1 ஆம் கட்டத்திற்காக, சாஹிராக் கல்லூரி (தேசிய பாடசாலை) கேட்போர் கூடத்துடன் மூன்று மாடி நிர்மாண வேலையை இவ்வேலையானது கொண்டுள்ளது. நிருமாண காலப்பகுதியானது 180 நாட்காட்டி நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   - அ) கட்டிட நிருமாணத்தில் சி-4 ஆம் தரம் அல்லது மேற்பட்ட தரத்தில் CIDA/ICTAD பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆ) ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   - இ) விலைமனுதாரரானவர் கடந்த மூன்று வருடங்களில் அரசாங்கத்திற்கு, உள்ளூராட்சி அல்லது ஓரளவு அரசு சார்ந்த அமைப்பொன்றிற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் 50.50 மில்லியன் ரூபா அல்லது மேற்பட்ட தொகையில் ஆகக் குறைந்தது ஒரு செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
4. ஒப்பந்தத்தை பெறும் தகைமைக்காக பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ. கடன் வசதிகள் உள்ளதென (25 மில்லியன் அல்லது மேற்பட்டது) நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வங்கியாளரிடமிருந்து பெறப்பட்ட கூற்று.
   - ஆ. CIDA/ICTAD பதிவு தொடர்பான ஆவணச்சான்று
   - இ. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 75 மில்லியன் ரூபாவாகவிருத்தல்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அம்பாறை மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று 2024.05.06 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.05.06 ஆம் திகதியிலிருந்து 2024.05.28 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 15,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், அம்பாறை மாவட்ட செயலக பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியான மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், அம்பாறை என்பதற்கு 2024.05.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதே நாளில் மு.ப. 10 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் ஐந்து இலட்சத்து ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரத்திற்கான (505,000 இ.ரூ.) விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப் பிணையானது 2024.09.24 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. 2024.05.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அம்பாறை மாவட்ட செயலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
10. ஒப்பந்தத்தை வழங்குவதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியாகுமென்பதுடன் மொழிபெயர்ப்புகளிடையே ஏதும் முரண்பாடுகளிருப்பின், ஆங்கிலமே இறுதியானதென கருதப்படும்.
11. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் இந்த பெறுகையை இரத்துச் செய்வதற்கு அல்லது மீளப்பெறுவதற்கான உரிமையை தொழில் வழங்குநர் கொண்டுள்ளார்.
12. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை அம்பாறை மாவட்ட செயலக கணக்கிடல் அலகிலிருந்து அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்) பெற்றுக் கொள்ளலாம். 063 2222233, 063 2224458.

**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**அம்பாறை.**

Daily News Classifieds, the Housewives' companion

## வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்

# பதவி வெற்றிடங்கள்

வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம் நாட்டின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிக்கன கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகச் செயற்படும் கூட்டுறவுச் சங்கமாகும்.

சங்கத்தின் நுவரெலியா மற்றும் கதிர்காமம் விடுமுறை விடுதிகளில் நிலவும் விடுமுறை விடுதி முகாமையாளர் பதவி பதவி வெற்றிடங்களுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக திறமை மிக்க, சுறுசுறுப்பான மற்றும் அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விடுமுறை விடுதி முகாமையாளர் - E.3.3. (நிறைவேற்றுத் தரத்தின் IIIம் வகுப்பு)

**தகைமைகள்:**

வதிவிட முகாமைத்துவம் / ஹோட்டல் முகாமைத்துவ விடயங்கள் உள்ளடங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் இயைபுடைய துறையில் ஒரு வருட கால அனுபவம்

**அல்லது**

அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலையில் வதிவிட முகாமைத்துவம் / ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பிலான டிப்ளோமாவுடன் இயைபுடைய துறையில் இரண்டு வருட கால அனுபவம்

**அல்லது**

க.பொ.த. உ/தரத்துடன் வதிவிட முகாமைத்துவத்தில் 10 வருட கால அனுபவம்.

**சம்பள அளவு :** மாதாந்தம் 28,700 - 425x10 - 450x10 - 37,450/-

மேற்படி மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக 17,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**கவனிக்கவும்:**

1. விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சுயதரவுகள் சகிதம் சகல கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உள்ளடக்கி தங்களாலேயே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் தற்போது நீங்கள் கூட்டுறவுச் சங்கமொன்றில் சேவையில் உள்ளவராயின், குறித்த விண்ணப்பத்தை அந்த கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றிக் கொண்டு குறித்த விண்ணப்பத்தை கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சமர்ப்பிக்காது போனால் ஆட்சேர்க்கப்படும் போது அதுபற்றி நிரூபனமானால் குறித்த பதவியை வழங்காதிருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
3. இப்பதவிகள் ஓய்வூதியம் அற்ற பதவிகளாகும். தேர்ந்தெடுக்கப்படுபவரின் சம்பளத்தில் 10%, நிறுவனத்தினால் 15% சகிதம் ஊழியர் சேமலாப நிதியில் வைப்புச் செய்யப்படும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஓய்வு மண்டபத்தினுள் தங்கியிருந்து கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் கடமைக்கு வருமாறு அவசர அழைப்பு விடுக்கப்படும் போது சேவைக்கு சமுகமளிப்பதற்கு கட்டுப்படல் வேண்டும்.
5. நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமை வாய்ந்தவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
6. சங்கத்திற்குச் சொந்தமான எந்தவொரு விடுமுறை விடுதி.்.ஓய்வு மண்டபத்தில் சேவையாற்றவதற்கு கட்டுப்படல் வேண்டும்.
7. தமது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பிறப்புச் சான்றிதழின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி சகிதமான விண்ணப்பப் படிவத்தை 2024-05-18ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**பொதுச் செயலாளர்.**
**வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு, சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**294, காலி வீதி, கொழும்பு-03.**
**தொலைபேசி இல. 011 2370717 தொலைநகல் இல. 011 2577475**

## மாவட்டச் செயலகம் கம்பஹா

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### கம்பஹா மாவட்டச் செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களின் பாதுகாப்புச் சேவைகளுக்கான பெறுகை

**ஒப்பந்த இல. GAM/DIST/4/18/12**

01. மாவட்டச் செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாவட்டச் செயலக அலுவலகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
02. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்டச் செயலகம், 03ஆம் மாடி, கணக்கிடல் பிரிவு, கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதே முகவரியில் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

    ஒப்பந்த இல. தொலைபேசி/தொலைநகல்: 033-2222979
04. ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபா (5000.00 ரூபா) கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-05-03ஆம் திகதி முதல் 2024-05-27ஆம் திகதி வரையில் கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்டச் செயலகம், 03ஆம் மாடி, கணக்கிடல் பிரிவு, கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
05. பூர்த்தி செய்யப்பட்ட ‘‘மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி’’ என இரு நகல்களிலான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, 3ஆம் மாடி, (கணக்கிடல் பிரிவு), மாவட்டச் செயலகம், லக்சியனே மந்திரய, கம்பஹா எனும் முகவரிக்கு 2024-05-28ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறிய முகவரியில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் அவை உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. விலைமனுதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை) அல்லது விலைமனுக்களை பெற்றுக்கொள்வதற்காக நீடிக்கப்பட்ட எந்தவொரு காலம் வரை செல்லுபடியாதல் வேண்டும்.
07. சகல விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 110,000.00 ரூபா மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பொன்றை அல்லது 55,000.00 ரூபாவை மாவட்டச் செயலக காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுக்களின் மூலப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்டச் செயலகம், 03ஆம் மாடி, மாவட்டச் செயலாளரின் கூட்ட அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், லக்சியனே மந்திரய, கம்பஹா.**
**2024-05-03.**







Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

CSIAP

THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்**

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் - வேலை பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, தென் மாகாண - கீழ்நிலை செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) மற்றும் செல்லுபடித் திகதி |
|---|---|---|---|---|
| லொட் 1 | LK-MOA-415199-CW-RFB-SP | தென் மாகாணம் - CSIAP விவசாய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடகந்தர கிராம சேவையாளர் பிரிவு பகவ அடுக்கையில் தெபரவெவயிலிருந்து பந்துவெவ வரையில் (லொட் 1) 6.3 கி.மீ. விவசாய வீதியை மேம்படுத்துதல் | 20,000.00 | ரூபா 336,000.00 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |
| லொட் 2 | | தென் மாகாணம் - CSIAP விவசாய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடகந்தர கிராம சேவையாளர் பிரிவு பகவ அடுக்கையில் கருவல வங்குவ (லொட் 2) 0.33 கி.மீ. விவசாய வீதியை மீளமைத்தல் | 4,000.00 | ரூபா 37,000.00 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |
| 1 | LK-MOA-408680-GO-RFB-SP | கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு 17 எண்ணிக்கையான பொலி சுரங்கங்களின் (Poly Tunnels) பெறுகை | 15,000.00 | ரூபா 150,000.00 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை செல்லுபடியாகும் |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஹம்பாந்தோட்டை, நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (தென் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 047-2256304/047-2256305 தொலைநகல்: 047-2256303 மற்றும் அதே இடத்தில் 2024 மே 03ஆம் திகதி 2024 மே 22ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) மே 03ஆம் திகதி 2024 மே 22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
6. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 மே 20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைமனு ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்பு, ITB மற்றும் ஒப்பந்த தரவுகளை நன்கு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 மே 27ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழு, தென் மாகாணம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் மாடி, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2024 மே 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
11. தென் மாகாண சிறிய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். சிறிய பெறுகைக் குழு தனது விருப்பத்தின் பேரில் ஒன்றை, ஏதேனும் அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழு - தென் மாகாணம்,**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**மாவட்டச் செயலகம், நிர்வாகக் கட்டிடத்தொகுதி, 3ஆம் தளம்,**
**ஹம்பாந்தோட்டை.**
**2024-05-03ஆம் திகதி.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மாகாண சுகாதார சேவைகள் பணியகம் - சப்ரகமுவ

### சப்ரகமுவ மாகாண வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் செயற்பட வைத்தல்

கீழே குறிப்பிட்டுள்ள உருப்படிகளின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பாக சப்ரகமுவ மாகாண,மாகாண சுகாதார சேவைகள் பணியக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். விலைமனுக்களின் பெறுகையானது 2024 மே 28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும்.

| இல. | அம்சம் | எண்ணிக்கை | ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப்பிணை பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01 | Ultra sound Scanner (VOG) | 02 | 5000.00 (ஒவ்வொரு அம்சத்திற்குமானது) | 360,000.00 |
| 02 | Double Phototherapy Machine | 04 | | 130,000.00 |
| 03 | Endoscopic System | 01 | | 720,000.00 |
| 04 | OCT Machine | 01 | | 360,000.00 |
| 05 | Portable Phaco Machine (Basic) | 01 | | 265,000.00 |

1. விலைமனுதாரர் உரித்தான இயந்திரங்களுக்கான சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற வழங்குனராகவிருத்தல் வேண்டும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலமாக நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் தகவலை இரத்தினபுரி,தர்மபால மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் பணியகம்,மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரிடமிருந்து 2024 மே 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 045-2222322/045-2222277).

    பணிப்பாளர்,
    மாகாண சுகாதார சேவைகள் பணியகம்,
    இல. 75,தர்மபால மாவத்தை,
    இரத்தினபுரி.
4. தகைமைகள் மற்றும் தேவைப்படுத்தல்கள்:
    அ. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுபெற்றவொரு கம்பனியாகவிருத்தல்.
    ஆ. 2024 மே 03 ஆம் திகதிக்கு முன்னராக உரித்தான இயந்திரங்களின விற்பனைகளில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம்.
    - விலைமனுக்கோரல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
5. 2024 மே 03 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வகையில் 2024 மே 27 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து (3 ஆம் பந்தியில்) ஒவ்வொரு அம்சத்திற்கும் 5000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக (மேலே குறிப்பிட்டுள்ளவாறு) செலுத்திய பின்னர், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் சப்ரகமுவ, சுகாதார சேவைகள் மாகாண பணியக பணிப்பாளரின் பெயரில் இருத்தல் வேண்டும்.
6. மேலேயுள்ள 03 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2024 மே 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஆவணத்தை கையேற்றுக் கொண்ட சாரார்களுடன் மேலேயுள்ள முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறித்துரைக்கப்பட்டு 2024 மே 28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுவை சமர்ப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலையங்கமானது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
9. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு: தலைவர்,திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணியக அலுவலகம்,**
**இல. 75, தர்மபால மாவத்தை,**
**இரத்தினபுரி.**
**03.05.2024.**

The Housewives' companion
Classifieds on
Daily News